
தேவியின்
பெண்மணி
அக்டோபர்-2000
ரூ.10/-
நவராத்திரி சிறப்பிதழ்
ராஜசியாமளா
கண்ணீர்மூச்சி ஏனடா?
(முழு நாவல்)
நாட்டியக்கலை வளர்க்கும்
ஊர்மிளா

அத்தியாயம் – 1

கண்ணா மூச்சி ஏனடா?

கடவுள் என்ற அதிசய சகலகலா வல்லவன் தன் அன்றைய பொழுதை ஒவியனாய் தூரிகை பிடித்துத் துவங்கி விட்டான். முதல் வேலையாய் கருவானத்தின் வண்ணம் மாற்றும் முயற்சியாய், சிவப்பு, இளஞ்சிவப்பு, மஞ்சள் என்ற வண்ணக் கலவையைத் தீட்டிக் கொண்டு வந்தான். நடுவே சிவப்புப் பந்தாய், நெருப்புப் பிழம்பாய் சூரியனை நகர விட்டான். மெல்லிய ஒளியில் உலகப் பொருட்கள் மெல்ல கருமை நிறத்திலிருந்து மாறத் துவங்கின. என்ன அற்புதக் காட்சி!

மாதங்கி மெல்லக் கண்திறந்தாள். ஜன்னல் வழியே முதல் காட்சியாய் பரந்து விரிந்த வானம் கண்ணில் பட்டது. விரிந்த வானம் என்றுமே அவளின் ரசனைக்குரிய விஷயங்களில் ஒன்று.

'வானம் எனக்கொரு போதி மரம்
நாளும் எனக்கது சேதி தரும்'

என்ற வைர வரிகள் அவளுக்கு உடன்பாடானவை. வானம் தான் நமக்கு எத்தனை விஷயங்களை போதிக்கின்றன! விரிந்த வானம் போல் பரந்த மனம் தேவை. எத்தனை பேர்களுக்கு இருக்கிறது?

வானம் என்ற வெற்று வெளியில் கண்டைக்காயாய் இந்த பூமி. இதில் குந்தூசியாய் மனித ஜீவன்கள். பரந்த ஆகாயத்தின் முன் நாமெல்லாம் தூசு என்பது புரிகிறதா இந்த மனித ஜீவன்களுக்கு? 'நான்,' 'நான்' என்று ஆட்டம் போட்டு, ஆஸ்தி சேர்த்து, அந்தியில் அற்பமாய் மடிகிறார்கள்!

இன்றைய ,போதி மரத்தின் சேதியா? சிரித்தபடி எழுந்தான் மாதங்கி. போர்வையை மடித்துக் கட்டிலின் மேல் போட்டாள். படுக்கையை சரி செய்து விட்டு பல் தேய்க்கப் போனாள்.

ஹாலில் டி.கே.பட்டம்மாள் கேசட்டில் பாடிக் கொண்டிருந்தார். அது அந்த வீட்டின் வழக்கம். காலை ஐந்து மணிக்கு எம்.எஸ்., எம்.எல்.வி., ஜேசுதாஸ், பாலமுரளி என்று பாட ஆரம்பித்து விடுவார்கள். குளித்து முடித்து அம்மா கலாவதி வீடு முழுவதும் சாம்பிராணி போட்டு, சுவாமி முன் கோலமிட்டு விளக்கேற்றுவார். வீடே தெய்வீகமாய்த்

நிகழும். பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஸ்லோகம் சொல்லி, பாலை தைவேத்தியம் செய்த பின் தான், கலாவதிக்கு அன்றைய வேலையே ஒடும்.

மாதங்கியோ அம்மா வழியில் போக மாட்டாள். அவளுக்கும் தெய்வ பக்தி உண்டு. ஆனால், அம்மா அளவு நீவிரம் இடையாது. அவளைப் பொறுத்தவரை மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. அம்மாவும் மகளும் கருத்து வேறுபட்டு செல்லமாய் முட்டிக் கொள்ளும் முக்கிய விஷயம் இது. பல்தேய்த்து வந்தவள், நிரித்த படி கலாமி அறையைக் கடந்து தோட்டத்துப் பக்கம் நகர்ந்தாள். மகளை கவனித்த கலாவதி, ''மதும்மா, சீக்கிரமா செடிகெல்லாம் தண்ணி ஊத்திட்டு வந்து காபி குடும்மா'' என்று குரல் கொடுத்தார்.

மாதங்கியின் பாட்டி குரல் கேட்டு எட்டிப் பார்த்தார். மகளின் வீட்டில் ஒரு வாரம் தங்கிப் போக வந்திருந்தார். பாசம் நிறைந்த அந்த வயதான ஜீவனால், பேத்தி காபி கூட குடிக்காமல் தோட்டத்துப்பக்கம் போவதை ஏற்க முடியவில்லை.

''காபியை கொடு கலா. குழந்தை குடிச்சட்டு செடிக்கு தண்ணி ஊத்தட்டும்'' என்றார்.

மாதங்கி பாட்டியின் அருகே வந்தாள். கருக்கம் விழுந்த அந்த சன்னக் கைகளை நீலிய படி, ''வந்துடறேன் பாட்டி. பாவம் செடியெல்லாம். அதெல்லாம் பலியோட இருக்க, நம்ம பலியா பாட்டி முக்கியம்?''

''நல்ல பொண்ணுடி. நிதானமா தண்ணி ஊத்தினா என்ன?''

''எனக்கு காலேஜுக்கு டயமாயிடும். தண்ணி ஊத்திட்டு இதோ வந்துடறேன்'' சிட்டாய் ஒடும் பேத்தியை அதிசயமாய் பார்த்த படி நின்றார் பாட்டி. ''அப்ப தோட்டக்காரன் எதுக்கு, தண்டம்?''

''தோட்டக்காரன் இருந்தாலும், தானே தோட்டத்தை பராமரிச்சா தான் ஒரு நிருப்தி. செடிகெல்லாம் தண்ணி ஊத்தாம பச்சை தண்ணி பல்லுல பட விடமாட்டாம்மா உன் பேத்தி. நீ வந்து காபி குடி. அவ இப்ப வந்துடுவா'' கலாவதி தன் அம்மாவை உள்ளே அழைத்துப் போனார்.

மாதங்கி தோட்டத்தின் மத்தியில் போய் நின்று மூச்சை உள்ளிழுத்தாள். பூக்களின் வாசத்தோடு சுத்தமான சுகந்த காற்று உடலுக்கு புத்துணர்வு தந்தது.

இப்போது எம்.எல்.வி.யின் நிருப்பாலை வரிகள் காற்றில் கலந்து வந்தது-

''கே கே என்றும் எங்கும் ஆளைச் சாத்தன் கலந்து பேனை பேக்க- அரவம் கேட்டிலையோ?...'' வரிகளுக்கு ஏற்ப, பறவைகள் கீச்க கீச்சென்று குரல் கொடுத்து சடசடவென்று நிகடித்து பறப்பதும் இளைகளில் அமர்வதுமாக இருந்தன. கையில் கொண்டு வந்திருந்த தானியங்களை ஒரு சின்ன பிளாஸ்டிக் தட்டில் வைத்து தோட்டத்தின் ஒரு மூலையில் பறவைகளுக்காக வைத்தாள். குழாயில் ஹோஸ் பைப்பை நுழைத்து தண்ணீரைத் நிறந்து விட்டாள். சில்லென்ற நீர்ப்பூக்களை செடிப் பூக்கள் நிதாரத வண்ணம் மெல்ல வார்க்கத் துவங்கினாள்.

ஒவ்வொரு செடியும் சீரியல் பல்ப் தாங்கிய மரச் சட்டங்களாய் பூக்களைப் பெருமையாய்த் தலையில் தாங்கி நின்றன. கரிய வானில் மின்னும் நட்சத்திரங்களாய் பனீரிடும் மல்லி மொட்டுக்கள், வெல்வெட்டை வெட்டிச் செய்தது போல் பனியில் தோய்ந்து நிற்கும் செம்பருத்திப் பூக்கள், சரம் சரமாய் தொடுத்தது போல் இளம் பச்சை இலைகளுக்கு ஜாடை தொங்கும் மஞ்சள் கொன்றைப் பூக்கள், வேலை மெனக்கெட்டு யாரோ சீரோய் வெட்டி ஒட்டியது போல் சாமந்தி, பூக்களுக்கெல்லாம் நானே ராஜா என்பது போல் மலர்ந்து சிரிக்கும் ரோஜா வகைகள்... சந்தன முல்லை, இருவாட்சி, பன்னீர்ப் பூக்கள், பவழ மல்லி இப்படி வாசத்தால் நிறங்கடிக்கும் பூக்கள்...என்று தோட்டத்தில் எத்தனை எத்தனை பூ வகைகள். ஒவ்வொன்றோடும் மாதங்கி 'ஹலோ' சொல்லி ஒரிரு வார்த்தைகள் பேசுவாள். ஏதோ குழந்தைகளைக் கொஞ்சுவது போல்-

''உனக்கு தண்ணி போதுமா?''

''அச்சச்சோ... உன்னை பூச்சி கடிக்குது போலிருக்கே. தனியா கவனிக்கணுமே''

''உனக்கு போஷாக்கு போதலைப்பா. இரு நல்ல உரம் வாங்கிப் போடறேன்'' என்று பேசுவாள். சொன்னது போல் சனி ஞாயிறுகளில் அதிக நேரம் செலவழித்து உரம் போடுவது, பூச்சி மருந்தடிப்பது என்று மறக்காமல் செய்வாள். இவள் கவனிப்பால் தோட்டம் செழித்தது என்னவோ உண்மை. ஆனால், யாரும் ஒரு பூ பறித்து விட முடியாது.

''எப்படி பூக்களைப் பறிக்கத் தோணும். ஐயோ, என்னால அப்படி, ஒரு விஷயத்தை நினைச்சுக் கூட பார்க்க முடியாதுப்பா. ஏதோ பிஞ்சுக் குழந்தையின் குட்டி விரலை ஒவ்வொன்னா ஒடிக்கறா மாதிரி இருக்கும் பூ பறிக்கறது. ப்சூ...'' என்று தோள்களைக் குலுக்குவாள்.

அம்மா கலாவதி எத்தனையோ முறை வாதிட்டுப் பார்த்துவிட்டார்... ''அடி, மல்லி முல்லைனு பறிக்க தலைக்கு வச்சுக்க வேணாம்டி. ரெண்டு பூ சாமிக்காக பறிச்சுக்க விடேன். வீட்டைச் சுத்தித் தோட்டமும், தோட்டம் நிறைய பூக்களும் வச்சுக்கிட்டு யாராவது வெளியே பூ வாங்கினா சிரிப்பாங்க.''

''அம்மா, கடவுளோட அருமையான படைப்புல ஒண்ணு பூக்கள். வெடிகளுக்கும் உயிர் உண்டு. செடியை வதைக்க பூவைப் பறிக்க தன்னை வழிபட்டார்தான் உன்னைக் காப்பாத்துவேன்னு கடவுள் சொன்னாரா?''

''குதர்க்கம் பேசாதேம. அப்பன்னா நீ சாப்பிடற அரிசி, கோதுமையிலிருந்து காய்கறி வரை எல்லாமே செடி வகை தான். பறிக்காம, சாப்பிடாம இருக்க முடியுமா?''

''உயிர் வாழ தேவையானதை மட்டும் மனுஷன் எடுத்துக்கலாம்மா. சோறு இல்லாட்டி செத்துடுவோம். ஆனா, பூ இல்லாட்டி வாழ முடியாதா? தேவைக்கு அதிகமா எந்த விஷயத்திலும் மனுஷன் ஆசைப்படக் கூடாது. 'வாடிய பயிரைக் கண்ட' போதெல்லாம் வாடினேன்'னு பாடின வள்ளலார் பிறந்த பூமிம்மா இது.''

''உன்னைத் திருத்தவே முடியாதும்மா'' என்று கலாவதி வெளியே மகளைக் கடிந்து கொண்டாலும், உள்ளூர மகளின் மேல் பாசமும், பாசத்தை விட மதிப்பும் அதிகம் உண்டு.

மகள் ஒரு எளிமை விரும்பி. வீட்டில் கார் இருந்தாலும், கல்லூரிக்கு பஸ்ஸில் தான் போய் வருவாள். அதிக நகையோ உடைகளோ அவள் விரும்பி அணிய மாட்டாள். வீட்டில் பிறந்த நாள், விசேஷநாள்களில் கூட கேக் வெட்டி கொண்டாடுவதை விட, அனாதை ஆசிரமங் களுக்குப் பணம் கொடுத்து அவர்களோடு கொண்டாடுவதைத் தான் விரும்புவாள். அடுத்தவருக்கு ஒரு சின்ன துன்பம் என்றாலும் துடித்துப் போய் விடுவாள். கல்லூரி விடுமுறை நாட்களில் கூட, அருகில் உள்ள சேரிக்கு சில தோழிகளோடு போய் விடுவாள். பெண்களுக்கு கைத் தொழில், குழந்தைகளுக்கு படிப்பு, அடிப்படை சுகாதாரம் என்று கற்றுத் தருவாள். ஊதுபத்தி செய்வது, மெழுகுவர்த்தி செய்வது என்று பயின்ற பெண்கள் கூட்டாய்ச் சேர்ந்து தொழில் துவங்க, இவளே முன்நின்று உதவி இருக்கிறாள்.

இன்றும் இவள் தெருவில் போனால் எதிர்ப்படும் பெண்கள் சிலர் இவளைப் பார்த்து கும்பிட்டு கைகட்டி பேசுவதுண்டு. அவர்கள் செயலிலும் சொல்லிலும் தெரியும் மரியாதை கண்டு கலாவதியே அதிசயித்துப் போயிருக்கிறார். சேரிக் குழந்தைகளுக்கு உடல் நலம் சரி இல்லை என்றால், சமயத்தில் இவர்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு ஓடி வருவார்கள். கால நேரம் பார்க்காமல், அவர்களைக் காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு ஓடுவாள் மாதங்கி.

பாச மகளின் சேவை மனம் பூரிப்பை ஒருபக்கம் கொடுத்தாலும், மறுபக்கம் சின்ன கலக்கமும் எழுவதுண்டு. கணவனிடம் தான் அடிக்கடி புலம்புவாள்.

''ஏங்க, இவ இப்படி இருக்காளே. புகுந்த வீட்ல எப்படிங்க போய் குப்பை கொட்டப் போறா?''

''ஏன் கலா? என் பொண்ணு ஒண்ணும் தப்பு பண்ணலையே. நீ இப்படி கவலைப்பட அடுத்தவங்களுக்கு உதவி செய்யறது தப்பா?'' ராஜசேகர் அசராமல் பதில் சொல்வார்.

''தப்பில்லைங்க. ஆனா, கால நேரம் பார்த்து உதவறும் இல்லையா? 'பாத்திரம் அறிஞ்ச பிச்சை இடு'ங்ற ஒரு வசனமே இருக்குது சொன்னா, என்ன சொல்றா தெரியுமா?''

''என்ன சொல்றா?''

''நீ அர்த்தம் சரியா புரிஞ்சுக்கலைம்மா. பிச்சைக்காரன்ல தராதரம் பார்க்க என்ன இருக்கு? அவன் கொண்டு வரும் பாத்திரம் சுத்தமானதா இல்லையாங்ற அறிஞ்ச பிச்சை போடு. அவனும் மனுஷன் தானேனு சொல்றா.''

அவர் விழுந்து விழுந்து சிரிக்க, கலாவதிக்கு பொசுக் என்றாகி விடும். சற்றே கோபம் 'கர்' என்று வர,

''நிங்கட்டிழமை ஒரு இளையண்டுக்கு அவசரமா பணம் கொடுக்கணும்னு, சனிக்கிழமை பேங்குல பணம் போடச் சொன்னீங்க. நினைவிருக்கா?''

''ம், இருக்கு.''

''இவ பணத்தை பேங்குல கட்டிடறேன்னு போனா. போற வழியில, கிரிக்கெட் ஆடின பசங்க யாரோ சண்டை போட்டு மண்டையை உடைச்சிட்டு இருந்திருக்கு. இவ, நமக்கேன் போறதுனு விடாம, அடிபட்ட பையனை ஆஸ்பத்திரி கூட்டிப் போய் கட்டெல்லாம் போட்டு, நிரும்ப அவன் வீட்டுல விட்டுட்டு...''

''நல்ல காரியம் தானே?''

''ம், நல்ல காரியம் தான்... முழுசா கேளுங்க. நிரும்ப பேங்க் போகும் போது க்ளோசிங் டயமாயிடுச்சு''

''ம், அப்புறம்?''

''நிங்கட்டிழமை வாம்மானுட்டாங்களாம்.''

''அட, ஆனா...''

''கேளுங்க. அந்த பேங்குல வேலை செய்யற ஒரு பொண்ணுக்கு ஒரு சமயம் டெலிவரி டயத்துல இவ' உதவி செஞ்சிருக்காளாம். கடைசியில, அந்தப் பொண்ணு இவ தலிப்பைப் பார்த்துட்டு 'அட, உனக்கு உதவாட்டி எப்படி'னு கேட்டு பணத்தைப் போட உதவி இருக்கா... போதுமா?''

''எப்படியேர், அவ உதவி செஞ்சது அவளுக்கே பின்னால உதவி இருக்கே''

''அது சரிதாங்க. ஆனா எதோ நல்லவேளை, ஒரு சமயத்துல இப்படி உதவி கிடைச்சிருக்கு. அப்படி உதவி கிடைக்காது போனா, அப்ப இண்டர்வ்யூம் தானே? புருஷன் மாமியார்னு வரும் போது இதையெல்லாம் 'சரி'னு ஏத்துப்பாங்களா?''

''இங்க பாரு கலாம்மா, நீ தேவையே இல்லாம கவலைப் படறியோனு தோனுது. கல்யாணம்னு வந்தா பொறுப்பு தன்னால வந்துடும். இப்ப அவ வயசு, நம்ம வீட்ல இருக்கற செல்லம் எல்லாம் அவளை சுதந்திரமா நடமாட விடுது. கல்லூரி நாட்களில் பெரும்பாலான இளைஞர்களுக்கு உலகத்தையே புரட்டிப் போட்டு புரட்சி பண்ணிடலாம்னு ஒரு உத்வேகம் இருக்கும். வெளிஉலகத்துக்கு வந்து அடிபட்டா தான் கஷ்டம் புரியும். கொஞ்சம் கொஞ்சமாகயதலம் பிடிக்கும். தான், தன் குடும்பம்னு வட்டம் குறுகும். நானே என் கல்லூரி நாட்களில் கம்யூனிசம் பேசினவன். இன்னைக்குப் பாரு, என் பிள்ளைகளுக்காக பணம் சேர்க்கணும்னு சேர்க்கறேன். காரு, பங்களா, வேலையாளுனு சொகுசா வாழறேன். யாரோடும் எதுவும் பகிர்ந்து கொள்றதில்லை. என் மகளாவது நாலு பேருக்கு உதவறாளேனு சந்தோஷமா இருக்கு. அவ குணத்தை மாத்திடாதே.''

மகன் முரளியும்' அப்பா போலவே தங்கையை விட்டுக் கொடுக்காமல் பேச, கலாவதி வாயடைத்துப் போவார். குடும்பத்தை விட பொது நல சேவை முக்கியம் என்று ஓடும் மருமகளை எத்தனை வீடுகளில் ஜீரணிப்பார்கள்? இது புரியாமல்'அப்பாவும் மகனும் இப்படி பேசுகிறார்களே என்ற ஆதங்கம் நீரு பூத்த நெருப்பாக மனதில் எப்போதும் அரிக்கும்.

இப்போதும், சமையல் அறையில் அம்மாவிடம் அதைத் தான் பகிர்ந்து கொண்டிருந்தார் கலாவதி.

''இவ சமூக சேவை செய்யட்டும். வேண்டாம்னு சொல்லலை. ஆனா, குடும்பம் முக்கியம்னு இவளுக்குத் தெரியணுமே... அது தான் என் கவலை. இப்ப பாரு, ஒரு சின்ன விஷயம்... நாள், கிழமைனு சுவாமிக்கு படையல் செய்யணும்னு சொன்னா, சிரிக்கறாம்மா. 'சாமி பேரை சொல்லிக்கிட்டு நாம தான் வகை வகையா சாப்பிடறோம். அதுக்கு பதிலா அண்டா நிறைய சாம்பார் சாதத்தை பிசைஞ்சு எடுத்துப் போய் கோயில் வாசல்ல இருக்கற ஏழை, பிச்சைக்காரங்களுக் கெல்லாம் விநியோகிக்கலாம்'னு சொல்றா. இப்படி அவ மாமியார் வீட்ல போய் பேசினா, இவ நல்ல மனசை புரிஞ்சுப்பாங்களா? எனக்கு சரியா வளர்க்கத் தெரியலைனு தானே சொல்லுவாங்க...''

பாட்டி மென்மையாய் சிரித்துக் கொண்டார். ஒரு வாய் காபியை வாயில் ஊற்றிக் கொண்டு மகளை நிமிர்ந்து பார்த்தார்.

''கவலைபடாதே, கலா. நான் நம்ம மதுகிட்ட பேசறேன்''

கலாவதிக்கு கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது. காபி குடித்து தோட்டத்துப் பக்கம் வந்த பாட்டி, இயற்கையை ரசித்து ஒன்றி நிற்கும் பேத்தியைப் பார்த்து பரவசப்பட்டுப் போனார். இந்த நல்ல பெண்ணை புரிந்து கொள்ளும் ஒரு நல்ல ஜீவன் கணவனாய் வாய்க்க வேண்டுமே என்ற கவலை கலாவதியைப் போலவே மனதில் எழுந்தது.

''மதும்மா''

''பாட்டீ?''

''காலேஜுக்கு நேரமாகலையா?''

''இதோ பாட்டி. கிளம்பிடுவேன்''

''சாயந்திரம் காலேஜுலயிருந்து வந்தவுடன், பக்கத்துப் பின்னையார் கோயிலுக்கு என்னைக் கூட்டிக்கிட்டுப் போறியாடா, செல்லம்?''

''ஓ, தாராளமா''

குழாயை மூடி ஹோல் பைப்பை சுருட்டி மாட்டி விட்டு காலைக் கழுவிக் கொண்டாள். பாட்டியின் அருகே வந்து தோளோடு அணைத்தபடி ''உள்ளே போலாமா?'' என்று பாட்டியை அழைத்துச் சென்றாள், மாதங்கி.

2

பாட்டியும் பேத்தியுமாய் கோயில் பிரகாரத்தில் வந்து அமர்ந்தார்கள். அர்ச்சனைத் தட்டில் இருந்த இரண்டு வாழைப் பழங்களை எடுத்துப் போய் கோயில் மாடுகளிடம் கொடுத்து விட்டு வந்து மீண்டும் பாட்டியின் அருகே அமர்ந்து கொண்டாள்.

''போகலாமா பாட்டி?''

''நடந்த் களைப்பு கொஞ்சம் அசதியா இருக்குடாம்மா.'' சித்த நேரம் உட்கார்ந்து இருந்துட்டுப் போவோமே.''

''ஓ, நோ ப்ராப்ளம்''

பேத்தியை வாஞ்சையாய்த் தடவிக் கொடுத்தார். மாதங்கி பூவாய்ச் சிரித்தாள்.

''நீ என்னிக்கும் இப்படியே சிரிச்சுக்கிட்டே இருக்கணும்டாம்மா.'' பாட்டி மனம் நிறைய வாழ்த்தினார்.

''உன் ஆசீர்வாதத்துல நல்லா இருப்பேன் பாட்டி''

''அடுத்தவங்களுக்கு உதவறவங்க எப்பவுமே நல்லா இருப்பாங்கம்மா. ஆனா, ஒண்ணு மதும்மா...''

''என்ன பாட்டி?''

''அடுத்தவங்களுக்காக பாடுபடறேன் பேர்வழினு நீ உன் வாழ்க்கையை தொலைச்சுடக்கூடாது.''

''அடுத்தவங்களுக்கு உதவி செஞ்சா நம்ம வாழ்க்கை எப்படி பாட்டி பாதிக்கும்?''

''கல்யாணம் நடக்கற வரை சரிடாம்மா. உன் அப்பாம்மா உன்னைப் புரிஞ்ச வச்சிருக்காங்க. ஆனா கல்யாணம் ஆயிட்டா நீ உன்னைக் கொஞ்சம் மாத்திக்கணும்.''

சற்றே மௌனமானாள் மாதங்கி. பின் இதமான குரலில் பாட்டியிடம், ''கல்யாணம் ஆயிட்டா ஒரு பெண் தன் இயல்பை மாத்திக்கணும்னு சொல்லும் நம்ம சமுதாயத்தை என்னால புரிஞ்சுக்க முடியலை பாட்டி. எனக்கு அப்படிப்பட்ட கல்யாணம் அவசியமாவும் தோணலை'' என்றாள்.

பாட்டி பதறிப் போனார்.

''அப்படி சொல்லக்கூடாது மதும்மா. பாதையில முள் இருந்தா, முள்ளை எடுத்து ஓரமாப் போட்டுட்டுப் பயணத்தைத் தொடரணும். சின்ன முள்ளுக்குப் பயந்து போய் பயணத்தையே ரத்து பண்ணினா, அது முட்டாள் தனம்.''

''சரிதான் பாட்டி. ஆனா, தாண்டமுடியாத ஒரு பள்ளம் பாதையில குறுக்கிட்டா? மாற்றுப் பாதை தானே தேடுவோம்?''

''அழகா பேசறே. தெளிவா சிந்திக்கற. உன் பாதையில முள்னோ, பள்ளமோ குறுக்கிடவே வேண்டாம்டா ராஜாத்தி. அது நல்ல பூக்கள் நிறைஞ்ச பாதையாவே இருக்கட்டும்.''

''அப்படி அமைஞ்சா நல்லது. ஆனா, அப்படி இல்லாம முள்னா அமைஞ்சாலும் அதை மலரா மாத்திக்கிற நிறமை நமக்கு வேணும்.''

''அந்தத் நிறமை உன்கிட்ட இருக்கு மதும்மா. ஆனா 'சமூக சேவை, சமூக சேவை'னு நல்ல வாழ்க்கையை நரகமா நீ மாத்திக்கக் கூடாதேனு தான் நாங்க கவலைப்படறோம்.''

''ஒரு பெண் சமூகத்துக்கு நல்லது நினைக்கும் போது, இத்தனை பிரச்சினை முளைக்குதே பாட்டி.''

நீச்சல் வீராங்கனை புலாசவுத்திரி புதிய உலக சாதனை

இந்திய நீச்சல் போட்டிகளில் பல சாதனைகள் புரிந்த நீச்சல் வீராங்கனை புலாசவுத்திரி, இப்போது 30 வயதை நெருங்கிவிட்டாலும் ஒய்வு பெற விரும்பவில்லை. மேலும் மேலும் சாதனை புரியவே விரும்புகிறார்.

இந்த இந்திய வீராங்கனை சமீபத்தில் ஸ்பெயின் நாட்டில் ஜிப்ரால்டர் ஜலசந்தியை 3 மணி 35 நிமிடத்தில் நீந்திக் கடந்து புதிய உலக சாதனை படைத்தார். முந்திய சாதனை 3 மணி 58 நிமிடம் ஆகும்.

இப்போது அவர் நீண்ட தூர நீச்சல் உலக கோப்பை போட்டியில் பங்கு கொள்ள திட்டமிட்டு உள்ளார். இந்திய நீச்சல் கழகம் அவருக்கு அனுமதி தந்தால் இந்த போட்டியில் புலாசவுத்திரி மேலும் சாதனை படைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

''நல்லது பண்ணும் போது பிரச்சினை வரத்தான் செய்யும் மதும்மா. அன்னை தெரசாவெல்லாம் எவ்வளவு பிரச்சினைகளை சந்திச்சிருப்பாங்க.''

''நானும் பேசாம அவங்களை மாதிரியே கல்யாணம் செஞ்சுக்காம இருந்துடறேனே''

''அது நம்ம சமூகத்துல சரியா வராது மது. அதுக்கு பதிலா ஒண்ணு செய்யலாம்.''

''என்ன பாட்டி?''

''உன்னை நல்லா புரிஞ்சுக்கற ஒரு பையனாப் பார்த்து உன்னை மணம் முடிக்கலாம். இன்னும் ஒரு படி மேல போய், உன்னை மாதிரியே சமூக சேவையில் ஈடுபாடு உள்ளவனா பார்த்து கல்யாணம் செய்யலாம்... ஆனா ஒண்ணு, கல்யாணம் மட்டும் வேண்டாம்னு சொல்லிடாதே. அது உங்கம்மா அப்பாவை ரொம்ப பாதிக்கும்.''

மாதங்கி தீவிரமாய் யோசித்தாள்.

''கவலைப்படாதே. கடவுள் உனக்கு மனம் போல் மாங்கல்யத்தை அமைச்சுக் கொடுப்பான்.'' பாட்டி சொல்லி முடிக்கும் போது கோயில் மணி அடித்தது.

பாட்டி சந்தோஷமாய் எழுந்தார். ''கடவுள் ஆமோதிக்கிறார் பார்'' என்றபடி.

கோயிலிலிருந்து இரண்டு தெரு தள்ளி இருந்தது மாதங்கியின் வீடு.

''என் சர்க்கரை வியாதிக்கு நடந்தா நல்லதுனு டாக்டர் சொல்லி இருக்கார். இப்படியே நடந்து போயிடலாம்'' என்று பாட்டி பேத்தியின் கையைப் பிடித்து நடக்கத் துவங்கினார்.

அவர்கள் மெயின் ரோடு வரும் போது தான் அது நடந்தது. கால் ஊனமான பெண் ஒருத்தி ரோட்டைக் கடக்கும் முயற்சியில் ஓரமாய் நிற்க, வேகமாய் வந்த ஸ்கூட்டி ஒன்று அவளை உராய்ந்து சென்றது. அது உராய்ந்த வேகத்தில் தடுமாறி விழப் போனாள் அந்தப் பெண். மாதங்கி ஓடிப் போய் தாங்கிப் பிடித்தாள். ஸ்கூட்டி போன திசையைப் பார்த்து ஆங்கிலத்தில் திட்டினாள். அதற்குள் ஊனமான பெண் தள்ளை சமாளித்துக் கொண்டாள்.

''ஆர் யூ ஆல்ரைட்?'' மாதங்கி அனுசரணையாய் கேட்டாள்.

''நோ ப்ராப்ளம். பை த வே தேங்க்ஸ்'' என்றாள் அந்தப் பெண்.

''ஒண்ணும் அடிபிடி படலையே?'' என்றபடி பாட்டி அருகே வந்தார்.

''இல்லை பாட்டி. அதுக்குள்ள இவங்க என்னை தாங்கிப் பிடிச்சுட்டாங்க'' என்றாள் மாதங்கியை பார்த்தபடி.

''பார்த்துப் போம்மா. துணைக்கு யாரும் வரலியாம்மா?''

''கால் கொஞ்சம் ஊனம். அவ்வளவு தானே. இதுக்கு எதுக்கு வீட்டுத் துணை எல்லாம்? 'முடிஞ்ச வரை பிறருக்கு உதவணும். முடியாட்டி உபத்திரவம் செய்யாமலாவது இருக்கணும்'னு எங்க அண்ணன் அடிக்கடி சொல்வார்.''

''என் பேத்தி கேல் போலிருக்கு உன் அண்ணன்.''

''என்ன பாட்டி?''

''என் பேத்திக்கு சமூக சேவையில் ஈடுபாடு அதிகம் உண்டும்மா.''

மாதங்கியை அதிசயமாய் பார்த்தபடி அந்தப் பெண் ''எங்கண்ணனும் அப்படித்தான். உங்களுக்கு சமூக சேவையில் ஈடுபாடு உண்டுன்னா, எங்கண்ணனைக் கூட தெரிஞ்சிருக்கலாம். பேரு சதிஷ். மெடிக்கல் ரெப்பா வேலை செய்யறார்.''

''ஓ? பேரு கேள்விப்பட்டிருக்கேன். ஆனா பார்த்ததில்லை நேரில். எங்க காலேஜ் என்.எஸ்.எஸ். மாஸ்டர் உங்கண்ணனைப் பத்தி அடிக்கடி சொல்வார். சமீபத்துல புயல்ல பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களுக்கு பழைய துணிமணி, சாமானெல்லாம் கொடுக்கப் போயிருந்தோம். அப்போ, புயல் நேரத்துல தன் உயிரையும் பொருட்படுத்தாம சதிஷ்கறவர் ரொம்ப உதவி செஞ்சார்னு பேசிக்கிட்டாங்க. அது உங்க அண்ணன் தானா?''

''ஆமாம்.''

''சரிதான் என் பேத்திக்கு சளைச்சவர் இல்லை போலிருக்கே உங்கண்ணன்.''

''உங்க பேத்தியும் அப்படித்தானா?''

''அதை ஏன் கேட்கறே போ. இவ குணத்தைப் புரிஞ்சுக்கிட்ட ஒரு நல்ல பையன் மாப்பிள்ளையாகிடக்கணுமேனு இப்பக்கூட அந்த கடவுளை வேண்டிக்கிட்டு வரேன். உங்கண்ணனைப் போலவே சமூக சேவையில் ஈடுபாடு உள்ள நல்லவர் எங்க வீட்டுக்கு மாப்பிள்ளையா வரணும்.'' பாட்டி தன் ஆதங்கத்தை கொட்ட, மாதங்கி நெளிந்தாள்.

அதிக அறிமுகமில்லாத நபரிடம் இதெல்லாம் பேசலாமா. அந்தக்கால மனுஷியான பாட்டிக்கு புரியவில்லையே. இடைபுகுந்து, பாட்டி மனம் கோணாவண்ணம், ''பாட்டி, முதல் சந்திப்புலயே அவங்களை இப்படியெல்லாம் பேசி பயமுறுத்தாதே'' என்றாள் கேலி குரலில்.

''அட, மனசு திறந்து பேசறாங்க. நீங்கஏன் அதை தப்பா எடுத்துக்கறீங்க. பை த வே, என் பேரு சுபா. உங்க பேரு?''

''மாதங்கி''

''விபத்துன்னாலும் நல்ல ஸ்நேகம் கிடைச்சது. மைலாப்பூர்ல மேல மாட வீதியில் தான் வீடு. நேரம் கிடைச்சா கண்டிப்பா வீட்டுக்கு வாங்க'' நம்பர் சொன்னாள்.

''கண்டிப்பா. பத்திரமா பார்த்துப் போங்க''

அவள் கண்களை விட்டு மறையும் வரை பார்த்திருந்து விட்டு பாட்டியும் பேத்தியும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

இரவு.

அசைன்மெண்ட்டை முடித்து விட்டு படுக்கையில் விழுந்தாள் மாதங்கி. ஜன்னல் வழியே நிலா ''ஹலோ'' சொன்னது. வெள்ளியை உருக்கியது போன்ற நிலவொளியின் பின்னணியில் கரிய மேகங்களாய் தென்னங்கீற்று கில்லுவட் எஃபக்டில் அற்புதமாய்த் தெரிந்தது.

மாதங்கி வெளியே பார்த்த படி அன்றைய நிகழ்ச்சிகளை அசை போட்டாள். தான் அன்று செய்த நல்ல விஷயங்களை மனதுக்குள் பட்டியலிட்டாள். நல்ல தினமாய் அமைத்துக் கொடுத்ததற்குக் கடவுளுக்கு நன்றி சொன்னாள். ஆமோதிப்பது போல் இற்று காற்றில் அசைந்தது.

''தேங்க்ஸ்'' என்று அதனிடம் நன்றி கூறி விட்டு கண்களை மூடிக் கொண்டாள். கண்களை மூடிக் கொண்டாலும் உடனே உறக்கம் வர மறுத்தது.

நிருமணம் என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் அத்தனை முக்கியமானதா? அப்படி என்றால், தன்னைப் புரிந்து கொண்டவராய் கணவன் அமைவாரா? 'உங்கண்ணனைப் போலவே சமூக சேவையில் ஈடுபாடு உள்ள நல்லவர் எங்க வீட்டுக்கு மாப்பிள்ளையா வரணும்' பாட்டியின் குரல் மனதில் ஒலித்தது.

சதிஷ் போல் ஒருவர் கணவனாய் கிடைப்பாரா?

சதிஷைப் பற்றி அன்று சேரி மக்கள் புகழ்ந்து பேசியதும் நினைவில் வந்தது. தூக்கம் கண்களை கழற்றியது. தூக்கக் கலக்கத்தில் சதிஷ் என்ற பெயர் அடி மனதில் பதிந்து போனது.

நட்பைக் கூடக் கற்பைப் போல பாவிப்பதாய் ரேடியோவில் ஜேசுதாஸ் பாடிக் கொண்டிருக்கும் 'ஊ' கடையைத் தாண்டி வலது புறம் திரும்பி 'ஆரோக்யா' மருத்துவமனை முன் தன் பைக்கை நிறுத்தினான் சதிஷ். வண்டி ஸ்டாண்டைப் போட்டு சாவியை உருவிக் கொண்டவன், குனிந்து வண்டியின் கண்ணாடியில் பார்த்து தலையை வாரிக் கொண்டான். தன் மெடிக்கல் கிட்டைத் தூக்கிக் கொண்டு மறுகையில் சாவியைச் சுழற்றிய படி மருத்துவமனைக்குள் நுழைந்தான்.

மக்காய் கட்டிய டை, கருக்கம் இல்லாத 'இன்' செய்யப்பட்ட ஷர்ட், ஷாம்பு குளியலில் அலையாய் புரளும் முடி, ஸ்டைலாய் உதட்டின் மேல் அமர்ந்த மீசை என்று பார்க்க கம்பீரமாய் இருந்தான் சதிஷ். எதிர்ப்பட்ட நர்ஸ் அறிமுகச் சிரிப்பை வழங்கினாள்.

''டாக்டர் ஸ்ரீதர் உள்ளே இருக்காரா?''

''ம், இப்பத்தான் ரவுண்ட்ஸ் முடிச்சுட்டு வந்தார்''

அவளிடம் நன்றியை உதிர்த்து விட்டு டாக்டரின் அறைக் கதவில் நாருக்காய் தட்டி உள்ளே சென்றான்.

நிமிர்ந்து இவனைப் பார்த்து சிரித்த ஸ்ரீதர், படித்துக் கொண்டிருந்த மெடிக்கல் புத்தகத்தைக் கீழே வைத்தான்.

''வாங்க! மெடிக்கல் ரெப்ரசென்டேட்டிவ்களை காலை 11 மணி வாக்கில் நான் சந்திக்கிறதில்லையே சார். உங்க நேரம் மதியம் ஒரு மணி...''

ஸ்வாதீனமாய் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த சதிஷ், ஸ்ரீதரை முறைத்தான். பிறகு அழுத்தமான குரலில், ''ரெப்பா உன்னைப் பார்க்க நான் வரலைப்பா'' என்றான்.

''பின்ன? பேஷண்டா வந்திங்கனோ?'' கேலியாய், போலியாய் மரியாதை காட்டிப் பேசினான் ஸ்ரீதர்.

''ஹஹா...உடம்புக்கு ஏதாவது வந்தா, நான் 'நல்ல' டாக்டராப் பார்த்துப் போவேன், டாக்டர் ஸ்ரீதர்''

''யேய், யேய்...பார்த்தியா, என்னையே, காலை வாரறியே''

''பின்ன, நண்பனா உன்னைப் பார்க்க வந்தா, ஏதேதோ பேசறியே''

''சொல்லு என்ன விஷயம்? நேத்து ஈவ்னிங் வீட்டுக்குக் கூட வந்தியாமே? அம்மா சொன்னாங்க''

''ஆமாம்...''

''ஹோட்டல் சோழால 'எய்ட்ஸ்' பத்தி நடந்த ஒரு செமினாருக்குப் போயிருந்தேன்.''

''அம்மா சொன்னாங்க. இப்படியே செமினார், நோயாளிகள், மருத்துவப் பத்திரிகைகளுக்கு ஆராய்ச்சிக் கட்டுரைகள்னு

வாழ்க்கையை ஓட்டிடப் போறியா? அம்மா சொம்பக் கவலைப்படறாங்க''

''ஓஹோ, அம்மா விட்ட தூதா இது?''

''அவங்க கவலையிலும் நியாயம் இருக்கு இல்லையா? இன்னும் எத்தனை நாள் கல்யாணத்தை தள்ளிப்போடப் போறே? சீக்கிரமா ஒரு கல்யாணத்தை பண்ணிக்க வேண்டியது தானே? உனக்கு என்ன குறை? நல்ல படிப்பு, கைநிறைய சம்பளம். சொந்த டில்பெஸ்ரி. பெண் கொடுக்க போட்டி போட மாட்டாங்களா?''

பெருமூச்சு விட்டான் ஸ்ரீதர்.

''இல்லடா. உனக்குத் தான் என்னை பத்தித் தெரியுமே. என் மனசுல ஒரு கற்பனைப் பெண் இருக்கா...அதே மாதிரிப் பெண்ணை நேர்ல பார்க்கும் போது...உடனே கல்யாணம்''

''அது சரி. சினிமாவில் மச்சம் உள்ள பெண்ணைத் தேடி விஜய் அலையறா மாதிரி, என்னடா இது பிடிவாதம்?''

''இல்லடா...எனக்குள்ள ஒரு எதிர்பார்ப்பு. அது...அது...எப்படி சொல்றது?''

''இங்க பாரு, ரெண்டு வருஷமா இந்தப் புலம்பலைக் கேக்கறேன். உன் மனசுல உள்ள பெண்ணை எப்ப நீ பார்க்கறது, எப்ப நீ கல்யாணம் பண்ணிக்கிறது? அம்மாவுக்கும் வயசாகுது இல்லையா. இனிமேலாவது அம்மா பேச்சைக் கேளு. நாளு இடத்துல போய் பெண் பாரு. அதுல ஒருத்தி உன் மனசுல இருக்கற பெண்ணோட ஒத்துப் போகலாம் இல்லையா?''

''இல்லடா போட்டோவிலேயே எனக்குப் பிடிக்காம போயிடுது. நேர்ல போய் பெண் பிடிக்காம போயி, ஏன் பெண்களோட வலியத் தெரிச்சலைக் கொட்டிக்கணும்?...அது சரி, நீ எப்ப கல்யாண சாப்பாடு போடப் போறே?''

மேஜை மேல் இருந்த டேபிள் வெய்ட்டை சுழற்றிக் கொண்டிருந்த சதீஷ், அதை அப்படியே நிறுத்தினான்.

''உனக்குத் தான் தெரியுமேடா. என் தங்கை கல்யாணம் முடிஞ்ச பிறகு தான் என் கல்யாணம்...''

''அட, நம்ம கபாக்குட்டிக்குக் கல்யாணம் பேச வயசாயிடுச்சா சபாஷ்''

பார்வையை திருப்பிக் கொண்டான் சதீஷ். சின்ன விரக்தி இழையோடும் குரலில் சொன்னான், ''நல்ல நிலையில் இன்ன பெண்களுக்கே கல்யாணம் நடக்கிறது கஷ்டம். இவ கால் ஊனம் வேற...''

''ஹேய், கமான்டா. நம்ப கபாவுக்கு நல்ல இடத்துல கல்யாணம் நடக்கும். கவலைப்படாதே...''

''அம்மா கூட பெண் எடுத்துப் பெண் கொடுக்க இடமாப் பார்க்கறாங்க. அவங்க வீட்டுப் பெண்ணை நாம எதுவும் வாங்காம கல்யாணம் செஞ்சிகிட்டா, நம்ம பொண்ணுக்கு வரதட்சணை கொடுத்து செஞ்சுடலாம். அப்கோர்ஸ் வரதட்சணை கொடுக்கிறது வாங்கறது ரெண்டுமே எனக்கு உடன்பாடு இல்லாத விஷயம் தான். என்ன செய்யறது. என் தங்கைக்கு ஒரு நல்ல வாழ்வு கிடைக்கணுமே...''

நண்பனின் சோகம் ஸ்ரீதரையும் வாட்ட சற்றே மௌனம் நிலவியது அங்கே. சதீஷே மீண்டும் தொடர்ந்தான்.

''பணம் காசைக் கொட்டிக் கல்யாணம் செஞ்சாலும் வர்றவன் அவளை நல்லா வச்சுக்கணுமேனு கவலையா இருக்குடா. கால் ஊனமான பெண்ணை துள்புறுத்தி மன ஊனமா ஆக்கிடக் கூடாதே''

''சேச்சே, அப்படியெல்லாம் எதுவும் ஆகாது. அதுவும் பெண் எடுத்துப் பெண் கொடுக்கறதா அம்மா எடுத்த முடிவு நல்ல முடியா தான். அவங்க வீட்டுப் பெண் நம்ம வீட்ல வந்து வாழும் போது, நம்ம வீட்டுப் பெண்ணை அவங்க ஹித்ரவதை செய்யத் துணிவாங்களா?''

''அதுவும் சரிதான். எல்லாம் நல்லபடியா முடிஞ்சு, அவ நல்லா வாழ்ந்தாச் சரி.''

''ஆனா, அதுக்காக உன் வாழ்வை முழுசாப் பணயம் வச்சுடாதேடா. உனக்கு பெண்ணைப் பிடிக்கணும். ஒரு நிர்ப்பந்தத்தின் பேர்ல பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்க முடியுமா?...உனக்கு வர்றவளைப் பத்தி உனக்கு ஒரு கற்பனை, எதிர்பார்ப்பு எதுவும் இடையாதா?''

கண்களை இடுக்கி ஸ்ரீதரைப் பார்த்த சதீஷ் சிரித்துக் கொண்டான்.

''பிச்சைக்காரர்களுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை இடையாது ஸ்ரீதர். எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இடையாது. எப்படிப்பட்ட பெண் மனைவியா வந்தாலும், அவளை சந்தோஷமா வாழ வைப்பேன். எனக்குத் தேவை என் குடும்ப அமைதி.''

தோளை குலுக்கிக் கொண்டான் ஸ்ரீதர், பெருமூச்சோடு.

''சரி விடு, நீ உன் கல்யாணம் பத்தி சீக்கிரமா ஒரு முடிவுக்கு வா, ஸ்ரீதர்''

''சரி''

''நான் சில நண்பர்களோட சேர்ந்து ஒரு நற்பணி மன்றம் நடத்தறேன். தெரியுமில்லையா?''

''ம்''

''நாளை மறுநாள் பெண்கள் கல்லூரி ஒண்ணுல ரத்த தான முகாம் நடத்தலாம்னு இருக்கேன். டாக்டர் சாலமன் தலைமையில். உன்னால கலந்துக்க முடியுமா?''

''இல்லடா. நாளை மறுநாள் எனக்கு ஒரு மேஜர் ஆபரேஷன் இருக்கு.''

''சரி, அதை கவனி. ஆல்த பெஸ்ட்... நான் வரேன்''

அவன் விடைபெற்று, வண்டியைக் கிளப்பி மீண்டும் ஒரு கடையைக் கடக்கும் போது,

'...என் விழியில் நீ இருந்தாய், உன் இடத்தில் நான் இருந்தேன்! நீ இன்றி நான் இல்லை, நான் இன்றி நீ இல்லையே'

என்று அலறிக் கொண்டிருந்தது ரேடியோ!

இந்த வரிகளின் பிரதிபலிப்பு அவன் வாழ்வில் நிகழப் போவதை அவன் அப்போது உணரவில்லை.

ஹிலாரியின் புதிய கூட்டணி

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் மாதம் நடக்க உள்ளது. இந்த தேர்தல் இப்போதே சூடுபிடிக்க தொடங்கியுள்ளது.

இதற்கிடையே அமெரிக்க அதிபர் கிளிண்டனின் மனைவி ஹிலாரி நியூயார்க்கில் இருந்து செனட்டுக்கு போட்டியிடுகிறார்.

இந்த தேர்தலில் அவருக்கு புதிய ஆதரவு கிடைத்து உள்ளது. அவரது அணியில் புதிதாக இடம் பிடித்து உள்ளது வேறு யாரும் அல்ல. சுட்டுக்கொல்லப்பட்ட அமெரிக்க அதிபர் ஜான்கென்னடியின் தம்பி மகன் ராபர்ட் கென்னடி ஜூனியர் ஆவார்.

சுற்றுப்புற சூழல் பாதுகாப்புக்காக பாடுபட்டு வரும் இவர் இப்போது ஹிலாரி வெற்றிக்காக களத்தில் குதித்து இருக்கிறார். இவரது ஆதரவு ஹிலாரிக்கு வெற்றியை பெற்றுத்தருமா? பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்.

4

அந்த நேரத்தில் பேஷண்ட்டுகள் யாரும் இல்லாததால், புதிய லேசர் சிகிச்சை பற்றிய மெடிக்கல் புத்தகத்தை பிரித்துக் கொண்டு உட்கார்ந்தான் ஸ்ரீதர். மனம் என்னவோ அதில் லயிக்கவில்லை. சதீஷோடு பேசியதை மனம் அசைபோட ஆரம்பித்தது.

அவனுக்கு ஏனோ சிரிப்பு வந்தது. எல்லோரும் சொல்வது போல் கற்பனைப் பெண்ணுக்காக தான் நிஜத்தில் ஏங்குவது பைத்தியக்காரத்தனமோ என்று கூடத் தோன்றியது.

அம்மாவுக்கு இரண்டு வாரங்களுக்கு முன் ஹார்ட் அட்டாக் லேசாய் வந்தது முதல், இவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி ரொம்பவே அரிக்க ஆரம்பித்து விட்டாள்.

''ஏண்டா, எங்களுக்கு நீ ஒரே பிள்ளை. காலாகாலத்துல ஒரு கல்யாணம் பண்ணி ஒரு பேரனையோ பேத்தியையோ பெத்துக் கொடுக்கக் கூடாதா?''

ஸ்ரீதர் பிடி கொடுத்துப் பதில் சொல்லமாட்டான்.

''யாரையாவது விரும்பறியாடா? அதையாவது சொல்லேன்''

''இல்லம்மா. ஆனா என் மனசுல எனக்கு வரப்போறவளைப் பத்தி ஒரு எதிர்பார்ப்பு இருக்கு''

"சொல்லு, அவ எப்படி இருக்கணும்?"

"நேரம் காலம் பார்க்காம ஓடற தொழில் என் டாக்டர் தொழில். அதுக்கு ஒரு நிமிஷம் கருக்காத சேவை மனப்பான்மை உள்ளவளா இருக்கணும்."

"சரி, டாக்டர் பெண்ணாவே பார்த்துடலாமா?"

"டாக்டரா இருக்கறும்மது அவளெம் இல்லம்மா. நினம் நினம் நோயாளிகளோட, நோயோட போராடிட்டு வீடு திரும்பும்போது, அவளோட முகம் மலர்ந்த சிரிப்பே எனக்கு மருந்தா இருக்கணும்."

அம்மா நிலகம் குறும்பாய் சிரித்தபடி "ம்... அப்புறம்?" என்றார்.

"போம்மா... உனக்கு என் நிலை சிரிப்பா இருக்கு. எனக்கும் சொல்லத் தெரியலை"

இருபத்தெட்டு வயது டாக்டர் மகன் குழந்தையாய் நெஞ்சில் போவதை கண் குளிரப் பார்த்துக் கொண்டிருப்பாள் நிலகம்.

இத்தனை அன்பான அம்மாவை அனாவஸ்யமாய் காக்க வைக்கிறோமே?

"டாக்டர்" உள்ளே நுழைந்த நர்சின் குரல் அவளைக் கலைத்தது.

"எஸ்"

"வெளியே ஒரு ஆக்ஸிடெண்ட் கேஸ் டாக்டர்"

"ஆக்ஸிடெண்ட்டா? போலீஸ் கேசாயிடும். ஜி.எச். எடுத்துப் போகச் சொல்லுங்க."

"சொன்னா அந்தப் பொண்ணு கேட்க மாட்டேங்குது டாக்டர்" நர்ஸ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே புயலாய் ஒரு இளம் பெண் உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்த்த வேகத்தில் எழுந்து நின்றான் ஸ்ரீதர். அவன் மனதில் உருவகப்படுத்தி இருந்த பெண் உயிரோடு நேரே எழுந்து வந்தது போல் வந்து நின்றாள், அவள். வந்த வேகத்தில் பொரிந்தாள்.

"ஐயம் சாரி டு பார்ஜ் இன், டாக்டர். பட், உயிர் காக்க வேண்டிய நீங்களே, ஒரு உயிர் தவிக்கும் போது முகம் திருப்பிக்கறது சரியா? கோர்ட்டு கேசுக்கு பயந்து ட்ரீட்மெண்ட் தர மறுக்கறீங்களே, இந்த தாமதத்துனால, அந்த உயிர் போயிடுச்சுன்னா உங்களால அதை மீட்டுத் தர முடியுமா?... வந்து அட்டெண்ட் பண்ணுங்க டாக்டர், ப்ளீஸ்..."

நர்ஸ் குறுக்கே புகுந்தாள், "ஏம்மா, டாக்டர் கிட்ட எப்படிப் பேசணும்னு தெரியாதா?"

ஸ்ரீதர் அவளைத் தடுத்து விட்டு, "பேஷண்ட் எங்கே?" என்றான்.

"இதோ..." காரிடரை நோக்கி நடந்தாள்.

அவளைத் தொடர்ந்தபடியே ஸ்ரீதர் கேட்டான், "நீங்க பேஷண்ட்டுக்கு என்ன உறவு?"

அவன் இவளைப் பார்த்து நிறுத்தி, "உறவா? யாருன்னே தெரியாது டாக்டர். காலேஜுக்கு வர்ற வழியில அடிபட்டு கிடந்தாரு. பக்கத்துல இந்த ஹாஸ்பிடல் தான் இருந்தது. ஆட்டோல தூக்கிப் போட்டுக்கிட்டு வந்துட்டேன்."

அவள் அவளை - ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

அவசரமாய், "அதுக்காக நீங்க கவலைப்பட வேண்டாம் டாக்டர். மீகத பிராப்ளம் எது வந்தாலும் நான் பேமெண்ட் பண்ணத் தயார்."

ஸ்ரீதர் சிரித்துக் கொண்டான்.

"பைத வே, உங்க பேரு?"

"மாதங்கி"

மனதில் அந்தப் பெயரைப் பதிந்து கொண்டான்.

"டாக்டர்"

"ஓ, மாதங்கி... ப்ளீஸ் உட்காருங்க. நீங்க அட்மிட் பண்ணின பேஷண்ட் இப்ப பரவாயில்லை. அபாய கட்டத்தை எல்லாம் தாண்டிட்டாரு."

"உங்களுக்குத் தான் ரொம்ப நன்றி சொல்லணும், டாக்டர்"

"நான் என்ன பெரீசா செஞ்சுட்டேன்? நீங்க தான் யாரோ முகம் தெரியாத ஒருத்தருக்காகப் போராடி ட்ரீட்மெண்ட் கொடுக்க வச்சீங்க. ரத்தத்துக்காக எக்மோர் போய் ரத்தம் வாங்கி வந்தீங்க. பேஷண்ட்டோட வீட்டுக்கு இன்ஃபார்ம் செஞ்சீங்க..."

"ஓ, டாக்டர்! ரொம்பப் புகழாதீங்க... பேஷண்ட்டோட உறவுக்காரங்க வந்துட்டாங்க. அப்ப நான் இளம்பலாமா? போலீஸ் என்கொய்ரிக்கு பதில் சொல்லிட்டேன். எப்ப கூப்பிட்டாலும் போய் என்கொய்ரியை அட்டெண்ட் பண்ணதா சொல்லி இருக்கேன். என் அட்ரஸை உங்க ஸ்டாஃப் நர்ஸ் கிட்ட கொடுத்திருக்கேன். ஏதாவது பிரச்சினைனா கூப்பிடுங்க...மறுபடியும் ரொம்ப தேங்க்ஸ் டாக்டர்"

"யு ஆர் வெல்கம்"

அவள் விலகிய அடுத்த நிமிடம், ஸ்டாஃப் நர்சிடமிருந்து அவள் விலாசத்தை வாங்கி தன் டிஜிட்டல் டைரியில் மறக்காமல் என்டர் செய்து வைத்துக் கொண்டான், ஸ்ரீதர்.



வீடு முழுவதும் கலகலென்று சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது. தடதூரல் ஜன்னலில் மாதங்கி உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். அம்மா கனகதி அகல் விளக்கை தோட்டத்து துளசி மாடத்தில் வைத்து விட்டு வந்து ஹால் விளக்கை போட்டாள்.

"மதும்மா, இந்தக் காபியைக் கொஞ்சம் அண்ணன் கிட்ட கொடுத்துட்டு வாயேன்"

"நானே வந்துட்டேன்மா" என்றபடி முகத்தைத் துடைத்தபடி வந்து தங்கையின் அருகே ஜன்னலில் உட்கார்ந்து கொண்டான் முரளி. உதிர்ந்த நன்னீர் நன்னீரை.

"என்ன, நம்ம வீட்டு மதர் தெரசா, இன்னைக்கு எந்த சமூக சேவையும் செய்யலியா?"

அண்ணன் கேலிக்குப் பொய்யாய் முறைத்த மாதங்கி, "போம்மா, இந்த அண்ணனை" என்று சிணுங்கினாள்.

காபியை மகளிடம் நீட்டிய கனகதி, சோபாவில் உட்கார்ந்து சாய்ந்து கொண்டாள்.

"உங்க அண்ணன், தங்கை விளையாட்டுப் பேச்செல்லாம் அப்புறம். ஒரு முக்கியமான விஷயம் பேசணும் இப்ப"

"சொல்லும்மா" முரளி காபியை உறிஞ்சினான்.

"நேத்து நம்ம மது யாரோ ஒருத்தரை 'ஆரோக்யா' ஆஸ்பத்திரியில சேர்த்துட்டு வந்தா இல்லையா?"

"ஆமாம், ஏதாவது ப்ரச்சினையா? அது போலீஸ் கேஸ் ஆச்சே."

"அதெல்லாம் இல்லடா. அந்த பெரிய ஒனர் டாக்டர் ஸ்ரீதர்னு..."

"ஆமாம்மா, சின்ன வயசுலயே நல்ல நிறமைசாலிஜு பேர் எடுத்தவர். கார்டியாலஜில்ட. ஃபாரின் போய் படிச்சுட்டு வந்தவர்."

"பரவாயில்லையே. அவர்தானதத்தையே சொல்றியே..."

இதற்குள் பொறுமை இழந்த மாதங்கி, "விஷயத்துக்கு வாம்மா" என்றாள்.

"விஷயம் என்ன விஷயம்? அவருக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சாம். வர்ற வெள்ளிக்கிழமை உன்னைப் பெண் பார்க்க வராராம். அம்மாகிட்ட போன் செஞ்ச கேட்டிருக்கார். அப்பாவும் சரி சொல்லி இருக்கார்." அம்மா முகத்தில் பெருமை வழிந்தது.

"வெரிகுட், வெரிகுட்" முரளி ஆர்ப்பரித்தான்.

மாதங்கி பெண்மை இருந்தான்.

"என்ன" மதும்மா முன்னுமே சொல்லாம இருக்கே. உனக்கு விருப்பம் இல்லையா? நீ... வேற யாரையாவது மனசுல நினைச்சிருக்கியா?"

மாதங்கி அம்மாவை திரும்பி பார்த்தான். "அப்படியெல்லாம் இல்லம்மா. ஆனா, இப்பவே கல்யாணம் செஞ்சுக்கறதுல்ல பெரிய முடிவுதானே"

முரளி அவளை செல்லமாக தட்டிக் கொடுத்தான்.

"பெரிய கருமை, எனக்கு வயசு இன்னும் ஆகலையா?"

"மதும்மா, நல்ல இடம் வரும்போது தள்ளிப்போடக் கூடாது. நல்ல சேவை செய்யப் போய் தானே முன்னுந்து கல்யாணம் செஞ்சுக்கறேன்னு சொன்ன. அப்புறம் என்ன?"

"அம்மா, இந்த மெடிகல் என்னெருக்கும் வரும் குழப்பம் தான் இது. கொஞ்சம் அவகாசம் கொடுத்தா நல்லது" முரளி டிவி ரிமோட்டை எடுத்துக் கொண்டு நகர்ந்தான்.

மாதங்கி மௌனமாய் உட்கார்ந்து இருந்தாள். மனசுக்குப் போய் விட்ட பரட்டி அன்று பெரியவை மனதில் ஓடியது.

"டேய், வந்துருடா என்னை அவசரமா வர சொல்லேன்"

சதீஷ் ஸ்ரீதரின் அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

தோட்டத்துப் புல்வெளியில் மகாத்மாய் உட்கார்ந்து தொட் போலீஸ் பாட்டு கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதர், அதை நிறுத்தி விட்டு திரும்பினான்.

"வாடா" என்றவன் உள்ளக்கம் பார்த்து, "அம்மா, சதீஷ் வந்திருக்கான். அவனுக்கும் சேர்த்து டிபன் காபி கொண்டுவா" என்று கத்தினான். பின் சதீஷைப் பார்த்துக் கண் மிட்டியபடி உற்சாகமாய் சொன்னான்.

"டே! நியூஸ்டா, மாப்ள. என் தேவதையை நான் சந்திச்சுட்டேன்"

"வாவ்? வெரிகுட். வெரிகுட். விவரமாச் சொல்லு."

விவரத்தை கருக்கமாய்ச் சொன்னான்

சதீஷிடம்.

"வர்ர வெள்ளிக்கிழமை அவளைப் பெண் பார்க்கப் போறோம்!... தரகர் மூலம் ஏற்பாடு பண்ணிட்டேன்"

"குட்"

"எங்க கூட நீயும் வரே"

"நான் எதுக்குடா?"

"பார்த்தியா, உன்னை என் கூடப் பிறக்காத சகோதரனா நினைச்சுக்கிட்டு இருக்கேன்..."

கையில் டிபன் தட்டுக்களுடன் வந்த ஸ்ரீதரின் அம்மாவும் பிடித்துக் கொண்டாள். "என்னப்பா சதீஷ், உன் வீட்டு விசேஷத்துல நீ பங்கெடுக்க வேண்டாமா? நீயும் ஸ்ரீதரும் எனக்கு ரெண்டு பிள்ளைகள்ளுதானே சொல்லிக்கிட்டு இருக்கேன்..."

"ஆமாம்மா...இருந்தாலும்..."

"நான், அம்மா, தரகர்னு மூனு பேரா போக அம்மா சென்டிமென்டா விரும்பலை. நாளைதா நீ வர்ர. தோ மோரி ஆர்டியுமென்ட்ல்"

"சரிங்க சொல்லுப்பா"

அம்மாவும் பிள்ளையும் மாற்றி மாற்றி வற்புறுத்த சதீஷ் ஒப்புக்கொண்டான்.

"முதல்ல டிபன் சாப்பிடுப்பா. காபி கொண்டு வரேன்."

அம்மாவின் தலை உள்ளே மறைந்ததும், ஸ்ரீதர் குரலை தழைத்துக் கொண்டு கேட்டான். "டேய், நாளைக்கு விமன்ஸ் காலேஜ்ல ரத்த தான முகாம்னு சொன்னியே, எந்த காலேஜ்ல?"

"எத்திராஜ்ல. ஏன்? வரப்போறியா?"

"ப்சூ... வரமுடியாமதான் ஆபரேஷன் ஒண்ணுல கமிட் ஆயிருக்கேனே. அந்தக் காலேஜ்தான்டா அவ படிக்கறா..."

"அப்படிப் போடு. சொறியன் குடுமி சும்மா ஆடாதே."

"முடிஞ்சா அவளை நீ பார்த்துட்டு வரியா கெமிஸ்ட்ரி ஃபைனல் இயர்."

"உன் ஆளை நான் பார்த்து என்னடா செய்யப் போறேன். அதுவும் வெள்ளிக்கிழமை உன்னோட வந்து பார்க்கப் போறேன்."

"வெயிட், என்னைப் பத்தி அவ என்ன நினைக்கறாளு தெரிஞ்சுகிட்டு வரேன்."

"தேவையா எனக்கு? நாமே புகழற இலவல டாக்டர் வேறுமான்னா, காதல் பைத்தியம் பிடிக்க விரித்திரமா நடந்துக்கலாம். ஆளா, எனக்கு என்னடா வந்தது? நண்பன்னா என்னவெல்லாம் செய்ய வேண்டி இருக்கு! வெந்த வெண்ணெய்நேன்"

சதிஷ் போலியால் அலுத்துக் கொள்ள, ஸ்ரீதர் மகமகவென்று சிரித்தான். காதல் தெஞ்சம் உல்லாசத்தில் மிதந்தது. நண்பனின் உற்சாகம் ஸ்ரீதருக்கு சந்தோஷமாய் இருந்தது. வலியும் மனமும் நிறைய விடை பெற்றன.

வண்ணப் பூக்களைத் தூவி விட்டது போல் பெண் பூக்கள் கல்லூரி முழுவதும் நிறைந்திருந்தார்கள். கலகலவென்று பேச்சும் சங்கீதச் சிரிப்பும் காற்றில் இன்னிசையாய் கலந்து வந்து காதில் மோதியது.

ப்ரேயர் ஹாலில் சதிஷ் குழுவினர் கூடி இருந்தார்கள். அவர்கள் முன் ஆயிரக்கணக்கான பெண்கள். மைக் பிடித்து நின்றான் சதிஷ். தெளிவான ஆங்கிலத்தில் அழகாகப் பேசினான்.

"ரத்த தானத்தின் சிறப்பைப் பத்தி மாணவிகளான உங்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவை இல்லை. ரத்தம் கொடுப்பதால் ஒரு நோயாளிக்குப் புத்துயிர் தரீங்க. உங்களுக்கும் ரத்தம் ஊறும். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாத புது விஷயம் இல்லை. மாணவப் பருவம் சேவை செய்ய விரும்பும் பருவம். ஆனால், உங்களில் பலருக்கு எங்கே போய் எப்படி சேவை செய்யலாம்னு தெரியாம இருக்கும். அப்படி மனம் இருந்தும் மார்க்கம் தெரியாம இருக்கும். உங்களைத் தேடி நாங்களே வந்துட்டோம். இன்னைக்கு ரத்த தானம் செய்யவும், கண் தானம் செய்யவும் உங்களுக்கு நல்ல வாய்ப்பு. பயன்படுத்தி, எங்களையும் கௌரவிக்கவும்."

கூட்டம் கலைந்தது. முகாமிற்கு விருப்பப்பட்ட பெண்கள் சாரி சாரியாய் வந்து வகுப்பு வாரியாய் ரத்தம் கொடுத்தார்கள். கண் தானத்திற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்தார்கள். பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தான் சதிஷ். கெமிஸ்ட்ரி வகுப்பு மாணவிகள் உள்ளே நுழைந்த போது தான் சதிஷுக்குப் பொறி தட்டியது. பெயரென்ன? ம்...ம்... மாதங்கி...இங்கே வந்திருப்பாளா? மாணவிகள் பெயரை எழுதி வைக்கும் பதிவேட்டில் வேகமாய் பார்வையை ஓட்டினான்.

'மாதங்கி. III கெமிஸ்ட்ரி' என்று முதல் பெயராய் பதிந்திருந்தது. இருபது முப்பது பெண்கள் தற்போது நடமாடும் அந்த இடத்தில் யார் மாதங்கி என்று எப்படி கண்டு பிடிப்பது? அவன் ஒரு நிமிடம் தயங்கி நின்ற போது தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

'உவ்வே...' என்ற படி ஒரு பெண் வாந்தி எடுக்க முயல, சதிஷ் உடனே செயல்பட்டான். 'சட்டென்று அந்தப் பெண்ணை குழாய் அருகே அழைத்துப்போய், அவள் வாந்தி எடுக்கும் போது அவள் தலை பிடித்து உதவி, தண்ணீர் கொடுத்தான். டாக்டர் சாலமனை அழைத்து வந்து அவளைப் பரிசோதிக்க வைத்தான்.

அவர் பரிசோதித்து விட்டு, "என்னம்மா சரியா சாப்பிடறதில்லையா? இப்படியே போனா வயிறு அல்சரேட் ஆயிடும்" என்றார்.

"பாதி நான் விரதம் அது இதுனு சாப்பிட மாட்டா டாக்டர்" என்றான் அவன் தோழி ஒருத்தி.

"நோ, நோ அது தப்பு. ஒழுங்கா சாப்பிடும்மா. இந்த மாத்திரைகளை போட்டுக்க"

இந்த களேபரங்களில் சில நிமிடங்கள் பறந்து விட, மீண்டும் யார் மாதங்கி என்று அவன் கண்கள் அலைபாய்ந்தன. ஒரு ஜோடிக் கண்கள் அவன் தேடும் பாவையின் பார்வை. அவனையே ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருப்பதை அவன் உணரவில்லை.

வழக்கமாகவே சுத்தமாய் இருக்கும் மாதங்கியின் வீடு, அன்று விசேஷமாய் அலங்கரித்துக் கொண்டு இருந்தது.

மாதங்கி மஞ்சள் நிற செல்ஃப் பார்டர் மின்னி சில்க் கட்டிக் கொண்டு எளிமையாய் ஒப்பனை செய்து கொண்டிருந்தாள். மனதில் அமைதி இல்லை. அலைபாய்ந்து கொண்டிருந்தது.

ஸ்ரீதர் அவளைப் பெண் பார்க்க வரப் போவதாய் சொன்ன போது கூட அவன் அவன் மனதில் பெரிதாய் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தா விட்டாலும், யாரோ ஒருவருக்கு என்றோ ஒரு நாள் கழுத்தை நீட்டித்தானே ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் பெண் பார்க்கும் படலத்திற்கு ஒப்புக் கொண்டிருந்தாள்.

"உன் மனசுல வேற யாரையாவது நினைச்சுக்கிட்டு இருக்கியா மதும்மா?" என்று அம்மா கேட்ட போது கூட அவளால் நிடமாக "இல்லை" என்று சொல்ல முடிந்தது.

ஆனால், இரண்டு நாட்களாய் ரத்த தான முகாமில் பரர்த்த இளைஞன்- அவன் அதிகம் கேள்விப்பட்டிருந்த சதிஷ்- அவளை அதிகம் பாதித்திருந்தான். பார்த்தவுடன் யாருமே ஏற்படுத்தாத ஒரு மின் அதிர்வு. இரண்டு நாட்களாய் நின்றால், நடந்தால் என்று எப்போதும் அவன் நினைவு. அவனைப் பற்றி கேள்விப்பட்டிருந்த காரணமாய் இந்த ஈர்ப்பா? அல்லது இது தான் காதலா? அவனைப் பற்றி அதிகம் தெரியாத போதும் அவனையே மனம் நினைக்கிறதே! அந்த நற்பணி மன்றத்தையே அவன் தான் நடத்துவதாகப் பேசிக் கொண்டார்கள். ஒரு பெண் வாந்தி எடுத்தவுடன் அருவையப்படாமல் உதவிய பாங்கு அவளைப் பெரிதும் கவர்ந்தது. பாட்டி சொன்னது போல் தனக்கு ஏற்ற துணை அவன் தானோ? இன்னும் சற்று நேரத்தில் தன்னைப் பார்க்க வரப்போகும் டாக்டர் ஸ்ரீதருக்கு என்ன பதிலைச் சொல்லப் போகிறாள். ஸ்ரீதரைப் பார்த்தவுடன் ஏற்படாத ஏதோ ஒரு பாதிப்பு, சதிஷைப் பார்த்தவுடன் ஏற்பட்டதே! அப்படியென்றால் ஸ்ரீதரை மறுத்து விடலாமா? அது, அரசனை நம்பி புருஷனைக் கைவிடும் நிலையோ?

மனதின் குழப்பம் முகத்தில் கவலையாய் பிரதிபலிக்க உட்கார்ந்திருந்தாள்.

"மதும்மா, ரெடியாடா?" என்றபடி வந்த கலாவதி, மகளின் முகவாட்டத்தைப் பார்த்து அருகே வந்து, அவள் தலையைக் கோதி விட்டாள். மென்மையான குரலில் வாஞ்சையாய் கேட்டாள், "என்னடா?"

'அம்மா, இப்பக் கேளேன் நீ யாரையாவது நினைச்சுக்கிட்டு இருக்கியானு.' அவள் மனம் அலறியது.

வெளியே எதையும் காட்டிக் கொள்ளாமல், "அம்மா, உடனே சம்மதம் சொல்லிடுவீங்களா?" என்றாள்.

கலாவதி மகளின் அருகே வந்தமர்ந்து கொண்டாள்.

"ஸ்ரீதர் உன்னைப் பார்த்து பிடிச்சுப் போய்த் தான் வரார். நீயும் அவரைப் பார்த்திருக்கே. ரெண்டு வீட்டுப் பெரியவங்க தான் புதுசா சந்திச்சுக்கப் போறோம்... பையனுக்கும் உறவுன்னு சொல்லிக்க வயசான அம்மா மட்டும் தான். பிக்கல் பிடுங்கல் இல்லாத இடம். பையன் பெரிய சர்ஜன். ஃபாரின் ரிட்டர்ன்ட். சொந்த வீடு, கிளினிக், காரு, பங்களானு எதுக்கும் குறையில்லாத வாழ்க்கை... சம்மதம் சொல்ல உனக்கென்ன தடை?"

அம்மாவின் நியாயமான கேள்விக்கு மாதங்கியால் நேரடியாக பதில் சொல்ல முடியவில்லை. 'சதிஷ் என்ற ஊர் பேர் தெரியாதவரை விரும்புகிறேன்' என்றா சொல்வாள்? முதலில் அவர் திருமணம் ஆகாதவர் தானா? அது கூடத் தெரியாதே. அவர் தங்கை கபா கொடுத்த விலாசத்தில் போய் சதிஷை சந்தித்துப் பேசுவோமா? ஒரு பெண் ஆணைத் தேடிப் போய் பேசுவது முறையா?

அவள் மௌனத்தை அம்மா வேறு விதமாக எடுத்துக் கொண்டாள்.

"இங்க பாருடா மது. கல்யாணம்னு பேசினவுடனே பொண்ணுங்க மனசு இது மாதிரி இளம்புரியா பயமெல்லாம் தோணும். சரியாப் போயிடும். கவலைப்படாதே. உன்னை விரும்பி கல்யாணம் செஞ்சுக்க முன்வரும் பையன் உன்னை கண் கலங்காம வச்சுப்பான். சரியா?"

"அம்மா, ப்ளீஸ். உடனே அங்கேயே சம்மதம்னு சொல்லிடாதே. ரெண்டு நாள் டயம் கேளு"

"அதெப்படி, மதும்மா? பொதுவாக பிள்ளை வீட்டுக்காரங்க தான் டயமெல்லாம் எடுத்து பதில் சொல்வாங்க"

இதற்குள் மதுவின் அப்பா ராஜசேகர் உள்ளே நுழைந்தார். "என்னம்மா, ரெடியா? கலா டிபனெல்லாம் தயாரா? ஏன் ரெண்டு பேரும் சீரியசா முகத்தை வச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க?"

அம்மா விஷயத்தைச் சொன்னாள். ராஜசேகர் சற்றே யோசித்தார். பின் நிதானமாய்ச் சொன்னார், "சரி, குலதெய்வத்துக்கிட்ட சம்மதம் கேட்கலும், வீட்டுப் பெரியவங்கிட்ட கலந்து பேசனும்னு ஏதாவது சொல்லி சமாளிப்போம். முதல்ல வர்றவங்களைப் பார்ப்போம். அப்புறம் பேசி முடிவெடுக்கலாம்."

"அப்பா அவங்க எல்லோரும் வந்துட்டாங்க" ஹாலிலிருந்து முரளி குரல் கொடுக்க, அப்பாவும் அம்மாவும் வெளியே வரவேற்க ஓடினார்கள்.

மாதங்கி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். கம்பீரமாய், காரின் முன் கதவைத் திறந்து கொண்டு முதல் ஆளாய் இறங்கினான் சதிஷ்.

அரை நிசப்தமாய் இருந்தது. கொஞ்ச நேரம் ஒருவருமே பேசவில்லை. பின்

அம்மாதான் மெல்ல ஆரம்பித்தாள்.

''என்ன பேசறேனு புரிஞ்சுகிட்டுத்தான் பேசறியா மதும்மா? வசதியான டாக்டர் பையனை, அதுவும் உன்னை விரும்பும் பையனை விட்டுட்டு வசதி குறைஞ்ச மெடிக்கல் ரெப்பை விரும்பறதாச் சொல்றியே. புத்தியோட தான் பேசறியா?''

மாதங்கி புடவைத் தலைப்பை கருட்டிப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவர்கள் வந்துவிட்டுப் போனதற்கு அடையாளமாய் வீடு முழுவதும் பூக்களின் வாசமும், அறையின் பெரும் பகுதியை அடைத்துக் கொண்டு தட்டு தட்டாய் கொண்டு வந்திருந்த சீர் வரிசைகளும் பறைசாற்றின.

ராஜசேகர் அவற்றைப் பார்வையிட்டார்.

''இங்க பாரு. இன்னைக்கே நிச்சயம் பண்ணிடலாம்னு நினைச்க வந்திருப்பாங்க போல இருக்கு. பாரு, காஸ்ட்லியான பட்டுப் புடவை கூட எடுத்து வந்திருக்காங்க. நாம ரெண்டு நாள் டயம் கேட்டவுடனேயே அவங்க எல்லார் முகமும் சின்னதாப் போயிடுச்சு... அப்படிப்பட்டவங்க கிட்டப் போய் எப்படி நான் சம்மதம் இல்லைனு சொல்லுவேன்? அதுவும், 'தம்பி, என் மகளுக்கு உன்னைப் பிடிக்கலை... உன் நண்பனைத் தான் பிடிச்சிருக்கு'னு எப்படி நான் சொல்லுவேன்''

''அதுக்காக மனசுக்குப் பிடிக்காதவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ முடியுமாப்பா?''

''ரெண்டு பேரோடயும் நீ பழகினது இல்லை. இதுல பிடிக்கும் பிடிக்காதுனு சொல்ல என்ன இருக்கு?''

''இதுக்கு விளக்கம் சொல்ல எனக்குத் தெரியலைப்பா. ஆனா, என் மனசுக்கு என்னவோ சதீஷைப் பிடிச்சிருக்கு. பிடிக்காத ஸ்ரீதரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, அவரோட நண்பனான என் மனசுக்குப் பிடிச்ச சதீஷை நினம் சந்திச்சுகிட்டு, ஒரு ரெட்டை வாழ்க்கையை நான் வாழணுமா, சொல்லுங்க?

யோசிச்ச ஒரு முடிவுக்கு வாங்க''

மாதங்கி அங்கிருந்து எழுந்து போனாள்.

அந்த டாக்டரை சந்திக்க காத்திருந்தான் சதீஷ். கும்பல் குறைந்து, அவரைச் சந்திக்க எப்படியும் அரை மணி நேரமாவது ஆகும் என்று தோன்றியது. அதற்குள் ஒரு பெப்ஸி குடித்து விட்டு வரலாம் என்று அவன் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த போது அவனை 'பேஜர்' அழைத்தது.

எடுத்துப் பார்த்தான்.

'காண்டாக்ட் மீ இம்மீடியட்லி- ஸ்ரீதர்' என்றது செய்தி.

பக்கத்து பி.எல்.ஒ.விலிருந்து பேசினான்.

''என்னடா விஷயம்? அம்மாவுக்கு ஏதாவது...?''

''சேச்சே... அதெல்லாம் இல்லடா...ஒரு சின்ன ஹெல்ப்...செய்வியா?''

''சொல்லு''

''நீ போய் மதுவை, அவ காலேஜ்ல மீட் பண்ணணும்''

''ஓ, காட்''

''அலுத்துக்காதடா, ப்ளீஸ்''

''ப்ராக்ஸில காதலெல்லாம் நம்மால முடியாது. வேணும்னா நீ போ''

''சேச்சே, அதுக்கில்லடா. அவங்க வீட்ல சாமிக்கு பூ போட்டு சம்மதம் வாங்கணும்னு ஏதோ சொல்லி டயம் வாங்கிட்டாங்க. ஆனா, அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்கானு எனக்குத் தெரியணுமே. நானே போய் நேர்ல கேட்க ஏதோ போல இருக்கு. ப்ளீஸ்டா. நீ போய் கேட்டுக்கிட்டு வாடா.''

''தலையெழுத்து. சரி, இந்த ஒரு தடவை போறேன். அவ சம்மதம் சொன்ன பிறகு அவபாடு, உன்பாடு. இந்த அனுமன் வேலையெல்லாம் செய்ய மாட்டேன். புரியுதா?''

''சரி, சரி, சரி....நீ மட்டும் நல்ல நியூஸோட வா, உன்னை நான் என் கல்யாணத்துல தனியா கவனிக்கிறேன்''

''பார்க்கலாம்டா. அந்தம்மா சம்மதம் சொல்றதுக்கு முன்னாடியே இந்தப் பாடு. அவங்க கடைக்கண் பார்த்த பிறகு, உனக்கெல்லாம் நான் கண்ணுல தென்படறேனானு முதல்ல பார்க்கறேன்.''

யானையின் தோழி

கேரள மாநிலம் திருச்சூர் அருகே உள்ள கிழுபுளிக்காரா கிராமத்தை சேர்ந்த பெண் விஜயலட்சுமி வயது 12. இவரது தந்தை சமீபத்தில் பீகார் மாநிலத்தில் இருந்து யானை ஒன்று வாங்கி வந்தார். ஒரே மாதம்தான் அந்த பெண் யானை விஜயலட்சுமிக்கு தோழியாகிவிட்டது.

மாலை நேரம் விஜயலட்சுமி பள்ளிக்கூடத்தில் இருந்து திரும்பியதும் யானையை வாக்கிங் அழைத்துச் செல்கிறார். கிராமத்து மக்களுக்கு இது நல்ல பொழுது போக்கு. தினமும் மாலையில் யானையின் வாக்கிங்கை வேடிக்கை பார்க்க தவறுவது இல்லை.

-மைதிலி ராஜகோபாலன், கலைஞர் நகர்.

''ரொம்பத் தான் வாராதேடா''

''சரி, சல்லிங் பேசறேன்''

7

கல்லூரியில் மாதங்கிக்காக சொல்லிவிட்டு காத்திருந்தான் சதீஷ். ரத்த தான முகாமை நல்ல விதமாய் நடத்தி இருந்ததால், அங்கே அவனுக்கு நல்ல மரியாதை இருந்தது.

''உட்காருங்க சார்'' என்று நாற்காலியை இழுத்துப் போட்டார் ஒருவர்.

''இல்ல, பரவாயில்ல: நான் அப்படி மரத்தடியில நிற்கறேன்''

அவனை அதிகம் காக்க வைக்காமல் அவள் வந்துவிட்டாள். ''ஹாய்'' என்றாள். வெள்ளை ஷிபான் கட்டார், அதற்கு ஏற்றாற்போல முத்து நகை செட். தலையை பம்மென்று ஸ்ரசாய் விட்டு, பேண்ட் போட்டு கட்டி இருந்தாள். அதில் அழகாய் அவள் தோள் தொட இறங்கி இருந்தது மல்லிச் சரம்...

'தேவதை போல் தான் இருக்கிறாள். ஸ்ரீதருக்கு ஏற்ற துணை' மனதின் எண்ணம் மந்தகாச புன்னகையாய் விரிந்தது.

''ஹலோ''

''நீங்க...எப்படி என்னைப் பார்த்தீங்க?'' மாதங்கி பரவசப்பட்டுப் போனாள். அவனும் தன்னை விரும்பி சம்மதம் சொல்ல வந்திருப்பானோ?

அவள் மனம் புரியாமல் சதீஷ் நண்பனுக்கு குரலாய் மாறிக் கேட்டான். ''என்னங்க நீங்க பாட்டுக்கு சல்பெண்ல விட்டுட்டீங்க. வீட்ல பெரியவங்க என்ன முடிவெடுக்கப் போறாங்கன்னு தெரியலை. அட்லீஸ்ட் உங்க முடிவைத் தெரிஞ்சுக்கலாம் இல்லையா? ஸ்ரீதருக்கு நான் போய் என்ன பதிலைச் சொல்லட்டும்?''

அவனை நன்றாக நிமிர்ந்து பார்த்தான். இது நான் எதிர்பார்ப்பம். இவளிடம் மனம் நிறைந்து பேசி விட வேண்டும். இவளைப் பார்த்தால் மனம் படபடக்கிறதே. இவள் அருகே நின்றாலே போதும் என்று மனம் குதூகலிக்கிறதே. இந்த சிலிர்ப்பெல்லாம் இல்லாமல் ஸ்ரீதரை மணந்து கொண்டு கடனே என்று வாழ முடியுமா? திருமணம் பற்றியே நினைக்காமல் வாழ்ந்த தன்னை இப்படி ஏங்க வைக்கிறானே, இது நான் போன ஜென்ம பந்தமா?

''என் முடிவை நான் மனம் நிறைந்து உங்கிட்ட சொல்லலாமா?''

''அதுக்குத் தானே வந்திருக்கேன். சம்மதம் சொல்லிடவா?''

''சம்மதம் சொல்லிடலாம். ஆனா...''

''என்ன, ஆனா? வீட்ல சகுனம் கேட்டு சம்மதம் சொல்லனுமேனு கவலைப் படறீங்களா?''

''இல்ல, நீங்க மாப்பிள்ளையா என் பக்கத்துல உட்கார்ந்தா, இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்கறேன்.''

ஒரு சின்ன பூகம்பத்தை அவள் எதிர்பார்த்தாள். அவனோ கடகடவென்று சிரித்தான்.

''நல்லா ஜோக் அடிக்கறீங்க. முறைப்படி என் நண்பனே நேரா வந்து உங்களை சந்திச்சு கேட்டிருக்க வேண்டிய கேள்வி. நான் அவனுக்கு பதிலா கேட்கறேன். அதை நாசூக்கா சொல்லிக் காட்டிட்டீங்க. அவன் கொஞ்சம் சங்கோஜி...''

அவள் அவசரமாய் இடைபுகுந்தாள்.

''இல்ல, நான் சீரியசா சொல்றேன்... என்

மனசுல... நீங்க தான் இருக்கீங்க.''தரை பார்த்து சொன்னவள் மெல்ல நிமிர்ந்தான். அலறுடைய மலர்ந்த முகம் கும்பியது. அவன் எதிர்பாராத திருப்பம் இது.

''விளையாடாதீங்க...'' அவன் முகம் நிருப்பி என்னோ நோக்கினான்.

''இல்ல. முதல் முதலா உங்களை நான் ரத்த தான முகாம்ல சந்திச்ச போதே உங்களை எனக்குப் பிடிச்சுப் போச்சு...''

''புரியாம பேசாதீங்க. என் நண்பன் மனசுல நீங்க இருக்கீங்க.''

''என்ன செய்ய? என் மனசுல நீங்க இருக்கீங்க.''

அவன் கொஞ்சம் கடுப்பானான். ''உங்களுக்கு என்னைப் பத்தி என்ன தெரியும்? என் குடும்பம் பத்தித் தெரியுமா? என்னைப் பத்தித் தெரியுமா? ரெண்டு தடவை சந்திச்சிருப்போமா? அது போதுமா ஒருத்தரை விரும்ப?''

''அப்ப உங்க நண்பர் மட்டும் என்னை பத்தி என்ன தெரியும்னு என்னை விரும்பறார்.''

அவள் பல்லைக் கடித்துக் கொண்டு பெருமூச்சு விட்டான்.

''இங்க பாருங்க. நல்லா பேசறீங்க. கெமிஸ்ட்ரிக்குப் பதிலா நீங்க வக்கீலுக்குப் படிச்சிருக்கலாம்...ஒண்ணு நிஜம். நான் உங்களை விரும்பலே. போதுமா?''

''இப்படிச் சொல்றதனால நான் உங்க நண்பரை கல்யாணம் செஞ்சுப்பேன்னு நினைக்கறீங்களா? நிச்சயம் மாட்டேன்.''

''மாதங்கி, உங்களுக்கு என்னை மாதிரியே அடுத்தவங்களுக்கு உதவி செய்யற குணம் இருக்கு...''

''உங்களோட இந்த குணம் தான் என்னை ரொம்பக் கவர்ந்தது.''

''சரி, நான் என்ன சொல்ல வரேன்...''

''அப்படி ஒருத்தருக்குச் செய்யும் உதவியா நினைச்சு, என் நண்பனை மணந்து கொள்ளுங்களேன்னு சொல்ல வரீங்க. ரைட்?''

அவனை ஆச்சரியமாய் பார்த்து தலை அசைத்தான்.

''ஐயம் சாரி, சதீஷ். உதவி வேற வாழ்க்கை வேற இல்லையா? மனசு விரும்பாத ஒருத்தரை மணந்து கொண்டு வாழ்க்கை பூரா வாழறது கொடுமை இல்லை?''

சட்டென்று பிடித்துக் கொண்டான் சதீஷ். ''மனசு விரும்பாத உங்களை மணந்து கொண்டு நான் மட்டும் எப்படி சந்தோஷமா குடும்பம் நடத்த முடியும்னு நீங்க நினைக்கறீங்க?''

''சிம்பிள். ஏன்னா நீங்க வேற யாரையும் காதலிக்கலை. இல்லையா?''

''அப்படிச் சொன்னேனா?''

''அவசரமா யோசிச்சு யாரையோ விரும்பறதா பொய் சொல்லாதீங்க. ஒரு விஷயம் புரிஞ்சுக்கோங்க. ஏதாவது ஒரு காரணமா நாம கல்யாணம் செஞ்சுக்க முடியாம போனா, நான் இப்படியே கன்னியா இருந்துடுவேனேதவிர வேற ஒருத்தரை மணக்க மாட்டேன்.''

அவள் ஆயாசமாய் கண்களை மூடிக் கொண்டான்.

''அப்படி என்கிட்ட என்ன இருக்கு? ஸ்ரீதர் பணம், புகழ், படிப்பு, அழகுனு எல்லா விதத்திலும் சிறந்தவன். உங்க மேல அவன் உயிரையே வச்சிருக்கான். இது ஏன் உங்களுக்குப் புரியலை?''

''அந்தஸ்து, ஜாதி, மதம் எல்லாம் பார்த்துப் பண்ணறது கல்யாணம். அதெல்லாம் பார்க்காம அன்பு மட்டுமே பிரதானமா பார்த்து மலருவது தான் காதல்.''

''தத்தை ஏதாவது எழுதினீங்கன்னா, இந்த வசனத்தைப் பயன்படுத்திக்கோங்க''

''நேங்கூ''

''பைலா கேட்கறேன். ஸ்ரீதர் கிட்டப் போய் என்ன சொல்லட்டும்?''

''நம்ம கல்யாணத்துக்கு வரச் சொல்லுங்க''

அவள் விருட்டென்று அங்கிருந்து வெளியேறினாள்.

8

வீட்டில் அம்மா சாப்பாடெல்லாம் தயாராய் வைத்திருந்தாள்.

''ஏம்ப்பா லேட்டு?'' என்றவள், அவள் தட்டை எடுத்து வைத்தாள்.

மாதங்கியுடன் பேசியவன், மனம் குழம்பிப் போய் இருந்தான். அதனால் சற்று நேரம் பீச்சில் போய் உட்கார்ந்திருந்தான். அவள் சம்மதம் சொல்வாள், அதை அப்படியே போய் நண்பனிடம் சொல்லிவிட்டு சந்தோஷமாக வீடு திரும்பலாம் என்று நினைத்திருந்தான். ஆனால், மாதங்கியோ கதையையே திருப்பிவிட்டாள். அவள் வேறு யாரையோ விரும்பி இருந்தால் கூட பரவாயில்லை. நண்பனிடம் சொல்லி மனதைத் தேற்றிக் கொள் என்று ஆறுதல் சொல்லி விடலாம். ஆனால் எப்படிப் போய் 'மாதங்கி உன்னை விரும்பவில்லை, என்னை விரும்புறாள்' என்று இப்போது சொல்வது?

நேரம் போவது தெரியாமல், மணலில் படுத்துக் கிடந்தான். எத்தனை யோசித்தும் ஸ்ரீதரிடம் என்ன, எப்படி சொல்வது என்று பிடிபடவில்லை. மறுநாள் மதியம் அவன் அலுவலக விஷயமாய் திருச்சி வரை போக வேண்டி இருந்தது. திரும்ப ஒரு வாரம் ஆகும். மறுநாள் வரை ஸ்ரீதரைத் தவிர்த்து விட்டால் ஒரு வாரம் தப்பி விடலாம்!

இப்படி ஏதேதோ எண்ணி குழம்பிப் போய் வீடு திரும்பியவனால், அம்மாவின் கேள்வியை எதிர் கொண்டு பதில் சொல்ல முடியவில்லை. பேசாமல் போய் முகம் கழுவி வந்து தட்டின் முன் அமர்ந்தான்.

''ஏண்டா முகம் ஒரு மாதிரி இருக்கு?''

''ம், சுபா சாப்டாச்சா அம்மா?''

''சுபாவும் நானும் அப்பவே சாப்டாச்சு. சரி, நீ ஏன் ஒரு மாதிரி இருக்கேன்னு கேட்டா பதில் சொல்ல மாட்டேங்கற. போகட்டும். மெதுவா இஷ்டப்படும் போது சொல்லு... ஸ்ரீதர் வந்திருந்தான்.''

சடாரென்று நிமிர்ந்து பார்த்தான். வாயில் போட்ட கவளம் உள்ளே இறங்க மறுத்தது. தண்ணீரைக் குடித்தான்.

''ஏதாவது சொன்னானா?''

''நீ எப்போ வருவேனு பார்த்துகிட்டே உட்கார்ந்திருந்தான்.''

''ம்''

''அவன் பார்த்துட்டு வந்த பெண்ணைப் பத்திக் கேட்டேன். மூஞ்சி பூரா பெருமை பிடிபடலை போ...''

''ம்...'' கஷ்டப்பட்டு, தொண்டையில் இறங்க மறுத்த உணவை அம்மாவுக்காக முழுங்கி வைத்தான்.

''நீ வந்தவுடனே எத்தனை நாழியானாலும் பரவாயில்லை போன் பண்ணணும்னு சொல்லிட்டுப் போனான். போய் ஒரு போன் பண்ணிட்டுப் படு''

''பார்க்கலாம்''

''என்னடா, என்னவோ மாதிரி பேசறே?''

''அம்மா, மனுஷன் டயர்டா வந்திருக்கேன். கொஞ்சம் தொண தொணக்காதேம்மா ப்ளீஸ். நாளைக்கு போன் பண்ணிக்கறேன்... மோர் வேண்டாம்''

திடுதிடுத்தபடி பாதி சாப்பாட்டில் எழுந்து போகும் மகனை விநோதமாய் பார்த்தாள், காவேரி.

படுக்கையில் போய் விழுந்த சதீஷுக்கு சுத்தமாய் தூக்கம் வரவில்லை.

9

மறுநாள் இரண்டு மூன்று முறை ஸ்ரீதர் இவனுக்கு பேஜர் கொடுத்தும், இவன் தொடர்பு கொள்ளவில்லை. ஆனிறு மணி பன்னிரண்டு. இன்னும் சில மணிநேரத்தில் ஊருக்கு ஓடிவிடலாம் என்று அலுவலக வேலையை முடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். தவறே செய்யாமல் குற்றவாளிகளைப் போல் ஓடி ஒளிய வேண்டி இருக்கிறதே என்ற கலக்கம் வருத்தியது. நண்பனிடமே பதுங்க வேண்டிய நிலை. சே! வேலையை முடித்து நிமிரும் போது, இண்டர்காமில் ரிசப்ஷனிஸ்ட் அழைத்தாள்.

''சதீஷ், உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க.''

''யாரு?''

அதற்குள் அவள் இணைப்பை துண்டித்து விட்டாள்.

யாராய் இருக்கும் என்றபடி போய் நின்றவன் முன் சிரித்த முகமாய் ஸ்ரீதர் நின்றிருந்தான். அந்தச் சிரிப்பே இவன் நெஞ்சில் ஆயிரம் சட்டிகளைப் பாய்ச்சின. ஏதோ நண்பனுக்கு இவனே துரோகம் செய்தது போல் தவித்து நின்றான்.

''என்னடா, என்னை இப்படி தவிக்க விடறியே? ஆமாம், ஏன் ஒரு மாதிரி இருக்கே? உடம்பு சரியில்லையா? நான் கொடுத்த பேஜர் வந்துதா இல்லையா?''

வலுக்கட்டாயமாய் ஒரு சிரிப்பை எடுத்து மாட்டிக் கொண்டான்.

''சுலி, சுலி, ஒவ்வொரு கேள்வியா கேளு. பதில் சொல்றேன். முதல்ல எனக்கு ஒண்ணும் இல்ல. வேலை டென்ஷன் அதான். பேஜர் பேட்டரி போயிருந்தது. அதான் நீ கொடுத்த மெசேஜ் வரல. இப்பத்தான் மாத்தினேன். வேற என்ன?'' சரளமாய் பொய் சொன்னான்.

''முக்கியமான விஷயத்தை விட்டுட்டியே?''

''என்னடா?'' சதீஷ் பயந்த விஷயத்தை ஸ்ரீதர் தொட்டு விட்டான்.

''அவளைப் பார்த்தியா? என்ன சொன்னா?''

தலை குனிந்து சற்றுத் தடுமாறியவன்.

''ம்... இல்லடா. நேத்து வேலை ஜாஸ்தியாப்போக...''

அவன் முகம் வாடியது. இதற்கே

இப்படித்துவருதொனே. உண்மையை எப்படி எதிர்கொள்ளப்போறான்?

"கரி, இப்ப ஐ மீன் இன்று மாலை முடியுமா?"

"நான் இப்ப அபிஷியல் டூர் மெம்பிக்கிட்டு இருக்கேன்டா."

ஆயாசமாய் சோபாவில் சாய்ந்து கொண்டான் ஸ்ரீதர்.

"இப்ப என்னடா செய்ய, ம்?" !

"நான் திரும்பி வர ஒரு வாரம் ஆகும். அதுக்குள்ள அவங்களே நல்ல பதிலாச் சொல்லிடுவாங்கடா. கவலைப்படாதே"

"போடா. அது வரை காத்திருக்க முடியாம தானே உன்னைப் போல் அவளைப் பார்க்க சொன்னேன். இப்படி கழுத்தறுத்துட்டியே. இரு, உன் கல்யாண சமயத்துல உன்னை ஒரு வழி பண்ணறேன்."

சதீஷ் ஒப்புக்குச் சிரித்து வைத்தான்.

"நானே நேரில் போய்ப் பார்த்தால், அந்தப் பொண்ணு அலையறேன்னு நினைப்பாளோ?"

கரத்தில்லாமல் "ம்" என்றான் சதீஷ்.

"சரி, தரகரை அனுப்பி என்னனு கேட்கச் சொல்றேன்"

"எதுக்குடா அவ்வளவு சிப்பா போற நீ? அந்தப் பொண்ணுக்காக நீ ஏன் இப்படி உருகறே? அவ என்ன பெரிய மிஸ்தாவா? அவளை விட அழகான அன்பான எத்தனை பெண்கள் இல்லை?"

அதுவரை அடக்கி வைத்திருந்த அத்தனை டென்ஷனையும் வெளிப்படுத்தி சிரினான் சதீஷ். ஸ்ரீதர் முகம் சிறுத்துப் போயிற்று.

"ஏண்டா இப்படி சொல்றே? அவ ஏதாவது மறுப்பா..."

உண்மையைச் சொல்லி விடலாமா என்று ஒரு நொடி யோசித்த சதீஷ் அடக்கிக் கொண்டான். ஊருக்கு பஸ்ஸைப் பிடிக்கும் முன் மீண்டும் ஒரு முறை அந்த பெண்ணைப் பார்த்து ஸ்ரீதரின் நிலையைச் சொன்னால் என்ன? ஒரு வேளை அவள் மனம் மாறினால், அவள் முன்பு பேசியதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வேண்டாமே...அதெல்லாம் ஸ்ரீதருக்குத் தெரியவே வேண்டாமே!

"அதெல்லாம் இல்லடா. அவளைத் தான் நான் சந்திக்கவே இல்லையே. பெண் பிடிக்கப்போய் நீயா கேட்டிருக்கே முறைப்படி. இப்படி அவங்க ஆளா. இழுத்தடிக்கறாங்களேனு ஒரு ஆங்காத்துல ஏதோ பேசிட்டேன். மனசல வச்சுக்காதேடா."

"சரி, நான் இம்பரேன்டா." மனமும் முகமும் சோர்ந்து போக எழுந்து போகும் நண்பனையே வருத்தமாய் பார்த்தான் சதீஷ். பளீர் பளீர் என்று நான்கு அறை கொடுத்து மாதங்கியைச் சம்மதிக்க வைக்க வேண்டும் போல வெறி இளம்பியது.

சற்று முன்னதாகவே அலுவலகத்தை விட்டுக் கிளம்பிவிட்டான்.

சுமார் கும்மா போய் ஒரு வயசுப் பெண்ணை அவள் கல்லூரியில் சந்திப்பது சதீஷுக்கே அதாகரீகமாய்ப் பட்டது. ஆனாலும், இந்த முறை எப்படியும் அவள் சம்மதத்தை வாங்கி விடுவது என்பதில் நிதிரமாய் இருந்தான்.

வழக்கம் போல் அவளை அதிகம் காக்க வைக்காமல் வந்து சேர்ந்தாள்.

"ஹலோ" என்றாள் முகம் மலர்ந்து.

ஸ்ரீதர்படும் அவஸ்தை, ஊருக்குக் இம்பக வேண்டிய அவசரம் எல்லாமாகச் சேர்ந்து சதீஷ் சற்று படபடப்பாகவே இருந்தான்.

அவளே ஆரம்பித்தாள்.

"மனசு மாறி சம்மதம் சொல்ல வந்திங்களா?"

"நீங்க மனசு மாறி இருக்கிங்களானு தெரிஞ்சுக்க வந்தேன்."

"பெண் மனசு. அப்படி மாறிடும்னு நினைக்கறீங்களா, கலபத்துல?"

"பெண் மனசு இறங்கிடும்னு நினைக்கறேன்."

"காதலை யாசிக்கப் பெற முடியாது."

"அதை நீங்களும் புரிஞ்சுக்கணும்... நண்பனோட காதலியா சந்திச்ச பெண்ணை, தன்னோட மனைவியா எவனாலும் ஏத்துக்க முடியாது."

"உங்க நண்பர் என்னை காதலிச்ச பாவத்துக்கு, எனக்கு தண்டனையா?"

"தண்டனை இல்ல" மாதங்கி. சொர்க்கமயமான வாழ்க்கை. அவன் உங்களை எவ்வளவு நேசிக்கிறான் தெரியுமா...? அவன் கிட்ட உண்மையை சொல்ல முடியாம, உங்களை நான் சந்திக்கவே இல்லைனு பொய் சொன்னேன். அதுக்கே அவன் முகம் வாடிப் போய் சோர்ந்துட்டான். காதலோட இழப்புப் பெரிய மாதங்கி."

"உங்களை நான் இழந்தாலும் இப்படித்தான் பரிதவிப்பேன்னு புரியலையா உங்களுக்கு?"

அவள் எப்படி மடக்கினாலும், அவள் விடுவதாய் இல்லை. "அப்படி நமக்குள்ள எத்தனை காலப் பழக்கம் மாதங்கி. ஜஸ்ட் இன்பாக்சுவேஷன். சரி, அப்படியே என்னை திங்க விரும்பறது உண்மைன்னா, எனக்காக என் நண்பனைக் கல்யாணம் செஞ்சுக்கோங்க, ப்ளீஸ்"

"எப்படி இப்படி பேச முடியுது உங்களால?...சரி, உங்க நட்போட ஆழம் பேசவைக்குது. உங்க இளகின மனசு பேசவைக்குது...ஆனா, கொஞ்சமாவது என்னைப் பத்தி நினைச்சுப் பார்த்திங்களா? மனசல உங்களை கமந்துகிட்டு, அவர் நண்பரால உங்களை அடிக்கடி சந்திச்சுக்கிட்டு அவருக்கே மனைவியா வாழ்ந்தா, அது அவருக்கு செய்யற துரோகம் இல்லையா?"

"அது தான் பிரச்சினையா இந்த ஊரை விட்டே நான் போயிடறேன்."

"ஊரை விட்டுப்போயிடலாம். என் மனசை விட்டுப் போக முடியுமா? ஒரு சந்தர்ப்பம் கொடுங்க. இது இன்பாக்சுவேஷன் இல்லை. உண்மைக் காதல்னு நிரூபிக்கிறேன்"

"இதெல்லாம் அனாவசிய மெனிமா செண்டிமெண்டல் மாதங்கி."

"இதே வரியை உங்க நண்பரிடம் சொல்லி அவர் மனசை மாத்துங்க."

"அப்படின்னா உங்க மனசை மாத்திக்க மாட்டீங்க?"

"ஏங்க இதென்ன அரசியலா கொள்கையை அப்பப்போ மாத்திக்கறா மாதிரி மனசை மாத்திக்க? நான் தான் முன்னாடியே சொல்லிட்டேனே, வாழ்ந்தா உங்க மனைவியா வாழ்வேன். இல்ல, சமூக சேவை அது இதுனு கன்னியாவே வாழ்ந்துடுவேன்."

"அப்ப என் முடிவையும் தெரிஞ்சுக்கங்க. ஒரு போதும் நண்பனின் காதலியை என் மனைவியா ஆக்கிக்க மாட்டேன். வரேன்."

அவள் சிரித்தபடி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

கடிகார அருங்காட்சியகம்

ஜெனிவாவை உலக கடிகாரங்களின் தலைநகரம் என்றே கூறுவர். ஏனெனில் இங்கு கடிகாரங்களுக்கென்றே தனி அருங்காட்சியகம் உள்ளது. இதனை கிளாக் அண்டு வாட்ச் அருங்காட்சியகம் என்று அழைக்கின்றனர். இந்த அருங்காட்சியகம் தொடர்ந்து 30 வருடங்களாக இயங்கி வருகிறது.

உலகத்தில் 16-ம் நூற்றாண்டு முதல் இன்று வரை உருவாக்கப்பட்ட விதியாசமான கடிகாரங்களை இங்கு காணலாம். எனாமல் பெயிண்ட் பூசப்பட்ட கடிகாரம் முதல் உயர்ந்த வேலைப்பாடுடன் கூடிய நவரத்தின கடிகாரங்கள் வரை இங்கு உண்டு.

–ராஜி ராதா.

10

ஆரோக்யா மருத்துவமனைக்கு மாதங்கி போன போது மணி நாலு. ஏற்கெனவே அறிமுகமான நர்ஸ் அறிமுகச் சிரிப்பை சிந்தி வரவேற்றாள்.

"டாக்டர், சாப்பிடப் போயிருக்காரு. காலையில இருந்து ரெண்டு ஆபரேஷன்... ஏதாவது எமர்ஜென்ஸி விஷயமா? ரெஸ்ட் எடுத்துக்கிட்டு சாவிங் தான் பேஷண்ட்ஸ் பார்க்க வருவாரு."

நர்ஸ் விளாவாரியாகச் சொல்ல, மாதங்கி ஒரு நிமிடம் என்ன செய்வது என்று புரியாமல் நின்றாள்.

"டாக்டர் வீடு எங்கே?"

"ஹாஸ்பிடல் பின்னாடியே தான் டாக்டர் வீடு. ஏதாவது எமர்ஜென்ஸி கேஸா மேடம்?"

"கொஞ்சம் டாக்டரோட பேசணும்."

நர்ஸ் யோசித்தாள். விடிகாலையிலும் மதியத்திலுமாக இரண்டு ஆபரேஷன்களை முதர் செய்து முடித்து விட்டு சற்று நேரம் முன் தான் வீட்டிற்குப் போயிருந்தான். மீண்டும்

நோயாளிகள் மாலையில் குழுமி விடுவார்கள். டாக்டரின் சற்று நேர ஓய்வைக் கெடுப்பதா? இந்தப் பெண் அத்தனை முக்கியமானவளா?

அவளை மேலே போகிக்க விடவில்லை மாதங்கி.

''நான் போய்ப் பார்த்துக்கறேன்''

மருத்துவமனையின் வளாகத்துக்குள்- பின்பக்கம்- மரங்கள் சூழ்ந்து சின்ன காட்டேஜ் போல் அழகாக இருந்தது ஸ்ரீதரின் வீடு. வீட்டின் பக்கவாட்டில் முயல் குட்டியைப் போல் நின்று ஃபோர்ட் கார்.

ஒரு சின்ன தலை அசைப்பு போதும். இத்தனை சொத்துக்கும் இவள் எஜமானி! நட்போடு சகஜமாய்ப் பேசிய நர்ஸ் எழுந்து நின்று மரியாதையாய்ப், பேசுவாள்.

'யார்?' என்று இப்போது கண் சுருக்கிப் பார்க்கும் வாட்ச்மேன் கூட, எழுந்து நின்று சல்யூட் அடிப்பான்.

எல்லாவற்றையும் நிராகரிக்கப் போகிறாள்...

''ஐயாவைப் பார்க்கணும்.''

''அது சரிம்மா. நீங்க யாரு? உடம்புக்கு ஏதாவதா?''

''மாதங்கினு சொல்லுங்க.''

''ஐயா இப்பத்தான் வந்து ரெஸ்ட் எடுக்கறாரு. பெரியம்மா கூட வெளியில போயிருக்காங்க... கொஞ்சம் கூட ஒய்வு எடுக்க விட மாட்டாங்களே'' முணுமுணுத்தபடி தன் சின்ன கூண்டுக்குள் போய் இன்டர்காமில் பேசினான்.

ஸ்ரீதரின் அம்மாவும் இல்லை என்பது மாதங்கிக்கு ஒரு வகையில் தெம்பாய் இருந்தது.

போகும்போது அலட்சியமாய் போன வாட்ச்சேன், வந்து கேட்டைத் திறக்கும் போது மரியாதை காட்டினான். வித்தியாசம் வெளிப்படையாய்த் தெரிந்தது. அவள் கேட்டைத் திறப்பதற்குள், வாசல் கதவைத் திறந்து கொண்டு போர்ட்டிகோவில் மடமடவென்று இறங்கி ஸ்ரீதரே வந்துவிட்டான். முகம் மலர்ந்து பல் வரிசை அழகாய்த் தெரிய சிரித்த படி ''வாங்க, வாங்க'' என்றான்.

இத்தகைய வரவேற்பை மாதங்கியே எதிர்பார்க்கவில்லை.

''ஐயோ... முதல் முதல்ல வீட்டுக்கு வரீங்க. அம்மா கூட இல்லையே. என்ன சாப்பிடறீங்க? முதல்ல உட்காருங்க.''

பேனைப் போட்டான். நல்ல தூக்கத்தில் இருந்திருப்பான் போல் இருக்கிறது. கண்களில் தூக்கமும் களைப்பும் மிச்சம் இருந்தன. அவசரமாய் எடுத்து மாட்டிய சட்டை, பட்டன்கள் ஏறுமாறாய் இருந்தன. தலையை இத்தலை அவசரத்திலும் பரபரப்பிலும் வாரி இருந்தான்.

தன் மீது இத்தனை பிடித்தமா? மாதங்கி சற்று ஆடித்தான் போனாள். இதனால் தான் சதீஷ் இத்தனை கெஞ்சுகிறானா? சதீஷ் என்ற பெயர் நினைவில் மோதியதுமே வாயில் தேள் விழுந்தது போல் இந்திப்பு நெஞ்சில் பரவியது. ஸ்ரீதர்- எதிரே இருந்தும் - மறைந்து போனான்.

இதற்குள் ஸ்ரீதர் குடிக்க அவளுக்கு குளிர்பானம் 'கொண்டு வைத்து. ''ப்ளீஸ், எடுத்துக்கோங்க'' என்று உபசரித்தான்.

இவனிடம் போய் எப்படி மறுப்பை தெரிவிக்கப் போகிறாள்?

''ஐயம், சாரி. உங்களை நல்ல தூக்கத்துல எழுப்பிட்டேன் போல இருக்கு.''

''ஓ, நோ ப்ராப்ளம்...இன்னைக்கு ரெண்டு ஆபரேஷன். எர்லி மார்னிங் மேஜர் ஆபரேஷன். மதியம் ஒரு எமர்ஜென்ஸி கேஸ். அதான் கொஞ்சம் வந்து அசந்துட்டேன்...ம், சொல்லுங்க...''

அவள் வந்ததே ஏதோ சம்மதம் தெரிவிக்க என்பது போல் பரபரத்துப் போனான் ஸ்ரீதர்.

துணிந்து வந்துவிட்டாளே தவிர, அவள் செய்கையில் அவளோ வாயடைத்துப் போனாள். 'சொல்லுங்க' என்றால், என்னவென்று சொல்வாள்?

முதல் தடவை சந்தித்துப் படபடத்தது போல், ஆஸ்பத்திரியில் சந்தித்து மளமளவென்று கொட்டிவிட்டு வந்து விடலாம் என்று நினைத்திருந்தாள். இங்கே எல்லாமே தலைகீழாக நடக்கிறதே.

அவள் மௌனத்தை நாணம் என்று எண்ணினானோ என்னவோ, அவனே பேசினான். ''உங்க வீட்லயிருந்து ஒரு தகவலும் இல்லையேனு அம்மா கூட கேட்டுக்கிட்டு இருந்தாங்க.''

தன் விருப்பத்தை அம்மாவின் மேல் ஏற்றி கூறினான்.

அம்மா கேட்டதென்னவோ உண்மை. ஆனால், வேறு விதமாய் கேட்டாள்.

''ஏண்டா, நம்ம விருப்பத்தை தெரிவித்து, பட்டுப்புடவை சீருனு எடுத்துப் போயும், பதிலே சொல்லாம இருக்காங்க... அப்படியாவது இந்தப் பெண் வேணுமா?''

''அம்மா, எனக்காக ப்ளீஸ். கொஞ்சம் பொறுத்து பார்ப்போம்.'' என்றாள்.

இப்போது இவளே நேரில் வந்திருக்கிறாள். சம்மதம் என்று சொல்லி விடட்டும். அவ்வளவு தான்! யாஹூ!...

அவள் எண்ண ஓட்டமோ வேறு விதமாய்

இருந்தது.

சருமம் சரியில்லை என்று ஒரே தொடியில் சொல்லி விடலாம். ஆனால், அதற்கு அப்பா போதும். தான் இத்தனை தூரம் வந்திருக்க வேண்டாமே. இவள் மனம் புண்படாத வண்ணம் மறுப்பைச் சொல்லி, இவனை விட்டே சதீஷைச் சம்மதிக்க வைக்க வேண்டும். இந்த எண்ணத்தோடு தானே அவள் இங்கே வந்திருக்கிறாள். இதற்கு மேல் மூடி மறைக்க வேண்டாம். வருவது வரட்டும்...

மெல்ல ஆரம்பித்தான். ''உங்க பெட்ட உண்மையைப் பேச வந்தேன்.''

அவன் இவிரமாய் நோக்கினான். மனதில் ஒரே தொடியில் ஆயிரம் எண்ணங்கள். இவள் விரும்பி, வீட்டில் மறுக்கிறார்களா? சுவாமி சம்மதம் கிடைக்காமல் போய் தயங்குகிறார்களா? என்ன பேசப் போகிறாள்? உண்மை என்றால்?...அப்போதும், தன்னை அவள் விரும்பவில்லையோ என்று மட்டும் அவள் நினைக்கவில்லை.

''சொல்லுங்க''

''நீங்க கெட்டுப் போன இதயத்தை ஆபரேஷன் பண்ணி ரோன இதயமா,மாத்தற டாக்டர். காதலுக்கு சின்னம் கூட இதயம் தான். அந்த வகையில் தாறுமாறா துடிக்கற என் இதயமும் ரோ அமையறது உங்க கையில தான் இருக்கு.''

''புதிராப் பேசறீங்க. நேரடியா விஷயத்துக்கு வாங்க.''

''நான்...நான் வேற ஒருத்தரை விரும்பறேன்.''

அவன் முகம் இறுகியது. சோபா கைப்பிடியை அழுத்தமாய் பற்றிக் கொண்டான். அவன் முகம் பார்த்து அவள் தயங்கினாள். இக்கட்டான மௌனம் நிலவியது.

எச்சிலைக் கூட்டி விழுங்கி விட்டு, அவள் தான் அந்த மௌனத்தைக் கலைத்தாள்.

''வெல், நான் கொடுத்து வச்சது அவ்வளவு தான்.''

சொல்லும் போதே அவள் குரல் நெகிழ்ந்து விட்டது. எங்கே அவள் முன் கண் கலங்கி விடுமோ என்று கஷ்டப்பட்டு தன்னை அடக்கிக் கொண்டாள். பிறந்த பிஞ்சுக்குக் கூட அநாயாசமாய் இருதய ஆபரேஷனை நல்லபடி முடிக்கும் கை தேர்ந்த டாக்டர். ஆனால், அவன் விரும்பிய இதயம் அவனுக்குக் கிடைக்கவில்லை.

''சேச்சே, ஏன் அப்படி பேசறீங்க? என்னை விட பல மடங்கு சிறப்பான பெண் உங்களுக்கு மனைவியா கிடைப்பா.''

அவன் தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் இருக்கப் போராடிக் கொண்டிருந்தான். காலம் முழுவும் தன்னுடன் இருக்க வேண்டும் என்று எந்த பெண்ணைப் பற்றி நினைத்தானோ, அந்த பெண் இப்போது வெளியேறினால் போதும் என்று தோன்றியது.

''சரி, ஐ பிராமில். உங்க வாழ்க்கையில இனி நான் எந்த விதத்திலும் குறுக்கிட மாட்டேன். போதுமா?'' அவனைவு தானே என்பது போல் கை கூப்பி எழுந்தான்.

அவன் எழுந்து கொள்ளாமல் நெளித்தான்.

''இன்னும்...ஒரு சின்ன ஹெல்ப் நீங்க செய்யணும்.''

அவன் மீண்டும் உட்கார்ந்து கொண்டான்.

''என்ன?''

''என் காதல் இந்த நிமிஷம் வரை ஒரு தலைக்காதல் தான். நீங்க ஒரு வார்த்தை சொன்னாத்தான் 'அவர்' சரி சொல்லுவார்னு நினைக்கறேன்.''

''யார் அந்த 'அவர்'?''

ஒரு நிமிடம் அவளை தீர்க்கமாய் பார்த்துவிட்டு நிதானமாய் சொன்னான். ''சதீஷ்.''

11

அலுவலகத்தில் அவசர ஃபைல்களைக் கவனமாகப் படித்து கொண்டிருந்தான் முரளி. பி.ஏ. பணிவாய் இன்டர்காமில் அழைத்து. ''ஸார், சம் டாக்டர் ஸ்ரீதர் வான்ட்ஸ் டு மீட் யூ'' என்றாள்.

''சென்ட் ஹிம் இன்'' என்றான் யோசனையாய்.

ஸ்ரீதர் எதற்கு தன்னைச் சந்திக்க வேண்டும்? பெண் பார்த்துப் போன விஷயம் பற்றி கேட்கப் போகிறானா? வீட்டில் தங்கை மாதங்கி பிடிவாதமாய் மறுப்பதை ஸ்ரீதரிடம், இவள் எப்படிச் சொல்வது? முதலில் சொல்வதா வேண்டாமா? அம்மா எப்படியாவது மாதங்கியைச் சம்மதிக்க வைக்கலாம் என்றல்லவா நினைக்கிறாள். பட்டும்படாமலும் ஏதாவது சொல்லி அனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்து, பியூனிடம் காபிக்குச் சொல்லி விட்டு காத்திருந்தான்.

நாருக்கான இரண்டு தட்டல்களுடன் இவன் கேபினுக்குள் நுழைந்தான் ஸ்ரீதர்.

அவனுடைய ஆக்ரோஷமும் அழகும் முரளியை அசத்தின. அசட்டுப் பெண் ஏனோ இவனை மறுக்கிறானே என்று மனம் சலனப்பட்டது.

"ஹலோ, கம் இன் ப்ளீஸ்... உட்காருங்க."

"ஹாய்" என்றபடி உட்கார்ந்தான் ஸ்ரீதர். அதற்குள் ப்யூன் பினாலிலிருந்து காபியை இரண்டு கப் அண்ட் சாசரில் ஊற்றி இருவர் முன்பும் வைத்து விட்டு நகர்ந்தான்.

"ப்ளீஸ் ஹேவ் இட்."

மௌனமாய் காபியைப் பருகினார்கள். யார் எப்படி பேச்சைத் துவங்குவது என்ற சங்கட மெல்லம் சற்று நிலவியது.

ஸ்ரீதர்தான், "ஃபைன் காபி" என்றபடி பேச்சைத் துவங்கினான்.

"பக்கத்து ஹோட்டல் ரெஸிடென்ஸியில தான் ஒரு மெடிக்கல் கான்ஃபரன்ஸ். அப்படியே... உங்களைப் பார்க்க வந்தேன். ஜஸ்ட் எ கர்டஸி கால்"

ஸ்ரீதர் சாதாரண சந்திப்பு என்று சொன்னாலும், இவன் ஏதோ முக்கியமாய் பேசத் தான் வந்திருக்க வேண்டும் என்று முரளி நினைத்தான். அவளாகக் கேட்கா விட்டாலும், தானாக அது பற்றி ஏதாவது சொல்ல வேண்டியது தான் நாகரீகம். ஆனால், அப்படி என்னவென்று சொல்வான்?

அவனை அதிகம் சங்கடத்தில் ஆழ்த்தாமல் ஸ்ரீதரே பேசினாள். "காதலைப் பத்தி என்ன நினைக்கறீங்க முரளி?"

முரளி சற்று அவளை உற்றுப் பார்த்தான். பின் தோள்களை குலுக்கிக் கொண்டான்.

"நம பரவங்களுக்கு அது தெய்வீகமானது. நம்பாதவங்களுக்கு அது சிற்றின்பம் சார்ந்த இனக்கவர்ச்சி. என்னைப் பொறுத்தவரை ஐ ஹேவ் நோ ஐடியா. ஏன்னா எனக்கு அந்த அனுபவம் கிடையாது."

"எனக்கு அந்த அனுபவம் உண்டு. அதில் தோல்வியும் உண்டு."

முரளி இதை எதிர்பார்க்கவில்லை. இவன் விரும்பி வந்து பெண் கேட்டது தன் தங்கையை. அவள் மறுத்தது இவனுக்கு எப்படி?

கேள்வியை அவன் கண்களில் படித்த ஸ்ரீதர், "முரளி, உங்க தங்கை வந்து என்னை மீட் பண்ணினாங்க. அவங்க மனசுல நான் இல்லைனு தெரிஞ்சுக்கிட்டேன்."

இன்டர்நெட்டில் அரங்கேறிய வினோத ஆசை!

ஆஷ்லே வெஸ்ட். 21 வயதாகும் இவருக்கு ஒரு வினோதமான ஆசை ஏற்பட்டது. ஒரே நேரத்தில் உலகம் முழுவதும் பிரபலமாக வேண்டும். அதே சமயம் பணமும் குவிய வேண்டும். என்ன செய்வது என்று யோசித்தார். உடனே பளிச்சென்று அவர் நினைவுக்கு வந்தது இன்டர்நெட். இதன் மூலம் உலகம் முழுவதும் பிரபலமாக நினைத்த ஆஷ்லே, தனது மார்பகத்தை பெரிதாக்கிக்கொள்ள விரும்பினார். இதற்கான ஆபரேஷனை வெப்-சைட்டில் வெளியிடவும் சம்மதித்தார். உடனே ஏற்பாடுகள் தயாராயின. அமெரிக்காவில் புளோரிடா மாலில் தம்பா நகரில் ஒரு அறைக்குள் 6 பெண்கள் குழுமியிருக்க ஆஷ்லேவுக்கு மார்பக ஆபரேஷன் நடத்தப்பட்டது. 75 கமிராக்கள் சுமார 2 மணி நேரம் இந்த ஆபரேஷன் நடந்தது.

இந்த ஆபரேஷன் வெப்-சைட்டில் ஒளிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சியை உலகம் முழுவதும் இருப்பவர்கள் ரசித்து பார்த்தனர். இதன் மூலம் ஆஷ்லே உலகப் பிரபலம் ஆனதுடன் பணமும் அவருக்கு குவிந்தது.

இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பிய பெவிட் மார்ஷலேத் கூறுகையில், "இந்த நிகழ்ச்சி நல்ல வரவேற்பை உலகம் முழுவதும் பெற்றிருந்ததுடன் பணமும் வாரிக் கொடுத்தது" என்றார்.

ஆஷ்லே மார்பகம் 32 செ.மீ.விருந்து 34 செ.மீட்டராக விரிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

-நிருமகன்.

சொல்லும் போதே ஸ்ரீதரின் குரல் தழுதழுத்தது. முரளிக்கே பாவமாய் இருந்தது. சட்டென்று தன்னை சுதாரித்து கொண்டான் ஸ்ரீதர்.

"ப்ரு, இட்ஸ் ஒ.கே.... என் நேசம் உண்மையானது. நான் உங்க தங்கையை கல்யாணம் செஞ்சுக்கற அதிர்ஷ்டத்தைச் செய்யலை. ஆனா, என் நண்பனுக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைச்சிருக்கு. ஒரு பக்கம் காதலி, ஒரு பக்கம் நண்பன். ரெண்டு பேருமே நான் நேசிக்கற ரெண்டு ஜீவன்கள். அவங்க ரெண்டு பேரும் நல்லா வாழணும். அவங்களை சேர்த்து வைக்க ஆசைப்படறேன்... அதுக்கு உங்க உதவி வேண்டும்."

அசந்து போய் உட்கார்ந்திருந்தான் முரளி.

"என்ன முரளி பதிலையே காணோம்?"

"இல்ல... என்ன பேசறதுன்னே தெரியலை. உயிர் காக்கற தொழிலைச் செய்யற டாக்டர்களை பொதுவா கடவுள்னு சொல்வாங்க. நீங்க நிச்சயமா..."

"ஓ, இவ்வளவு பெரிய வார்த்தை யெல்லாம் வேண்டாம். ப்ளீஸ். நீங்க உதவி செய்யணும்... முடியுமா?"

"என் தங்கைக்காக நீங்க இவ்வளவு முயற்சி செய்யும் போது, நான் உதவ மாட்டேனா?"

"நான் நேசிச்ச பெண்ணை சதீஷ் அவ்வளவு கலபத்துல மணக்கச் சம்மதிக்க மாட்டான். சரி, நான் பேசி கன்வின்ஸ் பண்ணறேன். ஆனா, அது போதாது."

"சரி, நாங்க என்ன செய்யணும்?"

சற்று இடைவெளிவிட்டு மெல்ல ஆரம்பித்தான் ஸ்ரீதர். "அவனுக்கு ஒரு தங்கை இருக்கா... அவளைக் கல்யாணம் பண்ணிக்க நீங்க தயாரா இருக்கணும்."

"அதுக்கும் இதுக்கும்..."

"என்ன சம்பந்தம்னு கேட்கறீங்க. ஸைட்? பெண் கொடுத்து பெண் எடுக்கறோம்..." இழுத்தான் ஸ்ரீதர்.

முரளி, 'அதுக்கான அவசியம் என்ன?' என்பது போல் பார்த்தான்.

ஜனமான ஒரு பெண்ணை நீ மணக்க வேண்டும் என்று எப்படி நேரடியாய் சொல்ல முடியும்? ஸ்ரீதர் சற்று தவித்தான். அவனாய் முன்வந்து ஒரு ஜனமான பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பது என்பது வேறு விஷயம். ஜனமே இல்லாத பெண்ணாய் இருந்த போதும் திருமணம் என்று வரும் போது யாரையும் கட்டாயப்படுத்த முடியாதே!

ஆட்டிகையான முரளி ஒரு மாதிரி யூகித்துவிட்டான்.

"பெண்ணுக்கு ஏதாவது குறையா?"

தலையை சற்றே குனித்து கொண்டு ஸ்ரீதர் "ம்" என்று முனகினான்.

மேஜையை கற்றிக் கொண்டு ஸ்ரீதர் அருகே வந்து அவன் தோளைத் தட்டிக் கொடுத்தான் முரளி.

"ஒரு பெண் கொழுப்பெடுத்து தலது செஞ்சுட்டு வந்து நின்னா, அதுதான் என்னைப் பொறுத்தவரை ஜனம், குறை எல்லாம். உடல் ஜனம் ஒரு குறையே இல்லை. என் தங்கைக்காக என்னையே கல்யாணம் பண்ண இவ்வளவு பிரயாசைப்படறீங்களே, யூ ஆர் ரியலி கிரேட். நான் இன்னைக்கே என் பெற்றோர்கிட்டப் பேசறேன்."

"குட். நானும் சதீஷோட அம்மாகிட்ட இது விஷயமாப் பேசறேன். உங்க தங்கைதான் நான் நேசிச்ச பெண்ணுங்கற விஷயம் மட்டும் அவங்களுக்குத் தெரிய வேண்டாம். நான் கேஷுவலா தாகர் மூலம் விஷயத்தை சதீஷ் வீட்டுக்கு தெரியப்படுத்திடறேன். ஒ.கே?"

"இவ்வளவு நல்ல மனுஷர் எங்க வீட்டு மாப்பிள்ளையா வர நாங்கள் கொடுத்து வைக்கலை..."

எழுந்து, முரளியின் தோளில் தட்டிக் கொடுத்த ஸ்ரீதர் "ஆனால், ரெண்டு குடும்பத்துக்கும் இடையே நல்ல நட்பு மலர்ந்திருக்கே. அதுக்கு கடவுளுக்கு நன்றி சொல்வோம்... நான் வந்த வேலை இவ்வளவு கலபத்துல முடியும்னு நான் நினைக்கலை. உங்க தங்கையோட தாராள குணம் உங்களுக்கு நிறையவே இருக்கு... அப்ப, நான் வரட்டுமா?" என்றான்.



சதீஷ் அன்றுதான் ஊரிலிருந்து திரும்பி இருந்தான். அசந்து தூங்கும் மகனையே ஆசையாய் பார்த்தான் காவேரி அம்மான். அம்மாவின் அருகாமை உணர்ந்தோ என்னவோ புரண்டு படுத்தான்.

"எழுத்துட்டியாப்பா?"

கண்களை நன்றாக திறந்து பார்த்தான். அவன் தலையைக் கோதிவிட்ட அம்மா, "காபி கொண்டு வரவா?" என்றான்.

அவன் கண்களை மலர்த்தி அவளைப்

பார்த்து சிரித்தான். பொதுவாக அவன் டூர் முடித்து வந்தால், அசந்து தூங்குவான். அம்மா எழுப்ப மாட்டாள். இன்று ஏனோ அம்மா புரண்டு படுத்தவுடனே 'எழுந்துட்டியா?' என்று எழுப்புகிறாளே. ஏதாவது முக்கியமாய் இருக்கும் என்று நினைத்தவன் அவள் கைகளைப் பற்றி ஆதரவாய் தடவியபடி, ''என்னம்மா?'' என்றான்.

''ஒரு முக்கியமான விஷயம் பேசணும்ப்பா. மணி நாலாகுதே. அஞ்சு மணிக்கெல்லாம் அவங்க வந்துடுவாங்களே. அதான் எழுப்பினேன்.''

''யாரு வராங்க? என்ன விஷயம்?''

''முதல்ல முகம் கழுவிட்டு வா. காபி கலந்துட்டு வரேன்.''

தூக்கத்தை முழுவதுமாய் கலைக்க கண்களில் மாறி மாறி தண்ணீர் அடித்துக் கொண்டான். சோப்பை குழைத்து முகத்தில் பூசி நீரை வாரி வாரி ஊற்றி புத்துணர்வோடு 'அப்பாடா' என்று வெளியே வந்தான். அதே வேகத்தோடு மணக்க மணக்க அம்மா கொடுத்த காபியை ருசித்துக் குடித்தான்.

''இப்ப சொல்லு. என்ன முக்கிய விஷயம்? யார் வராங்க?''

''நம்ம சுபாவைப் பெண் பார்க்க வராங்க. உன் பெரியப்ப பெரியம்மாவை கூட வரச் சொல்லி இருக்கேன்.''

''அட! வெரிகுட், வெரிகுட்.''

அம்மா எதிர் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

''பையன் பேரு முரளி. சின்ன வயகலயே நல்ல பதவியில இருக்கான். பையனோட வேலை விஷயமா தரகர் சொன்னது எனக்கு முழுசாப் புரியலை. ஆனா, நல்ல பெரிய பதவினு புரிஞ்சது. நேர்ல பார்க்கும் போது நீயே நல்லா விசாரியேன். சொந்த வீடு, கார் எல்லாம் இருக்காம். அப்பா அரசு அதிகாரி.''

''சரிம்மா. பையனுக்கு ஏதாவது?''

''அதெல்லாம் குறை ஒண்ணும் இடையாதாம்.''

''அப்ப எப்படி நம்ம சுபாவை?''

''நல்ல மனுஷங்களாம். அண்ணன், தங்கை ரெண்டு பேருக்கும் சேவை மனப்பான்மை நிறைய உண்டாம்...''

''தங்கை?... அப்படன்னா?''

''நான் முன்னாடியே சொன்ன மாதிரி, பெண் கொடுத்து பெண் எடுக்கற முறைதான்.''

''அந்தப் பொண்ணுக்கு ஏதாவது குறை?''

''அதுவும் இல்லப்பா?''

''நீ சொல்லறதைப் பார்த்தா கொஞ்சம் வசதியான இடமாத் தெரியுது. தானே வலிய வந்து சம்பந்தம் பேசறாங்க. நமக்கு அவ்வளவு வசதியும் போதாது. சுபாவும்... ஏம்மா, எதுவும் வில்லங்கம் இருக்காதே?''

''ஏண்டாப்பா அப்படி நினைக்கணும்? நல்லதே நினைப்போமே. நல்ல மனுஷங்களும் உலகத்துல இருக்காங்களே... நல்லபடி சுபாவுக்கும் ஒரு கல்யாணம் நடக்குமானு நான் வேண்டாத தெய்வம் இல்ல. வந்து பார்த்த நாலஞ்சு வரனும் நம்ம சக்திக்கு மேல 'லட்சம் கொடு, காரு கொடு, வீடு கொடு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறோம்'னு பேரம் இல்ல பேசினாங்க. என்னவோ காரும் வீடும் அவ ஆனத்தை சரிகட்டிடறாப்புல. அந்தக் குழந்தை மனச ஒடஞ்ச கிடக்கா, பாவம். 'என்னால அண்ணனும் இல்லம்மா கல்யாணம் கட்ட முடியாம இருக்கு. பேசாம தான் ராமகிருஷ்ண மடம் மாதிரி எதிலாவது சேர்ந்துடட்டுமா'னு அவ கேட்டப்போ, எப்படி இடிஞ்சு போயிட்டேன் தெரியுமா?'' அம்மா பேசப் பேச கண் கலங்கி விட்டாள்.

அவள் கலக்கம் அவனை அசைத்து விட்டது.

''அம்மா, ப்ளீஸ்ம்மா. கடவுள் அருளால எல்லாம் நல்லபடி நடக்கும். நீ கலங்காதே.''

அம்மா புடவைத் தலைப்பால் கண்களை ஒற்றிக் கொண்டாள். ஏதோ நினைவு வந்தவளாய் அவன் அருகே அமர்ந்து, அவன் கைகளை பற்றிக் கொண்டாள்.

''உன் வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்பா. அப்புறம்...''

''சொல்லும்மா. என்ன தயக்கம்?''

''நீ பொறுப்பான பிள்ளைதான். இருந்தாலும் கேட்டுக்கறேன்...''

''என்கிட்ட உனக்கு என்னம்மா தயக்கம்? கேளு''

''வயகப் பிள்ளை. உனக்கு மனைவியா வரப்போறவளைப் பத்தி பலவகைக் கனவு இருக்கும்...''

அம்மா மேலே சொல்லத் தயங்கினாள். மகன் புன்னகை பூத்தான்.

''எனக்கு எந்த கனவும் கிடையாதும்மா. நீயும் தங்கையும் சந்தோஷமா இருக்கணும். அதேபோல வர பெண்ணையும் நல்லபடி வச்சுப்பேன். போதுமா? தங்கைக்கு பையனைப் பிடிச்சு, வில்லங்கம் இல்லாத இடம்னா, எனக்கு பூரண சம்மதம். என் விருப்பு வெறுப்புனால இந்தக் கல்யாணம் நிக்காது, போதுமா.''

அம்மாவின் கண்கள் மீண்டும் கலங்கின.

''உன்னை மகனாப் பெற நான் கொடுத்து வச்சிருக்கணும்பா.''



13

சரியாக ஐந்து மணிக்கு அவர்கள் வந்து விட்டார்கள். முரளியும், அவன் பெற்றோரும் உள்ளே நுழைந்தவுடன் 'இவர்களை எங்கோ பார்த்திருக்கிறோமே' என்று சதீஷ் மூளையைக் கசக்கினான். நினைப்பு வெளியே தெரியாத வண்ணம் புன்னகைத்து அவர்களை வரவேற்றான். சற்றே தாமதமாய் சதீஷின் பெரியப்பா, பெரியம்மா உள்ளே வந்தார்கள். அறிமுகம் முடிந்தது. காவேரி அம்மாளுக்கு ராஜா மாதிரி உள்ளே நுழைந்த முரளியைப் பார்த்தவுடன் பரம திருப்தி. மகளை இவன் என்று கடவுளை வேண்டினாள்.

''மூணு பேராக் கெளம்ப வேண்டாமேனு, எங்க பெண்ணையும் கூட்டிக்கிட்டே வந்துட்டோம். அம்மாடி,உள்ள வா'' என்று வாசலைப் பார்த்து குரல் கொடுத்தார் ராஜசேகர்.

கார் கதவைத் திறந்து கொண்டு மாதங்கி இறங்கினாள்.

அம்மாவிற்கு, மருமகளாக வரப்போகும் பெண்ணைப் பார்க்கும் ஆவல். முரளியைப் போலவே அவளும் அழகாய் இருந்து பெண், பிள்ளை இருவர் வாழ்வும் நல்ல விதமாய் அமைந்துவிட்டால், அதை விட ஒரு தாய்க்கு என்ன வேண்டும் வாழ்வில். வலிய வந்து ஜனமான பெண்ணுக்கு சம்பந்தம் பேசுகிறார்களே, பெண் கோரமாக இருந்து வைப்பாளோ? தன் மகளுக்காக மகளின் வாழ்வை காவு கொடுத்து விட வேண்டி வருமோ என்றெல்லாம் உள்ளூர பயந்திருந்தாள் காவேரி. அதனால், அவசரமாக வெளியே சென்று பார்த்தாள்.

தந்தச் நிலையாய் சிரித்த படி நின்ற மாதங்கியைப் பார்த்து அசந்து நின்றுவிட்டாள் காவேரியம்மாள்.

சதீஷ் தான் உள்ளே இருந்தபடி குரல் கொடுத்தான். ''என்னம்மா அப்படியே நின்னுட்டே. அவங்களை உள்ளே கூப்பிடு.''

அம்மா சுதாரித்து மாதங்கியின் கைப்பிடித்து, ''வாம்மா'' என்று உள்ளே அழைத்து வந்தாள்.

அங்கே மாதங்கியை எதிர்பார்க்காத சதீஷ், ஷாக் அடித்தது போல் ஒரு நிமிடம் அரண்டு போனான்.

டாக்டர் ஸ்ரீதர், முரளியைப் பார்த்துப் பேசிய அன்று மாலையே, முரளி தன் பெற்றோரிடம் எல்லாவற்றையும் சொன்னான். அவன் அம்மா கலாவதியால்தான் இதை எளிதில் ஜீரணிக்க முடியவில்லை. மகனை ஒரு பிடிபிடித்தாள்.

''நாங்க பெரியவங்க இருக்கும் போது, என்ன துணிச்சல் இருந்தா அந்த பையனைப் போய் தனியா பார்த்துப் பேசி இருப்பே?''

''தப்புதாம்மா. ஆனா, வேற வழி? நீங்க எல்லோரும் விஷயத்தை டாக்டர்கிட்ட உடைக்கவே தயங்கிக்கிட்டு இருந்தீங்க.''

''அதுக்காக? நீயே தனியாப் போயிடறதா? அந்தப் பையன் நல்லவனா இருந்ததால போச்சு. இல்லாட்டி, நீ மறுத்தவுடனே அவன் உன்கிட்ட தப்பா நடந்திருந்தா? இனம் கன்று பயம் அறியாதுனு சொல்றது சரிதான். அதென்ன அப்படி ஒரு அசட்டுத்துணிச்சல்.''

மாதங்கி தலையைக் குனிந்து கொண்டாள். ராஜசேகருக்கு மகளைப் பார்க்க பாவமாக இருந்திருக்க வேண்டும். உதவிக்கு வந்தார்.

''சரி, விடு கலா. நடந்ததைப் பத்திப் பேசி என்ன பயன். இனி நடக்க வேண்டியதை பத்திப் பேசுவோம்.''

''பேச என்ன இருக்கு?''

காரும் பங்களாவுமாக வந்த வாழ்வை மகள் மறுத்து விட்டாளே என்ற ஆதங்கம் கலாவதிக்கு.

''எப்ப இவ்வளவு தூரம் அவ போயிட்டாளோ, அப்ப அவ சதீஷை நீவிரமா விரும்பறானு அர்த்தம். இனியும் நாம குறுக்கே நிக்கறது நல்லதா சொல்லு?''

''வசதியா வாழ்ந்த பொண்ணுங்க. வசதி குறைஞ்ச வாடகை வீட்ல எப்படி?...''

''அதுக்கு அவளே தயாரா இருக்கும் போது, உனக்கென்ன? வாழ்க்கையில வசதியை விட அன்பு, காதல் எல்லாம் உசத்தியான விஷயம்னு உனக்குத் தெரியாதா? வசதி இருந்து அன்பே இல்லாத ஒருத்தனை கட்டிக்கிட்டா வாழ்க்கை என்னாறது, சொல்லு.''

''ரெண்டுமே டாக்டர் ஸ்ரீதரை கல்யாணம் பண்ணிக்கிட்டா கிடைக்கும்.''

''ஸ்ரீதர் விஷயம் முடிஞ்ச போன அத்யாயம், கலா. அதைப் பத்தி பேசி பயனில்லை. சதீஷ் பத்தி பேசு.''

''எனக்கு அதுல இஷ்டமில்லை.''

''உன் மகளுக்கு இருக்கு.''

''மகளுக்காக ஜனமான பெண்ணை மகன் கல்யாணம் செஞ்சுக்கறதை எந்தத் தாயால தாங்க முடியும்?''

இதுவரை மௌனமாய் இருந்த முரளி முதல் முறையாய் வாய் திறந்தான்.

"ஒரு மனமான பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கறதுல நான் சந்தோஷப்படறேன்மா. தங்கைக்காக பெரீசா இயாகமெல்லாம் செய்யலை. உண்மையச் சொல்லணும்னா, இப்படி ஒரு சந்தர்ப்பம் அமைச்சுக் கொடுத்த மதுவுக்கு நான் நன்றி சொல்லணும்."

மாதங்கி அண்ணனை கண்களில் நன்றி மிளிரப் பார்த்தாள்.

"போடா, பேத்தாதே. கால் சரியில்லாத பெண்ணோட ஆயுசு பூரா மாரடிக்கணும்னு உனக்கென்ன தலையெழுத்து?"

"அம்மா, இனம் நான் வண்டியில ஆபீஸ் போறேன். ஒரு சின்ன ஆக்ஸிடென்ட். என் காலோ கையோ போக எத்தனை நேரம் ஆகும்?"

கலாவதி பதறி விட்டாள்.

"ஏண்டாப்பா இப்படியெல்லாம் பேசறே?"

"அட, ஒரு பேச்சுக்கு சொல்றேம்மா. வாழ்க்கையில எதுவுமே நிலையானது இடையாதும்மா. ஒரு பேச்சையே உன்னால தாங்க முடியலை. உண்மையில மனமான ஒரு பெண்ணுக்கு வாழ்வு இடைக்குமான்னு அவங்க வீட்ல எவ்வளவு கலங்கிப்போய் இருப்பாங்க. யோசி. எனக்கோ, நம்ம மதுவுக்கோ இப்படி ஒரு நிலை இருந்தா நீ எப்படி துடிச்சுப் போவே?"

அம்மா கருதி கொஞ்சம் இறங்கியது. இருந்தாலும் மெல்லிய குரலில், "மது மனைப்படி வாழ்க்கை அமையறது சந்தோஷம்தான். இருந்தாலும், நீ ஒரு மனமான பெண்ணை..."

"அல பேரு சுயநலம். அவளையும் உன்னைப் போல ஆசாபாசம் உள்ள பெண்ணாப் பாரு. மனமானவளா பார்க்காதே. அப்படிப் பார்த்தா, உனக்கு மன கஷ்டப்படாது."

"எல்லாம் சரிடா. நாளைக்கே நீ வருத்தப்படக்கூடாது இல்லையாரு உனக்கு பாதநாட்டியம்னா பிடிக்கும்னு எனக்குத் தெரியும். உன் தங்கையை கொண்டு போய் பரத நாட்டிய மொகல சேர்த்து விட்டே. அவளுக்கு அதுல நாட்டம் இல்ல. அதே சமயம், ஆர்வம் இருந்த ஒரு பெண்ணுக்கு சீக்கட்டி முடியலைனு, தன் சீலைக் கொடுத்துட்டு வந்துட்டா. நான் இனி மொகக்குப் போகலை.

எனக்கு பதிலா அந்தப் பொண்ணுக்கு பீலை கட்டிடுனு வேற சொல்லிட்டா. இப்பவும் அந்தப் பொண்ணு கிட்டயிருந்து மாசம் ரெண்டு ப்ரொக்ராமுக்கு டிக்கெட் வருது. உன் தங்கை குணம் இப்படி. உனக்கு மயில் மாதிரி ஆடத் தெரிஞ்ச பெண்ணா நான் தேடிக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா...''

''பத்மா கம்ரமணியத்துலயிருந்து சின்னக் குழந்தை வரை டான்ஸ் ஆடறாங்க. டி.வி., சபான்னு பல இடங்களில் நாட்டியம் பார்க்க முடியும்மா... வரப் போற மனைவி ஆடணும்னு அவசியம் இல்லை. மத்தவங்களுக்கு உதவி செய்யறதே வாழ்க்கையா கொண்ட என் தங்கை, முதல் முறையா தனக்குனு ஒருத்தனை விரும்பி இருக்கா. அவளுக்காக நான் இது கூட செய்யாட்டி எப்படிம்மா? பணம் காசு எல்லாத்தையும் விட, மனுஷத்தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒருத்தரை தேர்ந்தெடுத்திருக்கா. அந்த மனசை புரிஞ்சுக்கோ. இல்லவு சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம். ஆனா, ஒண்ணு. உன் பூரண சம்மதம் இருந்தாத்தான் எங்க கல்யாணம். யோசிக்க முடிவைச் சொல்லு.''

முரளி எழுந்து மொட்டை மாடிக்கு போய் விட்டான். அவளைத் தொடர்ந்து மாதங்கியும் பின்னால் சென்றாள்.

''அண்ணா''

திரும்பிப் பார்த்த முரளி, ''என்னடா?''என்றாள்.

இருவரும் கவற்றுக்கட்டை மீது அமர்ந்து கொண்டார்கள்.

''அம்மா சொல்றதைப் பார்த்தா, என் விருப்பத்துக்காக உன் வாழ்வைப் பாழாக்கறேனோனு...''

''சீ, அசடு. நீயே இப்படிப் பேசலாமா? ஜனமான ஒரு பெண் திருமணமே செஞ்சுக்கக் கூடாதா?''

''அப்படி இல்லை. என் பொருட்டு நீ...''

''ஒரு நல்ல காரியம் செய்யப் போறேன். மனசைப் போட்டு குழப்பிக்காம போய் வேலையைக் கவனி.''

அவள் புறங்கையை எடுத்து ஒரு முத்தம் பதித்து விட்டு சிட்டாய் மேழே இறங்கிய மாதங்கி, கண் ஓரம் துளிர்த்த நீரை துடைத்துக் கொண்டாள்.

இடையில், மேழே கிடைத்த தனிமையில், ராஜசேகர் மனைவியிடம், ''அருமையா, ரெண்டு ரத்தினங்களை குழந்தைகளா பெத்திருக்கோம். நீ அனாவஸ்யமா குழம்பி அதுங்களையும் குழப்பாதே. ஜனம் ஒரு குறை இல்லை. குழந்தைகள் மனசு படி கல்யாணம் நடக்கட்டும். ஆனா ஒன்னு. மேலாக சரி சொல்லிட்டு, நாளைக்கு அந்த பெண்ணை நீ கொடுமைப்படுத்தக் கூடாது.''

அடிபட்டது போல் கணவனைப் பார்த்தாள் கலாவதி.

''நான் என்ன அப்படிப்பட்டவளாங்க? எதோ ஒரு வேகத்துல தங்கைக்காக கல்யாணம் செஞ்சுகிட்டு பின்னாடி அவன் மனசை ஒடிஞ்சுடக் கூடாதே என்று தான்...''

''முரளியைப் பத்தி எனக்குத் தெரியும். அவன் திட சித்தனை உள்ளவன்.''

''நீங்க எல்லோரும் இவ்வளவு சொல்லும் போது, நான் மட்டும் குறுக்கே நிக்கலாப் போறேன். எல்லாம் கடவுள் விட்ட வழி. மேலே புரொஸீட் பண்ணலாம்.''

அண்ணாவிடம் பேசிவிட்டு மேழே வந்து கண்ணீரை கண்டி விட்டுக் கொண்டு நின்ற மாதங்கியின் காதில் அம்மா சொன்னது தேனாய்ப் பாய்ந்தது.



பிறகு எல்லாமே போர்கால வேகத்தில் நடந்தது. ஸ்ரீதர் சொன்ன தரகர் மூலம் சதீஷின் அம்மாவிடம் பேசி, சதீஷ் ஊர் திரும்பும் அன்று பெண் பார்க்க வருவதாய் ஏற்பாடாகி... இப்போது சதீஷின் முன் மாதங்கி நின்று கொண்டிருக்கிறாள்!

சதீஷுக்கு ஒரே நிமிடத்தில் எல்லாம் புரிந்து விட்டது. பெரிய இடத்து சம்பந்தம் வலிய வந்ததன் உள்நோக்கம் மாதங்கியின் காதல். அப்படியென்றால் ஸ்ரீதர்? மாதங்கியை முறைத்தான் சதீஷ்.

விஷயம் எதுவும் தெரியாத காவேரியம்மான், ''என்னடா, என் மருமகளை அப்படி முழுங்கிடறா மாதிரி பார்க்கறே?'' என்று கேலி பேசினாள்.

மாதங்கி மீதிருந்த எரிச்சல் இப்போது அம்மா மீது திரும்பியது. ஆனாலும் வந்திருக்கும் விருந்தினர் முன் எதுவும் பேச முடியாமல் மௌனமாய் நின்றான் சதீஷ்.

ஒரே நிமிடம், 'சாரி, உங்க மகளை என்னால மணக்க முடியாது' என்று கூறி விடத் துடித்தாள்.

ஆனால், பல வருடங்களுக்கு பின் உற்சாகம் பொங்கும் அம்மாவின் முகமும், இருட்டுத்தனமாய் உள் அறையிலிருந்து மருப்பிள்ளையைப் பார்த்து பூரிக்கும் தங்கையின் முகமும் அவன் நாவைக் கட்டிப் போட்டன. எப்பாடுபட்டாவது முரளியை தங்கைக்கு மணம் பேசி முடித்து விட்டு, அதே சமயம் மாதங்கியை மறுத்து விட வேண்டும் என்று முடிவெடுத்தவனாய் புன்னகையை அணிந்து கொண்டான்.

''அம்மா, சுபாவை கூட்டிக்கிட்டு வா''என்றான்.

காவேரியம்மான் உள்ளே போன அந்த நேரத்தை ராஜசேகர் பயன்படுத்திக் கொண்டார்.

''நண்பருக்குப் பார்க்க வந்த பெண் தன்னையே விரும்புறது நாகரீகமான விஷயம் தான்... முதல்ல எங்களுக்கே அந்தத் தயக்கம் இருந்தது. ஆனா, அவ அன்போட ஆழத்தைப் புரிஞ்சுண்டதால, நாங்க இங்கே வந்திருக்கோம்.''

சதீஷ் ஏதும் பதில் சொல்லும் முன், சுபாவை கைத்தாங்கலாய் பற்றியபடி காவேரியம்மான் வந்து விட்டாள். சுபா பொதுவாய் கை கூப்பி ''வணக்கம்''என்றாள் சிரித்தபடி.

''நமஸ்காரம் பண்ணும்மா'' என்றாள் காவேரியம்மான்.

''ஐயோ இருக்கட்டும். நிரம்பப்ட வேண்டாம். எதுக்கு ஃபார்மாலிட்டல்'' என்று தடுத்த கலாவதி அவளை தன் அருகே அமர வைத்துக் கொண்டாள். பெண் ஜனமான போதும் களையாய் இருந்தது மனதுக்குத் திருப்தி அளித்தது.

சுபாவின் படிப்பு பற்றியெல்லாம் கேள்வி கேட்ட கலாவதி, ''பாடுவியாம்மா? என் பிள்ளைக்கு பாட்டு டான்ஸ் எல்லாம் ரொம்பப் பிடிக்கும்'' என்றாள்.

''என்னால டான்ஸ் ஆட முடியாது. வேணும்னா, உங்க பிள்ளையோட சேர்ந்து நானும் ரசிப்பேன். ஆனா, பாடுவேன்'' என்றான் மெல்லிய புன்னகையுடன்.

தன் குறையை லேசாக கோடிகாட்டிவிட்டு அதே சமயம் தன்னம்பிக்கையோடு பேசிய சுபாவை கலாவதிக்கு பிடித்துவிட்டது.

''ஒரு பாட்டு பாடேன்''

ஒரு முறை அம்மாவையும் அண்ணனையும் பார்த்து விட்டு கணீரென்று பாட ஆரம்பித்தாள் சுபா.

''கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்

கண்டு வர வேணுமடி தங்கமே தங்கம்...''

அருவியாய் பிரவாகித்த குரல் எல்லோரையும் கட்டிப் போட்டது. பாடல் முடிந்து ஒரு நிமிடம் கழித்துத் தான் எல்லோரும் இவ்புக்கு திரும்பினார்கள்.

ராஜசேகர் படபடவென்று கைகளைத் தட்டி, ''ஒன்டர்ஃபுல்'' என்று ஆர்ப்பரித்தார்.

முரளி சட்டென்று, ''மனநிலையை அறிய ஆசைப்பட்டதால பலிக்காது சொல்லிட்டேன். எனக்கு சுபாவைப் பிடிச்சிருக்கு. சுபாவுக்கும் சம்மதம்னா, நீங்க ப்ரொசீட் பண்ணலாம்ப்பா'' என்றான்.

காவேரியம்மான் அசந்து போனாள். சதீஷே இதை எதிர்பார்க்கவில்லை. பெரியவர்கள் இழுத்தடிப்பார்கள். இரண்டு நாட்களாவது டயம் எடுப்பார்கள். அதற்குள் தான் ராஜசேகரிடம் பேசி விடலாம் என்று நினைத்திருந்தான். இப்படியா முரளி பலிச்சென்று போட்டு உடைக்க வேண்டும்?

காவேரியம்மானோ சந்தோஷத்தில் பூரித்துப் போனாள். சுபா முகத்தில் மிழ்ச்சியும் நாணமும் மாறி மாறி மின்னல் அடித்தன. இதை சதீஷ் கவனிக்கத் தவறவில்லை. உள்ளுக்குள் தவித்துப் போனான். முரளி போல் தானும் ஏதாவது சொல்லியாக வேண்டும். மறுப்பை பலிச்சென்று சொன்னால் குழ்நிலையே இருண்டு போகும். முரளி சுபாவை மறுத்துவிடாதபடி மாதங்கியை தான் மறுக்க வேண்டும். இதை மெல்லச் செய்ய அவகாசம் வேண்டும். அதனால் யோசித்து முடிவை தான் சொல்வதாய் சொல்ல வேண்டும்.

இப்படியெல்லாம் அவன் மனக்கணக்கு போட, காவேரியம்மானோ, ஒரே தொடியில் மகளின் நிட்டத்தைப் பொடிப் பொடியாக்கினாள். அவளுக்கு நல்ல சம்பந்தம் கை நழுவிப் போய் விடக் கூடாதே என்ற பதைப்பு. காலண்டரை எடுத்து புரட்டியபடி, ''எங்க சுபாவோ சதீஷோ நான் பிழிச்ச கோட்டை தாண்ட மாட்டாங்க. இப்ப நேரம் நல்லா இருக்கு. நீங்க கொண்டு வந்திருக்கிற பூ பழத்தட்டையும், நான் வாங்கி வச்சிருக்கற பழத் தட்டையும் ஒரு அச்சாரமா மாத்திண்டா, என்ன?''

''தாராளமா. மனச ஒத்துப் போயாச்சு. பிறகு என்ன? வேணும்னா பின்னாடி நல்ல நாள் பார்த்து உறவுக்காரங்களைக் கூப்பிட்டு ஒரு நிச்சயதார்த்தம் கூட செஞ்சுடலாம்.''

''ஓ, தாராளமா'' என்ற காவேரியம்மான், தன் அக்காவையும் அவள் கணவரையும் முன் நிறுத்தி தட்டை மாற்றிக் கொள்ளச் சொன்னாள்.

தன் கைமீறி எல்லாம் நடப்பதைப் பார்த்து பற்களைக் கடித்த சதீஷ் அதுவரை திரும்பிப் பார்க்காத மாதங்கி பக்கம் முதல் முறையாய் திரும்பி முறைத்தான். அதுவரை அவனையே

விழுங்கியது போல் பார்த்துக் கொண்டிருந்த மாதங்கியின் பார்வை அவன் பார்வையை வெற்றிக் களிப்போடு கவ்வி பிடித்தது.

உணர்வு ஒன்று படாமலே இங்கே பார்வை ஒன்றுபட்டன.

15

சீதேஷ் அன்று சற்று லேட்டாய் அலுவலகத்திற்குள் நுழைந்தான். முதல் நாள் மாலை நடந்த நிச்சயதார்த்த நிகழ்ச்சி அவனை பெரிதும் பாதித்திருந்தது. இரவு முழுவதும் அவன் சரியாக உறங்கவில்லை. தன்னை பெரிதும் நம்பிய ஸ்ரீதரிடம் என்ன பதிலைச் சொல்வது என்று கலங்கித் தவித்து உருகியதிலேயே உறக்கம் தொலைந்து போனது. விடிகாலை நேரம் தூங்கி, லேட்டாய் எழுந்து அவதி அவதி என்று எதையோ அள்ளிப் போட்டுக் கொண்டு அலுவலகம் வந்து விட்டான்.

ஆனால், பிரச்சினைக்குத் தீர்வு காணாத மன உளைச்சல் தலைவலியைத் தந்தது. டூர் போன ரிப்போர்ட்டை மட்டும் தந்து விட்டு, லீவ் போட்டுத் திரும்பி விடலாமா என்று கூட நினைத்தான்.

ஆனால், வீட்டில் தங்கை கேலி செய்தே கொல்கிறாள். காலையில் லேட்டாய் எழுந்ததற்கே, ''என்னண்ணா, அண்ணி பத்திய நினைவு தூங்கவே விடலையா?'' என்று ஆரம்பித்து விட்டாள்.

பதிலுக்கு இதே போல் ஏதாவது கேலியை எதிர்பார்த்திருப்பானோ என்னவோ, அவன் 'உர்' என்று உறும்பிவிட்டான். பாவம், சுபா. மாதங்கி மேல் உள்ள கோபத்தை சுபா மேல் இனி காட்டக் கூடாது என்று முடிவெடுத்தான். ஆனால், வீட்டுக்குப் போனால் அவள் கேலியிலிருந்து தப்ப முடியாது. அதற்கு அலுவலகமே மேல். ஒரு காபி வரவழைத்துக் குடித்து விட்டு, அனாலின் போட்டுக் கொண்டான்.

நிலையில் கை வைத்துக் கொண்டு ரிப்போர்ட்டை எழுத ஆரம்பித்தான். மதியம் லஞ்ச் டயத்தில் வேண்டா வெறுப்பாய் கொண்டு வந்திருந்த டிபனைச் சாப்பிட்டான். எந்த நேரத்தில் ஸ்ரீதர் போன் செய்து விடுவானோ என்ற தவிப்பு ஒரு புறம் இருந்து கொண்டே இருந்தது.

மதியம் இரண்டு மணிக்கு மேல் அவன் பயந்த படியே போன் வந்தது.

''ஸ்ரீதர் அம்மா பேசறேம்ப்பா, சதீஷ்.''என்று எதிர்முனை.

''சொ... சொல்லுங்கம்மா.''

''ஸ்ரீதர் பத்தி உன்கிட்ட பேசணும்...''

''ஸ்ரீதருக்கு என்னம்மா?''

''ஐயோ, ஒண்ணுமில்லப்பா, பதட்டப்படாதே... எப்ப வரே?''

''ஸ்ரீதர் லஞ்ச் சாப்பிட்டுப் போயிட்டானா?''

''இப்பத்தான் போறான்...அவன் இல்லாத போது உன்கிட்ட பேசறது நல்லதுனு தோணுது.''

சற்று யோசித்த சதீஷ், ''இன்னும் அரைமணி நேரத்துல வரேன்'' என்றான்.

ஸ்ரீதரின் அம்மா கொடுத்த சூடான காபி, சதீஷின் தலைவலிக்கு இதமாய் இருந்தது.

''சொல்லுங்கம்மா''

''இவன் நேசிச்ச பொண்ணு வீட்லயிருந்து ஒரு தகவலும் இல்லப்பா.''

எடுத்தவுடனேயே முதல் குண்டு விழுந்து விட்டது. நிலைகுலைந்து போனான் சதீஷ். நேற்றுத்தான் அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் நிச்சயம் நடந்தது என்று எப்படி சொல்வான்?

''சம்மதம்னா இத்தனை நாள்ல வந்து பேசி இருக்க மாட்டாங்களா?''

'மாதங்கி வீட்டினர் இவர்களிடம் எதுவுமே சொல்லவில்லையா?' அவன் மனம் துடித்தது. தலைகுனிந்து கொண்டான் சதீஷ். தன் கல்யாணத்திற்கு இந்த நல்ல மனுஷியை எப்படி அழைப்பான்? ஆசீர்வதிக்குமா இந்தத் தாய் மனம்? தன் மகன் விரும்பிய பெண்ணைக் கவர்ந்து விட்டான் என்று சபிக்காதா? 'சண்டாளி மாதங்கி, இப்படி ஒரு இக்கட்டில் மாட்டி விட்டாயே என்னை'. அவன் மனம் போடும் கூப்பாடு பற்றி அறியாமல் அம்மா தன் போக்கில் பேசிக் கொண்டே போனாள்.

''ஸ்ரீதர் ரொம்ப மனசொடிஞ்ச போயிட்டாம்பா. அவனை விட்டா வேற பொண்ணா இல்லை? கொன்னாக் கேட்க மாட்டேங்கறான். சோதையைப் பிரிஞ்ச ராமர் மாதிரி நியாயான சாப்பாடு தூக்கம் கூட இல்லை.''

ஒவ்வொரு சொல்லும் சதீஷை ஊசியாய்க் குத்தின.

''சரி, கொஞ்சம் விட்டுப் பிடிப்போம்னு நினைச்சேன். இப்ப என்னடான்னா, 'ஒரு வருஷம் அமெரிக்கா போக வாய்ப்பு வந்திருக்கு போறேன்'னு ஒத்தைக் காலில நிக்கறான்.''

சதீஷ் அதிர்ந்து போனான்.

''உங்களை தனியா விட்டுட்டா?''

''என்னையும் வேணும்னா கூட்டிக்கிட்டுப் போறானாம். இந்த வயசுல அமெரிக்காவும் ஆப்பிரிக்காவும் தேவையா எனக்கு? என் கணவர் வாழ்ந்த இந்த வீட்லயே, இந்த மண்ணுலயே உயிரை விடணும்னு தான் நினைக்கறேன். இவன் என்னடான்னா, இவனை நினைக்காத ஒரு பெண்ணுக்காக தேவதாஸ் மாதிரி நியாயம் சொல்றான். ஊர் விட்டு ஊர் ஓடறானாம். கொஞ்சம் உன் நண்பன்கிட்ட சொல்லுப்பா.''

'அம்மா நிருபன்கிட்டயே காவிலை ஒப்படைக்கறீங்களா?' அவன் மனம் ஓலமிட்டது.

''நீ பேசிப்பாருப்பா, சதீஷ். அமெரிக்காவுக்குப் போக வேண்டாம்னு சொல்லு. கடைசி காலத்துல என் பிள்ளை என்னை தனியா விட்டுட்டு போயிடுவானோனு பயமா இருக்கு. இந்த ரணம் ஆறின பிறகு வேற நல்ல பெண்ணா பார்த்துக் கல்யாணம் செஞ்சுக்கட்டும். என் காலத்துக்குப் பிறகு பிள்ளை குட்டியோட அமெரிக்கா ஆப்பிரிக்கா எல்லாம் போய்க்கட்டும். சொல்றியா?''

''ம்''

''கொஞ்சம் சீக்கிரமா பேசு. நீவிரமா ஏற்பாடு செஞ்சுகிட்டு இருக்கான். அவன் ஏற்கெனவே அமெரிக்கா போய் வந்தவன். அதனால, திரும்பப் போறது கஷ்டமில்லை. அவன் கவலையே எனக்கு பெரிய கவலையா இருக்கு...'' நெஞ்சை அடைப்பது போல் இருக்க, நீவி விட்டுக் கொண்டாள்.

''கவலைப்படாதீங்கம்மா...''

''ஒரே பையன்னு கேட்டதை எல்லாம் வாங்கிக் கொடுத்து செல்லமா வளர்த்தேன். அவன் கேட்ட பெண் மனசை வாங்க முடியலை பார்த்தியா... என்ன இல்லை என் பிள்ளைகிட்ட? அவங்க ஏன் அவனை மறுத்துட்டாங்க?'' குரல் இடறியது. நெஞ்சில் கரி என்று ஒரு கூர் ஊசி குத்தல். வலி முகத்தில் மின்னலாய் வெடித்து மறைந்தது.

அவன் பதில் பேச முடியாமல் உட்கார்ந்திருந்தான். அவனை சரியாக கவனிக்க வில்லை. அவள் உணர்ச்சியின் வலியை உணர்ந்து தலை குனிந்து உட்கார்ந்திருந்த அவனால் அவள் உடலின் வலியை உணர முடியவில்லை.

கண்களை மூடித் திறந்தவள், அருகே இருந்த மேஜை டிராயரைத் திறந்து மாத்திரைகளை எடுத்துப் போட்

அருள் புரிவாரா விநாயகர்?

சமீபத்தில் இந்தியா முழுவதும் விநாயகர் சதுர்த்தி சிறப்பாக கொண்டாடினார்கள். வடநாட்டில் குறிப்பாக மும்பை நகரில் வெகு சிறப்பாக விழா நடந்தது. மும்பை ஜேக்கப் சர்க்கிள் பகுதியில், வீரப்பன் பிடியில் உள்ள கன்னட நடிகர் ராஜ்குமாரை மீட்டு வர அருள் புரியும்படி விநாயகரிடம் நக்கீரன் கோபால் வேண்டுவது போல் விநாயகர் சிலை அமைக்கப்பட்டு இருந்தது.

காலத்துக்கு ஏற்ற வகையில் இந்த சிலை அமைக்கப்பட்டு இருந்தது உண்மை. ராஜ்குமார் விரைவில் திரும்பி வர விநாயகர் அருள் புரிய வேண்டும்.

-மைதிலி ராஜகோபாலன், சென்னை-78.

கொண்டான். அப்போது தான் அவனைக் கவனித்தவன், ஏதோ சரியில்லை என்று உணர்ந்து, "என்னம்மா?" என்றான்.

"ஒ...ஒன்னுமில்லப்பா. இதப் பத்திப் பேசத் தான் கூப்பிட்டேன். சரி, நீ எப்படி இருக்கே? கபாவுக்கு ஏதாவது வரன் வந்ததா?"

சதீஷ் மென்று விழுங்கினான். பின் மெல்லிய குரலில் தயக்கமாய், "ஒரு இடம் செட்டில் ஆகும் போல இருக்கும்மா. ஃபிக்ஸ் ஆனவுடனே உங்களுக்குச் சொல்றேன்" என்றான்.

"சந்தோஷம்ப்பா. நீயும் சீக்கிரமே கல்யாணச் சாப்பாடு போடு, என்ன?"

அம்மாவின் பேச்சு கஷ்டப்பட்டு வெளிவந்தது. அவன் அவளைச் சரியாய் கவனிக்கவில்லை.

'சந்தோஷமா? உண்மை தெரிந்தால் உங்களால் சந்தோஷப்பட முடியுமா அம்மா?' என்ற அவன் மனதின் கூப்பாடு காரணமாய் தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தான். இதற்கு மேல் தாங்க முடியாது, வெம்பி விடுவோம் என்று அவன் மெல்ல நிமிர்ந்தபோது தான் அம்மா பேச முடியாமல் தவித்துக் கொண்டு அவதிப்படுவது புரிந்தது. உடலெல்லாம் வியர்த்தது. பெரியதாக மூச்சு விட்டு, நெஞ்சைப் பிடித்துக் கொண்டு...

"அம்மா, அம்மா... என்னம்மா செய்யுது உங்களுக்கு?"

"நெ.. நெஞ்... நெஞ்க... வ... வலி" அவள் துடித்தாள்.

அடுத்த ஐந்து நிமிடங்களில் ஸ்ரீதர் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அம்மா சேர்க்கப்பட்டாள்.

பத்து நாள் காரியங்கள் முடிந்து விட்டன. அம்மா உயிருடன் இல்லை என்பதை ஸ்ரீதரால் ஜீரணிக்கவே முடியவில்லை. டாக்டர் என்ற முறையில் எத்தனை சாவுகளைப் பார்த்திருப்பான். எத்தனை வேதனைகளை சந்தித்திருப்பான். கல்லூரி நாட்களில் ஜி.எச்.சில் பார்த்த கேஸ்களும், மரணங்களும்...

கல்லூரி சேர்ந்த புதிதில் நோயில் விழுந்து ஜீவ மரணப் போராட்டத்தில் துடிக்கும் உயிர்களை காணச் சகிக்காமல் ஆண் என்ற காரணத்தால் உணர்வுகளை வெளிக்காட்ட முடியாமல் பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டு கொண்டு கதறிய நாட்கள் எத்தனை...

அப்போதெல்லாம் அம்மாதான் அவனுக்கு ஆறுதல் தரும் நிழல் மரம்.

"கடலுலகினில் வரும் உயிர் படும் இகள்'னு அருணகிரிநாதரே பாடறார். பூமியில பிறக்கற ஒவ்வொரு உயிரும் ஏதோ ஒரு வகையில அவதிப்படறதுப்பா. உடல் ரீதியா அவதிப்பட உயிர்களுக்கு உன்னால ஆறுதல், நிவாரண் கிடைக்க போறதுன்னு நீ சந்தோஷப்படணும்பா. அடுத்த உயிர்களுக்கு ஆறுதலா வினங்கறது எத்தனை பெரிய விஷயம் தெரியுமா? ஆறுதல் மட்டும் இல்ல. நீ அருமருந்தா வினங்கப் போறே. அதை நினைச்சுக்கோ. இந்த கஷ்டமெல்லாம் தூசாப் போயிடும்"

இப்போது அவனே தூசாகிப் போய் விட்டாள். காரியத்துக்கு வந்திருந்த சொந்த உறவினரும் பறந்து விட்டனர். பெரிய வீட்டில் அவன் மட்டும் தனி ஆளாய் அம்மாவின் நினைவுகளோடு... ஏதோ ஒரு மூலையிலிருந்து அம்மா எழுந்து வந்து விடுவாள் போல் ஒரு பிரமையும். இல்லை, இனி வரவே மாட்டாள் என்ற உண்மையும் மாறி மாறி அவனை வாட்டி எடுத்தன. இதிலிருந்து மீளவே அமெரிக்கா ஓடி விடலாம் போல் இருந்தது. கடையாய் அம்மாவுக்கு அதில் விருப்பம் இல்லை என்பதும் அவனுக்கு லேசான உறுத்தலைத் தந்தது. ஆனால், காதலித்தவளும் கிடைக்கவில்லை. அம்மாவும் இனி இல்லை என்றானபின் ஒரு மாறுதலை வேண்டி அமெரிக்கா சென்றால்தான் என்ன?

நாளை அமெரிக்க எம்பஸி செல்ல வேண்டும். திரும்ப வரும்வரை பொறுப்பாய் மருத்துவமனையை பார்த்துக் கொள்ள டாக்டர் சம்பத்தைப் பார்க்க வேண்டும். மனதில் வரிசையாய் பட்டியலிட்டுக் கொண்டே வந்தவன், சதீஷையும் சந்திக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பாவம், சதீஷ். மனதில் ஏதோ குற்ற உணர்வோடு தன்னைப் பார்க்கவே தயங்குகிறான். இருந்தாலும், அம்மாவின் காரியங்கள் முடியும் வரை கூடவே இருந்து ஆறுதல் சொல்லி... உண்மையான நண்பன் தான்.

மாதங்கி விஷயமாய் எந்த குற்ற உணர்வும் வேண்டாம் என்று தெளிவுப்படுத்த வேண்டும்.

எண்ணங்களின் அழுத்தத்தில் அப்படியே உறங்கிப் போனான் ஸ்ரீதர்.

16

சிப்ஷனுக்கு வந்த கூட்டம் மெல்லக் குறைந்தது.

"நிகழ்ச்சியின் நிறைவுப்பாடல் குயி படத்திலிருந்து" என்ற அறிவிப்பைத் தொடர்ந்து பாடகர் மென்மையாய் ஆரம்பித்தார்.

"யார் சொல்வதோ யார் சொல்வதோ பதில், யார் சொல்வதோ யார் சொல்வதோ மொட்டு ஒன்று மலர்ந்திட மறுக்கும், முட்டும் தென்றல் தட்டித்தட்டித் திறக்கும் அது மலரின் தோல்வியா? இல்லை, காற்றின் வெற்றியா..."

கோட்டும் சூட்டும் கழுத்தில் மலர் மாலையுமாய் நின்று கொண்டிருந்த சதீஷின் மனதில் பாடல் தைத்தது. இத்தத் திருமணம் கூட அவனின் தோல்வியும் மாதங்கியின் வெற்றியும் தானோ? முகமெல்லாம் பூரிப்பாய் புது மனைவியாய், அருகே நின்று கொண்டிருந்த மாதங்கியை ஓரக்கண்ணால் பார்த்தான். வெற்றிச் சிரிப்பு தான் அவன் முகத்தில். இவன்தான் போலியாய் சிரிக்க வேண்டிய தோல்வி நிலையில் ஸ்ரீதர் அருகே நின்றிருக்க வேண்டியவன்... அவன் கழுத்தில் தாலி கட்டி பலமணி நேரம் ஆன போதிலும் இந்த எண்ணத்தை மட்டும் அவனால் மாற்ற முடியவில்லை. அவன் மேல் கோபம் மனதில் எரிமலையாய் குமுறியது.

"என்னடா, மனைவியை அப்படி கண்ணாலேயே விழுங்கறே? இன்னும் கொஞ்ச நேரத்துல ரெண்டு பேரையும் தனிமையில விடுவாங்க. அப்போ ரொமான்ஸை கன்டின்யூ பண்ணுப்பா. இப்ப சாப்பிட வா."

நண்பன் அழைக்க, மாலையைக் கழட்டி நாற்காலியின் முதுகில் மாட்டி விட்டு நண்பனோடு டைனிங் ஹாலை நோக்கி நடந்தான். மாதங்கியும் தொடர்ந்தாள். அவளைப் பொருட்படுத்தாமல் அவன் நடந்தான்.

வெற்றிலை பாக்கை மென்றபடி 'அப்பாடா' என்று அறைக்குள் வந்து உட்கார்ந்தவளை நண்பர்கள் விடவில்லை.

"இப்பவே அசந்துட்டா எப்படிடா, மாப்ள?"

"டேய், மசமசன்னு உட்காராதேடா. பொண்ணை ரொம்ப நேரம் காக்க வைக்கக் கூடாது" எல்லை மீறிய ஜோக்குகள் தூள் பறந்தது அங்கே.

"அண்ணா" என்று அழைத்தபடி அவளுடைய புது சட்டையோடு உள்ளே நுழைந்தாள் கபா. ஒரு வாரம் முன்புதான் அவளுக்கும் முரளிக்கும் நிருமணம் முடிந்திருந்தது. புதுப்பெண்ணின் சந்தோஷம் முகத்தில் மின்னியது. அந்த நிலையிலும் சதீஷுக்கு அவன் மகிழ்ச்சி சந்தோஷத்தைத் தந்தது.

"இந்த சட்டை வேட்டியை மாத்திக்கோண்ணா. டி, அப்புறம் இதெல்லாம் உனக்கு வந்த வாழ்த்துக் கார்டு. டயம் கிடைக்கும் போது பாரு."

"அவனுக்கு தந்தியைப் பார்க்க இதுவா நேரம். நல்ல சமயம் பார்த்தே போ." மீண்டும் நண்பர்கள் கேலி குடு பிடிக்க, கபா தாருக்காய் அங்கிருந்து விலகினாள்.

17

புதனிவு அறை எனையாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாதங்கி இன்னும் வரவில்லை. மனம் குமைய அமர்ந்திருந்தான் சதீஷ். எத்தனை ஆசையும் எதிர்பார்ப்புமாய் நகர்ந்திருக்க வேண்டிய தருணங்கள். இங்கே வெறுப்பிலும் வேதனையிலுமாய் கழிகிறது...

தங்கை கொடுத்திருந்த வாழ்த்துத் தந்திகளை புரட்டினான். தேவி வர முடியாத நிலை நண்பர்கள் வாழ்த்தி இருந்தார்கள். ஸ்ரீதரின் நினைவு தவிர்க்க முடியாமல் எட்டிப் பார்த்தது. காலையில் மறக்காமல் அமெரிக்காவிலிருந்து மண்டபத்திற்கே போன் செய்து வாழ்த்துப் பேசினான். இவனால் தான் சரியாகப் பேச முடியவில்லை.

அமெரிக்கா கிளம்பும் முன் கூட இவனைப் பார்த்துப் பேச பலமுறை முயன்றிருக்கிறான். ஸ்ரீதர். சதீஷ் கேம்ப் போய் விட்டதால் சந்திக்க முடியவில்லை. இவன் வரும்போது அன்று ஸ்ரீதர் அமெரிக்கா கிளம்பும் நாள் என்பதை புரிந்து கொண்டு ஏர்போர்ட்டுக்கே ஓடினான்.

"உன்னைப் பார்க்காமலே ஊருக்குப் போயிடுவேனோனு நினைச்சேன்டா. நல்லவேளை சந்திச்சுட்டேன்."

"பயணிகளை ப்ளேன்ல ஏறச் சொல்லி அழைப்பு வந்தாச்சு"

"இன்னும் பைனல் கால் வரலையே. அதுக்குள்ள பேசிடறேன். அம்மா யோசிப்பே என் கூடவே இருந்தே. அது எனக்கு எவ்வளவு ஆறுதலா இருந்தது தெரியுமா?"

"சே, என்னடா... யாரோ மூணாவது மனுஷங்கிட்டப் பேசற மாதிரி பேசறே."

அவள் கைகளைப் பற்றிக் கொண்டான் ஸ்ரீதர்.

"அப்படி இல்லடா. உன் நட்பு எனக்கு

உலகின் முதல் சைக்கிள்!

முதன் முதல் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டது எப்போது தெரியுமா? 1790-ல். இந்த சைக்கிள் மரச் சட்டத்திலான கைப்பிடியும், முன்பக்கம் பின்பக்கம் சக்கரமும் கொண்டிருந்தது.

இந்த சைக்கிளுக்கு பெடல் கிடையாது. கைப்பிடியை[பார்] இப்படியும் அப்படியுமாக திருப்ப முடியாது. நேர்க்கோட்டில் தான் செல்ல முடியும்.

ரீண்ட காலத்துக்குப் பிறகு தான் இப்போதுள்ளபடி சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டது.

-ராதா செல்வம்.

ரொம்ப முக்கியம். அதை யாருக்காகவும் எதுக்காகவும் நான் இழக்கத் தயாரில்லை'' கைகளை மென்மையாய் அழுத்தினான். சதீஷ் கண்கள் பனிக்க தலையைத் தழுவித்துக் கொண்டான்.

''அம்மா போன சமயம் உன்கிட்ட பேச முடியலை. இப்ப சொல்றேன். மாதங்கி உன்னைக் கல்யாணம் செஞ்சுக்கறதுல எனக்கு எந்த வருத்தமும் கிடையாது. நம்ம நட்பு எப்பவும் போல தொடரணும், சரியா? உனக்கு எந்த குற்ற உணர்ச்சியும் வேண்டாம்.''

அவனை நிமிர்ந்து பார்த்த சதீஷால் பேச முடியவில்லை. 'ஸ்ரீதர் நீ எவ்வளவு உயர்ந்தவன்டா' என்று அவன் கண்கள் மின்னின.

பலமணிநேரக்கால கடைசி அழைப்பு வர, மேலே எதுவும் பேசாமல் மௌனமாய் விடைபெற்றான் ஸ்ரீதர். சதீஷ் ரொம்ப நேரம் அப்படியே நின்றிருந்தான்.

மிக அருகே வளையல் சப்தம் கேட்க, சதீஷ் நினைவிலிருந்து கலைந்தான். அருகே-

சிரித்த முகமாய் தந்தச்சிலை மாதங்கி.

முகத்தை திருப்பிக் கொண்டான். அவள் மெல்ல அருகே வந்து பால் சொம்பை மேஜைமேல் வைத்தாள். அவன் அருகே இடம் விட்டு அமர்ந்து கொண்டாள்.

''என் மேல கோபம்தானே?'' மென் புன்னகை தவழக் கேட்டாள். இதமான அவள் குரலிலும், அழகிலும், அந்தச் சூழலிலும் எவரும் உருகி இருப்பான்.

ஆனால், சதீஷால் இதையெல்லாம் ரசிக்க முடியவில்லை. அம்மாவையும் இழந்து தனி மரமாய் விமானம் ஏறிய ஸ்ரீதர் தான் அவன் கண்முன் நின்றான். அவள் அம்மா இறக்க, அவன் தேவதாலாய் ஊர் விட்டுப் போக- எல்லாவற்றிற்கும் காரணம் இவள்-இதோ என் முன் நிற்கும் இந்த நச்சுப் பாம்பு...

தான் நினைத்ததை சாதித்துக் கொண்டு, சாதுவாய், 'கோபமா?' என்று கேட்பதைப் பார். அடக்கி வைத்திருந்த உணர்ச்சியெல்லாம் பீறிட கொட்டித் தீர்த்தான் சதீஷ்.

''கோபமா? எனக்கா? எனக்கு அந்த உரிமை கூட இருக்கா என்ன? என் தங்கைக்கு வாழ்க்கை பிச்சை கொடுத்து என்னை மையா விலைக்கு வாங்கி இருக்கே. அடிமைக்கு கோப தாபமெல்லாம் ஏது?''

''உங்க கோபம் நியாயமானது தான். ஆனா, உங்க மேல நான் வெச்சிருக்கற அன்பை நீங்க புரிஞ்சுக்கலையா?''

''அன்பு இல்லை, ஆசை. இந்த உடல் மேல நீ வச்ச ஆசை.''

''சதீஷ்...''

''அந்த ஆசைக்கு நீ கொடுத்த பலி ரெண்டு பேர். ஒருத்தர் ஸ்ரீதரோட அம்மா. உயிரே போயிடுச்சு. அடுத்தது ஸ்ரீதர். அவள் ஜீவனே போயிடுச்சு. அவங்க சமாதியில உன் சந்தோஷ சாம்ராஜ்யத்தை ஆரம்பி. உன் ஆசையை நிறைவேத்திக்கோ. வா. லைட்டை அணைச்சுட்டு வா, வேண்டாமா?''

மாதங்கி வார்த்தை அடிகளைத் தாங்காதவனாய் துவண்டு போனாள். வீட்டில் செல்லப் பெண். எல்லோருக்கும் உதவுவது அவள் இயல்பு என்பதால் அக்கம் பக்கம் எல்லோருக்குமே பிரியமான பெண். அவளை நகர்ந்து நில் என்று கூட யாரும் சொன்னதில்லை. இதுவரை. ஆனால், அவள் ஆசையாய் விரும்பி மணந்த கணவன் நெருப்பாய் வார்த்தைகளை சூடு பரப்புகிறான். அவளின் மெல்லிய கண்ணீர்க்கோடுகளால் அந்த நெருப்புக் குன்றைத் தணிக்க முடியுமா? அவளாகத் தேடிக் கொண்ட வாழ்க்கை. வசந்தப் பூக்களை பறிக்க முட்பாதையைக் கடக்க வேண்டுமானால் பொறுமை தேவை. அதனால் மெல்ல ''ஒருத்தரைப் பிடிக்காம போக ஏதாவது காரணம் இருக்கும். ஆனா, பிடிச்சுப் போக இது தான் காரணம்னு சொல்ல முடியாதும்பாங்க. ஆனா, உங்களைப் பிடிச்சுப் போக, நிச்சயம் உங்க உடல் மேல எனக்கிருந்த மோகம் காரணம் இல்லை. அந்த வகையில பார்த்தா, உங்களை விட டாக்டர். பர்சனாலிட்டி கூட... உங்க நண்பருக்கு ஏற்பட்ட வலி காரணமா, என் உண்மை மனச உங்களுக்குப் புரியலை. போகட்டும். என்னை நீங்க புரிஞ்சுக்கற காலம் ஒண்ணு வரும். முழுமனசோட என்னை உங்க மனைவியா நீங்க ஏத்துக்கற காலம் வரும் வரை நான் காத்திருப்பேன்... குட்நைட். நீங்க லைட்டை மட்டும் அணைக்கலாம்.''

அவன் சற்றும் எதிர்பாராத விதம் பளிச்சென்று பேசிவிட்டு தலையணையை இழே போட்டுக் கொண்டு படுத்து விட்டாள். அந்த இரவு இருவருமே உறங்கவில்லை...'

எதுவுமே நடக்காதது போல், மறுநாள் முதல் மிக இயல்பாய் வளைய வந்தாள் மாதங்கி. இரண்டு மாத படிப்பு பாக்கி இருந்தது. காலையில் எழுந்து டிபன் செய்து மாமியாருக்கு சமையலுக்கும் உதவுவாள். ஏழரை மணிக்கு மாடியில் கண் தெரியாத கல்லூரி மாணவிக்கு ஒரு மணி நேரம் படிக்க உதவி செய்வாள்.

கல்லூரியிலிருந்து திரும்பிய பின் ஏழைச் சிறுவர் சிறுமியருக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பாள். சனி ஞாயிறுகளில் முதியோர் இல்லங்களுக்கு மதிய வேளைகளில் சென்று சின்னச் சின்ன உதவிகள் செய்வாள்.

சதீஷ் அவளைப் பற்றியே கவலைப்படாமல் முழுத்தவரை டூர்ப்ரொக்ராம் போட்டுக் கொண்டு வீட்டிற்கு வருவதையே தவிர்த்தான். வீட்டில் இருந்த நேரமும் அம்மாவுக்காக மனைவியிடம் இரண்டு வார்த்தை பேசுவானே தவிர மற்றபடி மாதங்கியை பொருட்படுத்தவே இல்லை.

புதுமணத் தம்பதிகளை உறவினர் விருந்துக்கு அழைத்தார்கள். சதீஷ் 'ஆபீஸில் லீவ் இல்லை' 'டூர் போய்விடுவேன்' என்றெல்லாம் காரணம் காட்டி விருந்தை தவிர்த்து விட்டான். தவிர்க்க முடியாமல் மாதங்கி வீட்டு விருந்துக்கு மட்டும் போய் வந்தாள். அதுவும் விருந்து முடிந்தவுடன் இளம்பி விட்டான். சுபாவும் முரளியும் சந்தோஷமாய் எல்லா விருந்துக்கும் போய் வந்தார்கள். சம்பந்தி பதில் மரியாதை என்று சதீஷ் வீட்டில் சுபா, முரளி, முரளியின் பெற்றோர் என்று எல்லோரையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள். சதீஷின் அம்மா சம்பந்தி வீட்டினரை விழுந்து விழுந்து கவனித்தார். கலகலவென்று சிரிப்பும் கேலியுமாய் எல்லோரும் மகிழ்ச்சியாய் பேசிச் சிரிக்க, தண்ணீரில் கலந்த எண்ணெயாய் எல்லோருடனும் கலந்தும் கலக்காமலும் தவித்தவர்கள் சதீஷும் மாதங்கியும் தான். ஆனால் வெளியே எதையும் காட்டிக் கொள்ளாமல் நடந்து கொண்டார்கள்.

கை கழுவும் போது கலாவதி மகனை தனியே ஓரம் கட்டினார்.

''மதும்மா, சந்தோஷமா இருக்கியாடாம்மா? மாப்பிள்ளை உன்னை நல்ல வெச்சிருக்காராடா?''

சற்றே மென்று முழுங்கினாலும் சமாளித்துக் கொண்டான் மாதங்கி.

''ந...நல்லாவே என்னைப் பார்த்துக்கறார்மா.''

''சந்தோஷம்டா. பிடிவாதமா அவரை மணந்துகிட்டியே. அதுவும் அவரோட நண்பர் விரும்பின பொண்ணு நீ. அந்த விருப்பத்தை மறுத்துட்டு இவரை கல்யாணம் செஞ்சுகிட்டியே. ஒரு வேளை உன்கிட்ட கோபமா இருப்பாரோனு நினைச்சேன். நல்ல வேளை அப்படியெல்லாம் இல்லை. எங்கிட்டயும் மரியாதையாத் தான் நடந்துக்கறார். ரெண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்.''

அந்தத் தாயுள்ளம் உண்மையாய் வாழ்த்தியது.

ஆனால் இன்னொரு தாயுள்ளமோ பதைத்தது. மாதங்கி விரும்பி ன் மகனை மணந்தாலும், மகன் அவளிடம் அதிகம் ஒட்டவில்லையோ என்ற சின்ன சந்தேகம் காவேரி அம்மாளுக்கு. புதுமண ஜோடிகளாய் அவர்கள் எங்கும் போய் பார்க் என்று போகவில்லை. இதையும் மனதில் குறித்துக் கொண்டார் காவேரி அம்மாள்.

மெல்ல மகளிடம், ''ஏண்டாப்பா, கல்யாணத்துக்கு முன்னாடி இருந்தா மாதிரியே இப்பவும் இருந்தா சரியா?'' என்றார்.

''அம்மா, எனக்கு வேலை ஜாஸ்தி. அடுத்தது, எங்க ரெண்டு பேருக்குமே ஊர் சுத்தறதை விட பிறருக்கு உதவி செய்யறது பிடிச்சிருக்கு. விடு'' என்று கத்தரித்து விட்டான்.

இதை கேட்டுக் கொண்டிருந்த மாதங்கி மனதுள் வருத்தம் எழுந்தது. சமூக சேவை செய்வது ரொம்ப பிடித்தமான விஷயம் தான்

ஆனால், புதுமணப் பெண்ணுக்கு கணவனுடன் கழிக்கும் ஒவ்வொரு நிமிடமும் சொர்க்கம் இல்லையா? அவள் மனமே புரியாத சதீஷுக்கு, அவள் மனதில் ஏக்கமா புரியப் போகிறது? மாதங்கியுடனான விழுங்கிக் கொண்டான். எது எப்படி இருந்தாலும், திருமணமே அவன் விரும்பாமல் நடந்துவிட்டது. அதனால், இனி தன்னால், அந்த வீட்டில் அவன் விரும்பாத எதுவும் நடந்து விடக் கூடாது என்று உறுதியாய் இருந்தாள். அவனை நெருங்காமல் விலகியே அந்த வீட்டில் வளைய வந்தாள்.



மாதங்கியின் தோழி அனிதா அவளின் திருமணத்திற்கு அழைக்க வந்திருந்தாள்.

அனிதாவும் மாதங்கியும் ஒன்றாம் வகுப்பிலிருந்து நெருங்கிய தோழிகள். மாதங்கி திருமணத்தின் போது கூடவே இருந்தாள் மூன்று நாட்களும்.

"ஏய், நான் உன் கல்யாணத்தின் போது கூடவே இருந்தேன். அடுத்த வாரம் என் கல்யாணம். நீ உன் கணவரோட கண்டிப்பா வந்து மூணு நாள் என்னோட தங்கிடணும், சரியா?" நூறு முறை அழைத்து விட்டாள். சதீஷையும் வருந்தி அழைத்தாள்.

"மூணு நாள் வந்து தங்க முடியுமானு தெரியலை, அனி. நிச்சயம் மூணு வேளை வந்துடறேன்"என்று மாதங்கி வாக்குக் கொடுத்திருந்தாள், ஓரக்கண்ணால் கணவனைப் பார்த்தபடி.

அன்று இரவு தயங்கித் தயங்கி சதீஷிடம் நினைவுபடுத்தினாள்.

"எப்ப வேணும்னாலும் போ. என்கிட்ட வந்து ஏன் சொல்றே?"

அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

"இல்ல.. நாம ரெண்டு பேருமா போகணும்."

அவன் மறுத்து ஏதோ சொல்ல வந்து நிறுத்திக் கொண்டான்.

"என்னிக்குக் கல்யாணம்?"

"வெள்ளிக்கிழமை. வியாழன் மாப்பிள்ளை அழைப்பு. மூணு வேளையும் நாம போகணும்."

"சரி..."

வெள்ளிக்கிழமை.

முதன்முதலாய் சதீஷோடு வெளியே போகப் போகும் பூரிப்பு அவளுக்கு. பார்த்துப் பார்த்து அலங்கரித்து கொண்டாள். நேரம் ஓடியது ஆறு... ஏழு... எட்டு... எட்டரை...

மாதங்கி உள்ளுக்கும் வாசலுக்குமாய் அலைந்தாள். அவன் வரவில்லை.

ஒன்பதரை மணிக்கு சாவகாசமாய் வந்தான் சதீஷ். மாதங்கிக்கு ஏமாற்றம் நெஞ்சை அடைத்தது. வெளியே காட்டிக் கொள்ளாமல் அவன் பின்னாலேயே உள் அறைக்குச் சென்றாள்.

அவன் ஒரு 'சாரி' சொல்வான் என்று எதிர்பார்த்தாள். அவனோ அவளைப் பொருட்படுத்தாமல் லுங்கிக்கு மாறி முகம் கழுவப் போனான்.

வெளியே வந்தவளிடம் மெல்லக் கேட்டான். "கல்யாணத்துக்குப் போறோம்னு நினைச்சு ஒண்ணும் சமைக்கலை..."

"ஏன்? நீயும் நானும் கல்யாணத்துக்குப் போனா, எங்கம்மா பட்டினி இடப்பாங்களா?"

இதென்ன குதர்க்கம்? அவள் வாயடைத்துப் போனாள். பின் மெல்ல, "இல்ல அவங்க தோசை வார்த்துக்கறதா சொன்னாங்க, நானே ஊத்திக் கொடுத்துட்டேன். இப்ப நமக்கு ஊத்தவா?"

"நான் சாப்பிட்டாச்சு." முகத்தில் அறைந்தாற் போல் சொன்னான்.

அவள் இன்னும் அலங்கார பூஷணையாகத் தான் நின்றாள். அது அவள் மனதில் துளியும் பதிந்ததாய்த் தெரியவில்லை. ஆசையாய் ஒரு பார்வை இல்லை. ஐயோ பாவம் திருமணத்திற்கு அழைத்துப் போகவில்லையே என்ற ஆதங்கம் இல்லை.

பொறுத்துப் பொறுத்து பார்த்து பின் அவனாகவே மெல்ல கேட்டாள். "நாளைக் காலை கல்யாணத்துக்காவது போகலாமா?"

"ஓ, தாராளமா எப்ப வேணும்னாலும் நீ போய்க்கலாம்."

"நீங்க கூட வர வேண்டாமா?"

"எதுக்கு வரணும்?"

"என் கணவர் என் கூட வரணும்னு நான் விரும்பக் கூடாதா?"

"உன் கணவர். ம்... நான் விரும்பி அந்தப் பதவியை ஏத்துக்கலையே."

"சரி, அது நமக்குள்ள. என்னை தண்டிக்க உங்களுக்கு உரிமை இருக்கு. என் தோழி என்ன பாவம் பண்ணினார? நானும் அவளும் ரொம்ப இணை பிரியாத தோழிகள். இப்படி கல்யாணத்துக்கு அழைச்சுட்டுப் போறேன்னு சொல்லி வாக்குக் கொடுத்துட்டு..." பேசியபடியே அவளைப் பார்த்தவள், அவன் பார்வை வீச்சில் அப்படியே பேச்சை நிறுத்தினாள்.

"எப்படி, எப்படி? இணைப்பிரியா தோழிகள்? வாக்கு கொடுத்தோம். பேஷ். தோழர்கள். உன்னை அவனுக்கு மணம் முடிக்கறதா நானும் வாக்குக் கொடுத்தேன். என்னாச்சு? இதுக்கே இப்படி துடிக்கறியே, என் நண்பன் மனசு எப்படி வேதனைப்பட்டிருக்கும். உன் சந்தோஷம் மட்டுமே பிரதானமா நினைக்கற உனக்கு மத்தவங்க மனசைப் பத்தி என்ன தெரியும்?" முறைத்து விட்டு திரும்பிப் படுத்தான். தூங்கிப் போனான்.

சாப்பிடாமல் அப்படியே படுத்த மாதங்கி, இரவு முழுவதும் தூங்காமல் தவித்தாள்.

மகனுக்கும் மருமகளுக்கும் ஊடல் என்பதை யூகித்த காவேரி அம்மாள், கொஞ்சம் விட்டுப் பிடிப்போம் என்று ஒரு மாதம் பொறுத்துப் பார்த்தார். ஆனால், அவர்கள் எவ்வும் பூனையுமாய் கண்ணாமூச்சி ஆடுவதைக் காண மேலும் சகிக்கவில்லை அவருக்கு. அதனால் மகளிடம் அரிக்க ஆரம்பித்தாள்.

"இதென்னடா, இது? புதுசாக் கல்யாணமான ஜோடி மாதிரியா ரெண்டு பேரும் இருக்கீங்க. ஒரு பீச், சினிமானு கூட எங்கயும் போகாம..."

"இருக்கட்டும் அத்தை. எனக்கும் பரீட்சை வருதில்லை."

"அதுக்காக? ஒரு மூணு மணி நேரம் சினிமாப் பார்த்தா ஒண்ணும் குடி முழுகிடாது. இன்னைக்கு அவனும் ஊர்ல இருக்கான். காலேஜ் விட்டு வந்தவுடனே பசங்க பாடம் அது இதுனு உட்காராம சினிமா போயிட்டு வாங்க."

காவேரி அம்மாளின் புடுங்கல் தாங்காமல், சதீஷ் முதலில் அரை மனதாய் இளம்பினாள்.

"நம்ம பொண்ணை அவங்க வீட்ல எப்படி நல்லா வச்சிருக்காங்க. அந்த வீட்டுப் பொண்ணை ஒரு சினிமாவுக்குக் கூட நீ கூட்டிப் போகலைனா எப்படிடா?" என்ற வரி அவனை அசைத்தது.

மாமியாரை மனதார வாழ்த்திக் கொண்டு சந்தோஷமாய் இளம்பினாள் மாதங்கி. துறவு வாழ்க்கை போல் அவனை நெருங்காமல் வாழ்ந்தாலும், அவளும் ஆசையும் பாசமும் உள்ள சின்னப் பெண் தானே!

சதீஷுக்கே சின்ன குதூகலம் எழுந்தது. என்னதான் வெறுப்பில் மணம் முடித்தாலும், இளம் மனைவியோடு வெளியே இளம்பியது உல்லாசத்தைத் தந்தது. அவனுக்கு மட்டும் மனைவியோடு சந்தோஷமாய் வாழும் வாழ்வில் விருப்பம் இல்லையா என்ன? அவனளவில் எத்தனை கனவுகள் கண்டிருப்பான். மாதங்கியின் பிடிவாதத்தால் எல்லாம் கலைந்தது. அவளைப் பார்க்கும் போதே ஒரு இறுக்கம் மனதைக் கல்லியது. 'இவள் ஸ்ரீதரின் காதலி' என்று மனதில் முதல் முதலாய் பதிந்த பிம்பம் மாறாமல் பிடிவாதமாய் அடிமனதில் அழுத்தியது.

'ஏன் பெண்ணே, நீயும் வதைப்பட்டு என்னையும் வதைக்கிறாய்' என்ற அவன் மௌன அறைல் அவளை வீழ்த்துவதாய் இருந்தது. அந்த இறுக்கத்தில் மூச்சு நிறை மாய்ந்து விடுவேனோ என்ற அச்சம் வலுத்த போதுதான் சின்ன சாளரம் வழியே லீசம் மெல்லிய காற்றாய், அம்மா ஏற்பாடு செய்ய இந்த சினிமா நிகழ்ச்சி அமைத்தது.

பூக்கடையின் முன் வண்டியை நிறுத்தினான். அவளுக்கு என்ன பூ பிடிக்கும் தெரியாது. பத்து ரூபாயை அவளிடம் நீட்டி, "பூ வாங்கிக்க" என்றான்.

அவளுக்கு உலகமே தன் கைக்குள் வந்தது போல் இருந்தது. ஆசையாய் மல்லியை வாங்கி தனை நிறைய வைத்துக் கொண்டாள். சற்று தாமதமாய் கிளம்பி இருந்ததால் எந்தப் படம் என்று முடிவெடுக்காமல் கிளம்பி இருந்தார்கள். அருகில் இருந்த தியேட்டரில் 'என்னம்மா கண்ணு' படம் ஓடியது. "அதற்குப் போகலாமா" என்று அவன் கேட்டவுடன், ஏதோ ஐ.நா. சபையில் இந்தியாவின் கருத்தைக் கேட்டது போல் மிழ்ந்து போய் தலையாட்டினாள். பாவம், அந்தப் படத்தின் கதை மட்டும் தெரிந்திருந்தால் இப்படி மிழ்ந்திருக்க மாட்டானே.

படம் இடைவேளை வரை ஒன்றும் வித்தியாசமாய் தெரியவில்லை. லேசாய் நகர்ந்து உட்காரும்போது அவள் தோள் இடித்ததும், கை வைக்கும் கட்டையில் கை மேல் அவள் கை பட்டதுமே அவளுக்கு சொர்க்கமாய் இருந்தது. இடைவேளையில் அவன் விருப்பம் கேட்டு கூல் டிரிங்க் வாங்கிக் கொடுத்தான். படம் முடியும் தருவாயில் தான் வந்தது வேட்டு.

நண்பனின் காதலி தேவயானிக்கு சந்தர்ப்பம் காரணமாய் அடைக்கலம் கொடுக்கிறார் சத்யராஜ். நண்பன் காதலிக்கு துரோகம் செய்து விட்டு வேறு பெரிய இடத்துப் பெண்ணை மணந்து விடுகிறான். தேவயானி சத்யராஜையே மணப்பதென்று முடிவெடுக்க, "அவன் உங்களுக்கு துரோகம் செஞ்சிருக்கலாம். ஆனா, நான் நட்புக்கு

துரோகம் செய்ய மாட்டேன்'' என்று வசனம் பேசி, தேவயானியை வேறொருவருக்கு மணம் பேசி விடுகிறார் சத்யராஜ்.

மாதங்கி சாதாரணமாய்ப் பார்த்திருந்தால் கிளைமாக்ஸ் குப்பர்என்று சொல்லி இருப்பாள். ஆனால், இப்போதோ நொந்து போனாள். இளம்பிஞ்சு முதல் புன்னகையோடு இருந்த சதீஷின் முகம் சிறுத்துப் போய் இறுகியது. விருட்டென்று இளம்பி விட்டாள். அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவள் பின்னாலேயே ஓடினாள்.

இனிய ஜல் தண்ணீர் மீண்டும் பிரீசரில் வைத்தால் இறுகி விடுவது போல், கனிந்த அவள் மனம் பாறையாய் இறுகியது.



19

கோடை முடிந்து மெல்லிய சாரல் கட்டியம் கூற மழைக்காலம் தொடங்கி விட்டது. முரளிக்கு பெங்களூர் பக்கம் மாற்றல் ஆகிவிட, சுபாவுடன் அவன் அங்கே குடி பெயர்ந்தான். ஊருக்குப் போன மறு மாதமே சுபா தாயாகப் போகும் இனிய செய்தி தாங்கி கடிதம் வந்தது. காவேரி அம்மாளுக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. மைசூர் பாகையும் அல்வாவையும் இளறி எடுத்துக் கொண்டு சம்பந்தி வீட்டுக்கு ஓடினார். மாதங்கியும் மாமியாருடன் அம்மாவைப் பார்க்கப் போனாள்.

''சம்பந்தியம்மா, நாம பாட்டியாகப் போறோம்'' என்று கலாவதியைக் கட்டிப் பிடித்து கொண்டாள்.

கலாவதி சந்தோஷமாய் மகளைப் பார்த்து, ''நீயுமாம கண்ணு?'' என்றாள்.

''ச்சும், நம்மைப் பாட்டியாக்கறதுல முந்திக்கிட்டது எம் பொண்ணில்ல. மாதங்கிக்குச் சாமர்த்தியம் போதல்ல. படிப்பு படிப்புனு ஓடினா. சரி, அது முடியட்டும்னு காத்திருந்தேன். இப்ப என்னடான்னா, அவன் ஒரு பக்கம் வேலை, சமூக சேவைனு ஓடறான். இவ ஒரு பக்கம் சமூக சேவைனு ஓடறா. கல்யாணமாகி ஆறு மாசம் ஓடிப்போச்சு. நானும் நல்ல சேதிக்குக் காத்திருக்கேன்.. ம், எங்கே? உங்க மககிட்ட கொஞ்சம் சொல்லுங்க'' குறைபடும் குரலில் நீட்டி முழக்கினார்.

மாதங்கி தலையைக் குனிந்து கொண்டாள். கலாவதிக்கு கொஞ்சம் கருக் என்று தைத்தது. ஜனமான இந்த அம்மாளின் மகளை மணமகனாய் ஏற்று நல்ல விதமாய் நடத்துகிறோம். அப்படி இருக்க, இந்தம்மாள் தன் மகளைக் குறை கூறுவதாவது. அதுவும் திருமணமாகி ஆறு மாதத்திற்குள் தாயாக ஆகவில்லை என்று யாராவது ஏகவார்த்தை பதிலடி கொடுக்காமல் விடுவதாவது?

சிரித்தபடி மெல்ல கலாவதி, ''என்ன செய்ய? என் மகன் முந்திக்கிட்டான். உங்க மகன் கொஞ்சம் மெதுவா பார்த்துக்கலாம்னு இருக்கார் போல. நீங்களும் உங்க மகன்கிட்ட சொல்லுங்க.. சரி, டிபன் சாப்பிடலாம் வாங்க'' என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியதுபோல் கூறினார். காவேரி அம்மாளின் முகம் விழுந்து போனது.

தான் கருக் என்று பேசும் வார்த்தைகள் மனதில் நிற்பதில்லை. ஆனால், எதிராளி பேசுவது மனதில் ஆறாத வடுவாய் நின்று விடுகின்றன. காவேரி அம்மாளுக்கும் அப்படித்தான் இருந்தது. தான் மாதங்கியை முதலில் குறை கூறினோம் என்பது மனதில் நிற்கவில்லை. மாறாக கலாவதி தன் மகன் மேல் குறை கூறுவது போல் சொன்னது அவரைப் பாதித்தது. அதன் எதிரொலியாய் மாதங்கியை வார்த்தைகளால் சாட்ட தொடங்கினார்.

அவள் அனாதைக் குழந்தைகள் இல்லத்திற்கு சேவை செய்ய என்று இளம்பினால், ''போ, போ... வீட்ல என்ன குழந்தையா குட்டியா? அங்கயாவது போய் நாலு குழந்தையை பாரு? எனக்குத் தான் அந்தக் குடுப்பினை இல்லையே?'' என்பார்.

முதியோர் இல்லத்திற்கு இளம்பினால், ''போய் அந்தக் கிழங்களையாவது திருப்திப்படுத்து. என்னைப் பத்தி என்ன அக்கறை?'' என்பார்.

அதுவும் சுபாவிடமிருந்து வாந்தி, தலைசுற்றல் என்று ஏதாவது கடிதம் வந்து விட்டால் போதும், ''அந்தப் பொண்ணு பாவம் அங்கே தவிக்குது. இங்கே வீட்டை கவனிக்காம சமூக சேவைனு ஊர் கத்தறவங்களுக்காக வீட்டைக் காத்துக் கிடக்க வேண்டி இருக்கு'' என்று புலம்பத் தொடங்கி விடுவார்.

இத்தனைக்கும் மாதங்கி வேலை எல்லாம் முடித்து விட்டுத்தான் எங்கும் இளம்புவாள். அதேபோல், சுபாவும் தனக்கு அங்கே வேலைக்கும் சமையலுக்கும் நல்ல ஆட்கள் கிடைத்திருப்பதால் அம்மா அவசரப்பட்டு அங்கே வர வேண்டாம் என்றும் எழுதி இருந்தாள்.

நாளுக்கு நான் மாதங்கியை வார்த்தையால் வதைப்பது அதிகரித்தது. முதலில் சதீஷ் காது வரை இது செல்லவில்லை. ஆனால், போகப் போக அம்மாவின் புலம்பல் அவள் கவனத்திற்கு வரத் தொடங்கியது. மாதங்கியோடு சேர்ந்து அம்மாவின் மேலும் எரிச்சல் எழுந்தது சதீஷுக்கு. அம்மா மாதங்கியை வார்த்தையால் வறுக்கும் போதெல்லாம், சற்றே மனம் நெகிழ்ந்தாலும் தன்னையும் தன் நண்பனையும் வறுத்திய மாதங்கிக்கு இது தேவை தான் என்று ஒரு மனம் குதூகலிக்கத்தான் செய்தது.

மாதங்கியோ, துடித்தாலும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. கொண்டவன் தூற்றினால் கூரையும் அல்லவா தூற்றும். கணவன் ஆதரவு இல்லாத பெண்களுக்கு, அந்த வீட்டு வேலைக்காரிகூட மரியாதை தர மாட்டாளே. மகன் வாய் மூடி இருப்பது காவேரி அம்மாளுக்கு சவுகரியமாய் போய் விட்டது. இவளை எது சொன்னாலும் செய்தாலும் கேட்பார் இடையாது என்ற முடிவிற்கு வந்தார்.

சொல்லால் முதலில் வருத்தியவர், பின்னர் சின்னதாய் மகன் அறியாவண்ணம் இடிப்பது, குட்டுவது என்று கை ஓங்கினார். அடுத்தவர் துன்பம் கண்டே பொறுக்காத மாதங்கி, மாமியாரின் செய்கையால் அதிர்ந்து, துவண்டு போனாள்.

ஆசாவு தாத கணவனிடமா சொல்லி அழ முடியும்? சொன்னால்தான் நம்புவானா?

''ஏதோ எங்கம்மா உன்னை ரெண்டு வார்த்தை பேசிட்டாங்க. அதுக்காக அதிகமா அவங்க மேல பழி சுமத்தாதே'' இப்படித்தானே சொல்வான். மனைவியிடம் அன்பாய் இருக்கும் பல கணவன்மார்கூட அம்மாவா மனைவியா என்று வரும்போது அம்மா பக்கம்தானே- அது நியாயமில்லாத போதும்- பேசுகிறார்கள். அது போலத்தான்.

சதீஷ் தன்னிடம் அன்பாகத்தான் இருக்கிறார். ஆனால், அம்மா பக்கம்- உலக வழக்கப்படி- பரிந்து பேசுகிறார்என்று எடுத்துக் கொள்வோமே என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள், பாவம்!

காவேரி அம்மாளோ விதம் வேண்டுதல் என்ற பெயரில் அவளை பல நாட்கள் பட்டினி இடக்க வைத்தார். கோவில் கோவிலாய் அடிப்பிரதட்சிணம், அங்கப்பிரதட்சிணம் செய்ய வைத்தார்.

கடவுளே மனம் இறங்கினாலும், கணவன் மனம் இறங்காத வரை எப்படி பிள்ளை வரம் கிடைக்கும்?

சொல்லவும் முடியாமல் விழுங்கவும் வழி இல்லாமல் தவித்தபடி எல்லாவற்றையும் தாங்கப் பழகினாள் மாதங்கி.

சீமந்தம் வளைகாப்பு யாராவது தெரிந்தவர் நடத்தினால் போதும்! ''மறுமனை அடுக்கிக்க என் மருமகள் வந்துடுவா'' என்று அழைத்து போய் விடுவார்.

ஏதோ திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்காது போலும், அதற்கு இவளே பொறுப்பு என்பது போலும் பலரது பார்வைகள் இவளைத் துளைக்க, மாதங்கி கூசிப் போவாள்.

போதாத குறைக்கு காவேரி அம்மாள் வேறு, ''இன்னும் குழந்தை பிறக்கலை. அவ அவ கல்யாணமான மறு மாசமே வயத்தை சாய்ச்சுகிட்டு வந்துடறாளுங்க. இவளுக்கு எங்கே? அந்த சாமர்த்தியமோ கொடுப்பினையோ இடையாது'' என்று சபை என்றும் பாராமல்

விடும்போது புதிதாக காற்று உள்ளே செல்கிறது. இதனால் கூடுதல் ஆக்சிஜன் நுரையீரலுக்கு செல்ல, போதுமான காற்று கிடைத்ததும் அது தனது பணியை சீராக செய்யத் தொடங்கிவிடுகிறது.

இப்போதாவது கொட்டாவிக்கு அர்த்தம் என்ன என்பது புரிகிறதா?

-திருமகள்.

கொட்டாவி வருவது ஏன்?

கொட்டாவி வருவது ஏன்? என்பதற்கு பல பேர் தூக்கமின்மையால் வருகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் இல்லை.

நுரையீரலுக்கு போதுமான காற்று குறையும் போது நமக்கு கொட்டாவி ஏற்படுகிறது. அப்படி கொட்டாவி

பெரிய குரலில் பேசுவார். கூடவே பெருமையாய், ''எங்க சுபா முழுகாம இருக்கா தெரியுமா?'' என்பார்.

சதீஷை நேசித்ததை தவிர நான் என்ன செய்தேன்? அது பாவமா? எதற்கு இப்படி ஒரு தண்டனை எனக்கு என்று அந்த இரவு முழுவதும் அழுது கரைவாள் மாதங்கி. ஒரு சின்னச்சொடி கூட வாடக்கூடாது என்று கவனமாய் இருந்த மென்உள்ளம் படைத்த மாதங்கியின் உள்ளமோ, காய்ந்த சருகை விடக் கேவலமாய் வாடிக் கிடந்தது.

காவேரி அம்மாளின் அண்ணன் மகளுக்கு குழந்தை பிறந்திருந்தது. உறவினர் என்ற முறையில், மாதங்கியும் மாமியாருடன் சென்றிருந்தாள்.

குழந்தையை அள்ளி எடுத்துக் கொஞ்சிய காவேரி அம்மாள் அண்ணன் மகளை அழைத்தார். அண்ணன் மகள் ரத்னாவோ வெண் பற்களைக் காட்டி சிரித்தபடி ''என்ன அத்தை? பேரனைப் பார்த்தியா? என்ன சொல்றான்'' என்று கேட்டபடி குழந்தையை பெற்றுக் கொண்டாள். குழந்தை என்றவுடன் யாருக்கும் ஏற்படும் இயல்பான ஆர்வத்தில், மாதங்கி ஆசையாய் குழந்தையைப் பார்க்க ரத்னா, குழந்தையை அவளிடம் நீட்டினாள்.

வெடுக்கென்று குழந்தையை இடை புகுந்து வாங்கிக் கொண்ட காவேரி அம்மாள், ''இதுக்குத் தான் உன்னைக் கூப்பிட்டேன். இப்படிப்பட்ட மலடி கையில எல்லாம் குழந்தையைக் கொடுத்துடாதே. போ, போய் கத்திப் போடு குழந்தைக்கு'' என்றார். ரத்னாவிற்கே ஒரு மாதிரி ஆனது.

மாதங்கி கண் கலங்க அங்கிருந்து இளம்பி விட்டாள். வீட்டிற்கு வந்த மாமியார் தாம் தூம் என்று குதித்தார். ''என்ன சொல்லிட்டேன்னு இப்படி பொசுக்குனு கிளம்பி வந்துட்டா? ஒரு மட்டு மரியாதை வேண்டாம்? என் மகனுக்கும் உன்னோடதான் கல்யாணமாச்சு. அவ முழுகாம இருக்கா. ஒரு பிள்ளையை சுமக்க வக்கில்ல என்ன வெட்டி ரோஷம் வேண்டிக்கிடக்கு?''

மாதங்கி பேசாமல் 'சத்திய சோதனை' புத்தகத்தை எடுத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள்.



கணவனின் பாராமுகமும், மாமியாரின் படுத்தலையும் மறக்க இன்னும் அதிகமாய் சமூக சேவையில் ஈடுபட ஆரம்பித்தாள் மாதங்கி. வேலைக்கும் முயற்சி செய்ய நினைத்தாள். அதுபற்றி சதீஷிடம் பேச நேரம் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

சதீஷ் வழக்கமாகவே அலுவலகம் முடிந்து தான் நடத்தும் சேவை மையத்திற்கோ, அதன் மூலம் நடக்கும் சேவை நிகழ்ச்சிக்கோ போய் விட்டு மாலை எட்டு மணிக்கு மேல் தான் வீடு திரும்புவான். திருமணத்திற்குப் பிறகோ ஒன்பது மணிக்குக் குறைந்து வீடு திரும்புவதில்லை என்பதில் பிடிவாதமாய் இருந்தான்.

அன்று என்னவோ அதிசயமாய் ஐந்து மணிக்கே வீடு திரும்பி விட்டான்.

''அம்மா காபி...'' என்று குரல் கொடுத்து விட்டு, முகம் கழுவித் துடைத்து பால்கனியில் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டான். அருகே சின்ன டீ-இன்-ஒன்னில் பாடலை ஓட விட்டான்.

சங்கர் மகாதேவனின் குரல் காதில் பாய்ந்தது.

'இல்லை இல்லை சொல்ல ஒரு கணம் போதும்..

இல்லை என்ற சொல்லை தாங்குவதென்றால்

இன்னும் இன்னும் எனக்கோர் ஜென்மம் வேண்டும் என்ன சொல்லப் போகிறாய்?...'

கையில் காபியோடு வந்த மாதங்கி சின்ன மேஜையில் வைத்து விட்டு சுவற்றோரம் சாய்ந்து நின்றாள். 'என்ன' என்பது போல் பார்த்தான் சதீஷ். அவள் மௌனமாய் பார்த்தாள்.

'காதலின் கேள்விக்கு கண்களின் பதில் என்ன மௌனமா? மௌனமா?...' அவள் கண்கள் இறைஞ்சின.

'அன்பே எந்தன் காதல் சொல்ல
நொடி ஒன்று போதுமே
அதை நானும் மெய்ப்பிக்கத்தானே ஒரு
ஆயுள் வேண்டுமே...'

என் அன்பை மெய்ப்பிக்க இந்த ஆயுள் போதாதா? பாடலின் வரிகளும் அவள் மௌன இறைஞ்சலும் அவனை அசைத்தன. அதை வெளிக்காட்ட விரும்பவில்லை. கண்டிப்பான குரலில் ''என்ன வேணும்?'' என்றான். ஆனால் குரல் பிசிறியது.

''வேலைக்கு டிரை பண்ணலாம்னு இருக்கேன். என்ன சொல்றீங்க?''

''உன் வாழ்க்கை, நீ முடிவெடு. நான் என்ன சொல்ல?''

''என் கணவர் நீங்க. உங்க கருத்து..''

''தாலி கட்டிட்டா கணவனா? நல்ல

தமாஷ்'' ஏதோ ஜோக் சொன்னது போல் சிரித்தான். கவலைப்படாமல் சங்கர் மகாதேவன்,

'இதயம் ஒரு கண்ணாடி
உனது பிம்பம் வீழ்ந்ததடி
இதுதான் உன் சொந்தம் இதயம்
சொன்னதடி!
கண்ணாடி பிம்பம் கட்டக்
கவிதொன்றும் இல்லையடி
கண்ணாடி நெஞ்சில் பிம்பம் ஆடுதடி...'

என்று தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தார்.

அவள் முகம் வாடியது. சற்று நேரம் அப்படியே நின்றாள். சதீஷ் கண்களை மூடிக் கொண்டான். அவள் மெல்ல அங்கிருந்து நகர்ந்தாள். மெல்லிய பூவின் மணமும் வளை ஓசையும் அவளைப் பின் தொடர்ந்தன..

கேசட்டில் தித்ரா, 'கண்ணாமூச்சி ஏனடா... என் கண்ணா நான் கண்ணாடி பொருள் போலடா...' என்றார்.

மூடிய அவன் கண்களுக்குள் மாதங்கியே இறைஞ்சுவது போல இருந்தது.

'என் மனம் உனக்கொரு விளையாட்டு பொம்மையா? எனக்கென உணர்ச்சிகள் தனியாக இல்லையா? நெஞ்சின் அலை உறங்காது...' அவன் பாடலை அப்படியே நிறுத்தி விட்டு எழுந்து போனான்.

இரவு சாப்பிடும் போது காவேரி அம்மாள் ஆரம்பித்தார். ''சுபாவுக்கு ரெண்டு மாசத்துல சீமந்தம் பண்ணனும். அவளுக்கு டாக்டர் அங்கேயே செக்-அப் செய்யறதால பிரசவத்தை பெங்களூர்லேயே வச்சுடலாம்னு மாப்பிள்ளை நினைக்கிறார். பிரயாணமும் அவளுக்கு நல்லதில்லைனு டாக்டர் சொல்றாங்களாம். அதனால, சீமந்தத்தை பெங்களூர்லேயே வச்சுடலாம்னு சம்பந்தி வீட்ல முடிவு செஞ்சிருக்காங்க. நாம சீர் எல்லாம் செய்யணும்.''

''செஞ்சுடலாம்.''

''சீமந்தம் முடிஞ்ச கையோட நான் அங்கயே தங்கிடப் போறேன் சுபாவுக்கு உதவியா.''

''சரி''

''இங்க என்ன பிள்ளையாகுட்டியா? நான் இல்லாட்டி யார் கஷ்டப்படப் போறாங்க?''

பரிமாறிக் கொண்டிருந்த மாதங்கி, மெல்ல சமையல் அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

'என் மனம் உனக்கொரு விளையாட்டு பொம்மையா?

எனக்கென உணர்ச்சிகள் தனியாக இல்லையா?'

சதீஷின் மனதில் பாடல் வரி ஓடியது. மாதங்கியின் இறைஞ்சலாம். அம்மா அவளை நோகடிக்க, தான் அவளை நெருங்காமல் இருப்பது தானே காரணம் என்ற குற்ற உணர்வு ஏற்பட்டது. நெருங்க முடியாமல் தவிக்க- தவிக்க- காரணம் அவள் நண்பனின் காதலி. சே... கோபமும் எரிச்சலும் எழ அம்மாவை முறைத்தான்.

''உன்னை யாரும் போக வேண்டாம்னு சொல்லலையே. தாராளமாப் போ''

''ஏண்டா என்கிட்ட எரிஞ்ச விழறே? நான் என்ன தப்பா ஆசைப்பட்டுட்டேன்? ஒரு பேரனோ பேத்தியோ கண்ணை மூடறதுக்குள்ள பார்க்கணும்னு விரும்பறது இந்த வயசுல தப்பா? உனக்குத் தான் பல டாக்டர்களைத் தெரியுமே. மாதங்கியும் நீயுமா டெஸ்ட் பண்ணிக்கக் கூடாதா?''

''ஏம்மா பிறக்காத குழந்தைக்காக வாழற ரெண்டு ஜீவன்களை வதைக்கற? சுபா வாழ்க்கைக்காக கவலைப்பட்டே அவளுக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்ச குழந்தையும் பிறக்கப் போறது. அதுக்காக சந்தோஷப்படு. எனக்காக அப்புறமா கவலைப்படலாம்.'' பாதிச் சாப்பாட்டில் கை உதறி எழுந்து போனான் சதீஷ்.

அம்மா கவலையாய் அவனைப் பார்த்தார்.

இரவு வழக்கம் போல் மாதங்கி தனக்குத் தனியே படுக்கை விரித்துப் படுத்தாள். தூக்கம் வராமல் கட்டிலில் படுத்திருந்த சதீஷ் மெல்ல திரும்பி அவளைப் பார்த்தான். கார் ஓட்ட, சமைக்க, வீட்டு வேலை செய்ய ஆட்கள் என்று படைசூழ ஒரு இளவரசியாய் வலியாய் வாழ்ந்தவள். பாவம், இங்கே எல்லா வேலைகளையும் செய்து கொண்டு தன் பாராமுகத்துக்கும் ஈடு கொடுத்து, அம்மாவின் புடுங்கலையும் சமாளித்து கஷ்டப்படுகிறாள். தன்னை மணப்பதில் ஏனிந்தப் பிடிவாதம்.

''மாதங்கி...'' கனிவாய் அழைத்தான். திரும்பிப் படுத்திருந்தவள் விருட்டென்று எழுந்து இவன் பக்கம் திரும்பி ''ம்?'' என்றாள்.

''உனக்கு எதுக்கு இந்த அவஸ்தை? என்னை ஏன் பிடிவாதமா கல்யாணம் பண்ணிக்கிட்டு தவிக்கணும்?''

அவள் மெல்லச் சிரித்தாள். ''காதல். இது தான் காதல்னு நினைக்கிறேன். உங்களுக்காக எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக்கலாம்னு

தோணுதே.''

''ஸாரி கார்.'' அவள் கண்களை அனாயாசமாய் மூடித் திறந்தான். ''என்னால் உன்னை தெருக்கலே முடியாது மாதங்கி. என்னைப் பொறுத்தவரை முதல் பார்வையிலே என் நண்பனின் மனைவியா பதிஞ்சி போயிட்டே. உன்னைப் பார்த்தாலே என் மனைவியா நினைக்க முடியலை.'' அவன் குரலில் உண்மையான ஆதங்கம் இருந்தது.

''என் மனசை உங்களை வச்சிட்டு, உங்க நண்பருக்கு உண்மையான மனைவியா என்னால வாழ்ந்திருக்க முடியாது. ஆனா, உங்க மனசை இதுவரை யாருக்கும் இடம் தரலை. அந்த இடம் நிச்சயம் ஒரு நாள் எனக்குக் கிடைக்கும். அது வரை என்ன சோதனை வந்தாலும் தாங்கிப்பேன். நீங்க அனாவஸ்யமா கவலைப்பட வேண்டாம்.''

''கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகப் போகுது, மாதங்கி. என் மனசால உன்னை தெருக்க முடியலையே. இனியும் அது முடியும்னு தோணலை.''

''பரவாயில்லை. தாம்பத்திய உறவு ஒன்னு தான் நல்ல கணவன் மனைவிக்கான அடையாளமா, சதீஷ்? ராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாதேவி இல்லறத்துல துறவறம் மேற்கொண்டு வாழலையா? தேவை ஏற்பட்டா எனக்கும் அப்படி வாழற வைராக்கியம் உண்டு. எம் மனச பக்குவப்பட்ட மனச. நான் வருத்தப்படறேனேனு நீங்க கவலைப்பட வேண்டாம்.''

அவளை நிமிர்ந்து பார்த்தான். முதல் முறையாய் அவள் மேல் அவனுக்கு மதிப்பு ஏற்பட்டது. ஏதோ காதல் என்று பிதற்றும் அறியாப் பெண் இவள் என்ற அவன் கணிப்பு ஆட்டம் கண்டது.

''ஆனா, ஒன்னு சதீஷ். என் விருப்பம் [illegible] தேர்ந்தெடுத்த வாழ்க்கை. நான் எப்படி வேண்டுமானாலும் வாழத்தயாரா இருக்கலாம். துறவைக் கூட நான் வரமா ஏத்கலாம். ஆனா, அதையே உங்களுக்கு தண்டனையா நான் தர விரும்ப மாட்டேன். ஒரு கால கட்டம் வரை பார்ப்பேன். உங்க மனச மாறாட்டி, நான் உங்க வாழ்க்கையிலிருந்து விலகிடுவேன். நீங்க யாரையாவது மணந்து சந்தோஷமா வாழலாம்.''

''உனக்கும் இது பொருந்தும் இல்லையா?''

''இல்லை'' என்றான் அழுத்தமாக.

கேலியாய் சிரித்தான். ''விதவைகள் மறுவாழ்வு பத்தி எல்லாம் பேசற. வாழாமலே கணவனைப் பிரிஞ்ச வேறொருவரை மணப்பது தப்பா?''

''தப்பில்லை. ஆனா மனசை உங்களை கமந்துகிட்டு வேறொருவரோடு வாழறது கஷ்டம். நீங்க வேர் பரவாத செடி. பிடுங்கி நல்ல மணல்ல நட்டு பராமரிச்சா வேர் பிடிச்சு கொப்பும் இலையுமா பரவிடுவீங்க. நான் ஏற்கெனவே மலர்ந்துட்ட பூ. பூவுக்கு ஒருமுறை தான் வாழ்க்கை - உ மீன் காதல் வாழ்க்கை.''

அவன் அசந்து போனான்.

''குட்நைட்'' அவன் திரும்பிப் படுத்தான்.

'மாதங்கி உன்னை நான் என் காதலியாவே சந்திச்சிருக்கக் கூடாதா?' நீண்ட பெருமூச்சு விட்டான். புரண்டு படுத்துத் தூங்கப் பார்த்தான்.

'இல்லை என்ற சொல்லை தாங்குவதென்றால்
இன்னும் இன்னும் எனக்கோர் நெஞ்சம் வேண்டும்
என்ன சொல்லப் போகிறாய்?...'

என்ன சொல்லப் போகிறேன்? இந்த வேதனைக்கு என்ன தான் முடிவு?

21

சுபாவின் சிநேகம் நன்றாக நடந்தது. மறுநாள் மாலை தோட்டத்தில் சதீஷ் உலவிக் கொண்டிருந்தான். கையில் காபியோடு நிதானமாய் நடந்து வந்தாள் சுபா. வயிற்றில் கலையோடு அவன் விந்தி விந்தி வந்தது சதீஷுக்கு பதைப்பைக் கொடுத்தது.

''ஹேய் சுபா, என்னடா இது? கூப்பிட்டாலா மாட்டேனா? இல்ல,'' மாதங்கிட்ட கொடுத்தனுப்பறது தானே? நீ ஏன் இப்படி...''

சுபா சிரித்தான். ''ஹை, ஹை... ஆசையப் பாரு. அண்ணி கையால தான் காபி குடிப்பீங்களோ? அண்ணி, அம்மா, நம்ம மாமியார் எல்லோரும் ஷாப்பிங் [illegible]

போயிருக்காங்க.''

சிமெண்ட் பெஞ்சில் அவளை உட்கார வைத்து தானும் அருகே உட்கார்ந்து கொண்டான்.

''சந்தோஷமா இருக்கியாடா?'' வாஞ்சையாய் அவன் தலையைக் கோதி கேட்டாள்.

அவன் மனப்பூர்வமாய் சிரித்து, ''நான் ரொம்ப நல்லா இருக்கேன் அண்ணா. அவர் என்னை உள்ளங்கையில வச்சுத் தாங்கறார். எனக்கு இப்படி ஒரு வாழ்வைக் கொடுத்த அண்ணிக்குத் தான் நான் நன்றி சொல்லணும். ஆமாம், அண்ணி உன்னை விரும்பி கல்யாணம் செஞ்சுகிட்டிருக்காங்க. நீ தான் எனக்கு முன்னாடி ஒரு மருமகனை பெத்துத் தருவேனு நினைச்சேன். என்ன அப்படி பார்க்கறே? அண்ணி உன்னை விரும்பின விஷயமெல்லாம் இவர் எனக்குச் சொல்லிட்டார்.''

வெட்கமாய் சிரிப்பது போல் முகம் திருப்பிக் கொண்டான் சதீஷ். அதிக நேரம் அவளை இக்கட்டில் மாட்ட விடாமல் உதவிக்கு வருவது போல் முரளி பைக்கில் வந்து இறங்கினான்.

''என்ன... அண்ணனும் தங்கச்சியும் என்ன கதை பேசிக்கிட்டு இருக்கீங்க?''

''ம், அண்ணனோட காதல் கதை.''

''அதுசரி, காதல் பறவைகள் கல்யாணத்துக்குப் பிறகு ஹனிமூன் கூட எங்கேயும் போகலை போலிருக்கு. அதான், மைசூருக்கு ரெண்டு டிக்கெட் புக் பண்ணிட்டேன். அங்கே ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல ரூம் புக் பண்ணிட்டேன். இன்னைக்கு ராத்திரியே நீங்களும் மதுவும் புறப்படறீங்க...''

''அட, எனக்கு லீவ் கிடையாது.''

''சனிக்கிழமை ஒரு நாள் லீவ் சொல்லுங்க. ஞாயிறு லீவ் தானே. இல்ல, நானே உங்க ஆபீசுக்கு போன் போடவா?''

''ஐயோ, வேண்டாம், வேண்டாம். விருந்தாளியை வீட்டை விட்டுத் துரத்த இப்படியும் வழி இருக்கா?''

மூவரும் சிரித்தார்கள்.

திருமணத்திற்குப் பின்- கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்து- கணவனுடன் தனியாய் பயணித்து தனியறையில் வாசம் செய்யும் முதல் அனுபவம். மாதங்கி சற்று மிதந்தாள்.

அறைக்குள் நுழைந்து முகம் கைகால் கழுவி பாலுக்குச் சொல்லி காத்திருந்த போது, அவன் கலகலவென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கறீங்க?''

''இல்ல, மனச ஒன்றினவங்க நூறு பேர் மத்தியில கூட அன்யோன்யத்தை உணர முடியும். நம்மை போல இருக்கறவங்களுக்கு தனியறை, தனிமைப் பயணமெல்லாம் அவசியமானு யோசிச்சேன். சிரிப்பு வந்தது.''

ஆனால், அவள் முகம் வாடியது. அவன் கவனித்து சட்டென்று பேச்சை மாற்றினான்.

''உங்க வீட்ல என் தங்கையை நல்லா கவனிச்சுக்கறாங்க. உங்க அண்ணன் அவ மேல உசிரையே வச்சிருக்கார்.''

இளம்பும் முன் முரளியிடம் சதீஷ் இதே போல் பேசினான்- நன்றி தெரிவித்தான்.

முரளி சிரித்தான். ''என் தங்கை காதல் நிறைவேறணும்னு ஒரு கட்டாயத்துக்காகத்தான் உங்க தங்கையை மணக்க இருந்தேன். ஆனா, கல்யாணம்னு பேசினவுடன் மனம் விரும்பித் தான் கபாவை ஏத்துக்க சம்மதிச்சேன். என்னை நம்பி வரும் பெண்ணை நான் கண்கலங்க வைக்கக் கூடாது இல்லையா? விரும்பின வாழ்க்கை கிடைக்காத போது, கிடைக்கற வாழ்வை விரும்பறது புத்திசாலித்தனம் மட்டும் இல்லை, சந்தோஷத்துக்கான வழியும் கூட. கபா எனக்கு ஒரு நல்ல மனைவி. அவளை அன்பா கவனிக்க வேண்டியது என் கடமை. உங்க நன்றியெல்லாம் வேண்டாமே, ப்ளீஸ். என் தங்கையும் நீங்களும் சந்தோஷமா வாழ்க்கை நடத்தறதுக்கு நான் நன்றி சொல்றேனா என்ன?''

சதீஷுக்கு செவிட்டில் அறைபட்டது போல் இருந்தது.

இங்கே தனியறையில் அவனும் மாதங்கியும் எதிரும் புதிருமாய், உட்கார்ந்திருக்கிறார்கள். முரளியைப் போல் கூட மனம் மாறி மாதங்கியை ஏற்க தன்னால் முடியவில்லையே. பால் வந்தவுடன் குடித்தார்கள்.

''மாதங்கி, ரொம்பத் தலை வலிக்குது. இப்படியே காத்தாட நடந்து போய் மாத்திரை வாங்கி வரேன். நீ படுத்து ரெஸ்ட் எடு. கதவை தாழ் போட்டுக்க.''

லிப்ட்டில் இறங்கி காரிடாரைக் கடந்து படிகளில் இறங்கியபோது எதிரே ஒருவர் மேல் மோதிக் கொள்ள, சட்டென்று விலகி ''சாரி''என்று நிமிர்ந்தவன் சந்தோஷ அதிர்ச்சிக்கு உள்ளானான்.

''ஸ்ரீதர்'' என்று ஆச்சரியமாய் அவன் கரம் பற்ற, ஸ்ரீதரும் ''சதீஷ்'' என்று இவனை தழுவிக் கொண்டான்.

''எப்படா ஸ்டேட்ஸ்லயிருந்து வந்தே?''

''ரெண்டு நாள் ஆகுதுடா. நேரா ஒரு மெடிக்கல் கான்ப்ரன்ஸ்லு பெங்களூர் வந்துட்டேன். இன்னைக்கு இங்கே ரெஸ்ட் எடுத்துட்டு, நாளை சென்னை இளம்பறேன். அப்புறம்? நீ எப்படி இங்கே? உன் திருமண வாழ்க்கை எப்படி இருக்கு? உன் மணவாழ்க்கையில சஞ்சலம் ஏற்படுத்தக் கூடாதுனு தான் நான் அங்கேயிருந்து எந்த தொடர்பும் உன்னோட வச்சுக்கலை''

அதுவரை மலர்ந்திருந்த சதீஷின் முகம் சட்டென்று வாடியது. அவர்கள் மேலே பேசும் முன், ''டியர்''என்று அழைத்த படி ஒரு வடஇந்தியப் பெண் ஸ்ரீதரின் அருகே வந்தாள்.

''ஒ, சோனா...'' என்ற ஸ்ரீதர், சதீஷின் பக்கம் திரும்பி, ''சதீஷ், இது சோனா. என் மனைவி. சோனா, ஏ மேரா தோஸ்த்... சதீஷ்'' என்று அறிமுகப்படுத்தினான்.

''நீ ரூமுக்குப் போ சோனா. நான் என் நண்பனோட கொஞ்சம் வாக் போயிட்டு வரேன்'' என்று அவளை அனுப்பிவிட்டு இவனோடு இணையாக நடந்தான்.

''சாரிடா. அவ அமெரிக்காவிலேயே பிறந்து, வளர்ந்தவ. காதலிச்சோம். இந்தியா வர்றதுக்குள்ள முடிக்கணும்னு அவசரமா கல்யாணம் செஞ்சுகிட்டதால, யாருக்குமே இங்கே... உனக்குக் கூட இன்பார்ம் செய்ய முடியலை. ரொம்ப சாரிடா.''

சதீஷுக்குப் பேச்சே வரவில்லை.

''இது... இதுவும் காதல்... கல்யாணமா?''

ஸ்ரீதர் புரிந்து கொண்டது போல் பார்த்தான்.

''எஸ்.பட்... மரம் துளிர்க்கறது இயற்கை, சதீஷ். முதல் காதல் மறக்க முடியாததுனு சொல்வாங்க. மே பீ ட்ரூ. ஆனா, என் கேஸ்ல, முதல் காதலை சுத்தமா மனசை விட்டு துடைச்சுட்டேன். ஏன்னா, நீ- என் நண்பன்- அவ கணவன்.''

நவராத்திரிக்கு கொண்டைக் கடலையுடன் வெள்ளைக் கடலையும், பச்சைப் பட்டாணியுடன் வெள்ளைப் பட்டாணியையும் கலந்து செய்து கொடுங்கள். மாறுதலாகவும், கலையாகவும் இருக்கும்.

கொலுவில் ஸ்டிக்கர் கோலங்கள் பல்வேறு டிசைன்களில் கிடைப்பதை வாங்கி கொலு பக்கவாட்டுப்படிகளில் ஒட்டி வைத்தால் கலர்புல்லாக இருக்கும்.

-விசாலாட்சி, வேலூர்.

நவராத்திரிக்கு தீப கோலங்கள் போடும் போது கடலை மாக்கோலத்தில் கட்டு லைன் இட்டு ரவுண்டில் காவி இட்டு உலரும் முன் அதில் சமிக்கி பொடி அல்லது ஜிகினாப்பொடியைத் தூவினால் எரியும் தீபமாகவே கோலம் ஜொலிக்கும்.

கொலு பொம்மைகளுக்கு மிகச் சாதாரண உடை வாங்கி அதில் கண்ணைக் கவரும் கலர் லேஸ், சமிக்கி பட்டன், கண்ணாடி வேலை என்று நீங்களே செய்து பொம்மைக்கு மாட்டி விடலாம். மேற்கொண்ட அலங்காரப் பொருட்கள் பத்து ரூபாயைத் தாண்டாது.

-பொன்னி, வேலூர்-1.

''அப்போ... மாதங்கிக்கு... உன் மனசுல?...''

''இடம்? உண்டே! என் நண்பனின் மனைவி! ஒரு உயர்ந்தானம்.''

'இனி மாதங்கி ஸ்ரீதருடைய காதலி அல்ல. ஸ்ரீதரின் நண்பனின் மனைவி... நண்பனின் மனைவி' சதீஷ் மனதில் சொல்லிக் கொண்டான்.

மேகம் விலகி நிலா முழுமையாய் வெளிப்பட்டது. அதுவரை இருட்டில் கரும் பூதமாய் தெரிந்த நிலா, வெளிச்சத்தில் பூக்களைத் தாங்கிய அழகிய மரமாய்த் தெரிந்தது.

அவன் மனதிலும் மேகம் விலகியது.

தலைவலி மாத்திரையோடு கணவன் வந்து நிற்பான் என்று எதிர்பார்த்த மாதங்கி, கணவன் மல்லிகைப்பூவோடு வருவான் என்று எதிர்பார்க்கவில்லை.

அவளிடம் பூவை நீட்டிய சதீஷ், ''எங்க அம்மா ஆசையை நிறைவேத்தலாம்னு முடிவு பண்ணிட்டேன்'' என்ற படி அவளை அள்ளி எடுத்து படுக்கையில் போட்டு, அருகே புரண்டான்.

கணவனின் மனமாற்றத்திற்கான காரணம் புரியாத மாதங்கி, அவன் அன்புப்பிடியில் நிக்கு முக்காடினாள்.

அதற்கு மேல் அங்கே நிற்க வெட்கிய நிலவு மட்டும் மீண்டும் மேகத்துக்குள் ஒளிந்து கொண்டது.

(★★ முற்றும் ★★)